உ

சிவமயம்.

# திருப்பரங்கிரிப் புராணவசனம்.

இஃது

திருநெல்வேலிச்சில்லா சாத்தூர்த்தாலுகா

சிவகாசி ம-ா-ா-ஸ்ரீ

அ. சு. வேலாயுதம்பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

சேற்றூர்ச் சமஸ்தான-வித்துவான்

ஸ்ரீ ரா. அருணாசலக்கவிராயரால்

ஸ்ரீ. நிரம்ப அழகியதேசிகரவர்கள்

செய்த

செய்யுளுக்கிணங்கச்செய்யப்பெற்று

ஷை வேலாயுதம்பிள்ளையவர்கள்

பொருளுதவிகொண்டு

சென்னை

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

விகாரி௵ கார்த்திகைமீ

இதன்விலை அணா

உ

சிவமயம்.

# முகவுரை.

பாண்டிவளநாட்டிலே இராசதானியாகிய மதுரைமாநகரத்துக்குத் தென்மேற்கிலே ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளாலும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் பாடப் பெற்றதும், மதுரைக் கடைச்சங்கத்துத் தமிழ்த்தலைமைப் புலவராகிய நக்கீரதேவர் அருளிச்செய்த 'திருமுருகாற்றுப்படை' யென்னும் பிரபந்தத்துள் முதற்கட் கூறப்பட்டதுமாகிய திருப்பரங்கிரியி லெழுந்தருளியிருக்கின்ற குமாரக் கடவுள்மீது திருநெல்வேலிச் சில்லாச் சாத்தூர்த் தாலுகாச் சிந்தப்புலியென்னுங் கிராமத்தில் வசிக்குந் தொண்டைமண்டல வேளாளர் குலதிலகரும், சங்கரலிங்க முதலியாரவர்கள் குமாரரும், சிவபத்தி குருபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவருமாகிய வீரப்பமுதலியாரவர்கள், அன்பின் மிகுதியினாலே பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமொன்று பாடுகவென்று அடியேனை வேண்டுகோள் செய்தார்கள். அவ் வேண்டுகோளுக்கிசைந்து அவ்வாறே அடியேன் சிற்றறிவிற் கெட்டிய மட்டுந் திருவருளைத் துணையாகக்கொண்டு பாடிமுடித்த பிள்ளைத் தமிழிலே சில சில பாடல்களைத் தற்காலங் கொழும்புவாசியாயிருக்கும், நாட்டுக்கோட்டை வணிகர் குலமணி போல்பவரும், சிவநேசரும், சிவபுண்ணியமே திரவியமெனத் தெளிந்த சித்தமுடையவரும், வள்ளற்றன்மை யுடையவ

ரும, ஆகிய லெ. அ. ரு. ரா. ம. மெய்யப்ப செட்டியாரவா கள் மேற்சொல்லிய முதலியாரவர்களாற் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்து தக்கவாறு பொருளுதவிசெய்து திருப்பரங் கிரிக் குமாரக்கடவுள் சந்நிதியிலே அவரது திருவருளாலே பிள்ளைத்தமிழ் மாலையாகிய பிரபந்தத்தை அரங்கேற்றுவித்தார்கள். அதன்மேல் அப்பிள்ளைத்தமிழ் முழுதும் வாசித்துணர்ந்து மகிழ்ந்து இதையும், இதனுடன் பகழிக்கூத்தர்பாடிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழையும், பலபிரதிகளைக்கொண்டு பிழையறப்பரிசோதித்து, அச்சியற்றவேண்டுமென்னுங் கருத்தினையுடையவராய், சேதுபுராணம் பாடியருளிய நிரம்பவழகிய தேசிகர்செய்த திருப்பரங்கிரிப் புராணத்துக்கும், வென்றிமாலைக் கவிராசர்செய்த திருச்செந்தூர்த்தலபுராணத்துக்கும் இணங்க மிகவும் எளிய நடையில் கற்றாருக்குங் கல்லாதாருக்கும் பயன்படுமாறு வசனமெழுதுவித்தி மேற்குறித்த பிள்ளைத்தமிழ்களுடனே முதலிலே சேர்த்து அச்சிற்பதிப்பித்து வெளியேற்ற நினைத்து காரகாத்த வேளாளர்குலத்திலே பிரசித்திபெற்ற * மகாவித்துவான் சங்கரமூர்த்திக் கவிராயரவர்கள் பௌத்திரரும், (அ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் புத்திரரும்) என்னிடங் கல்வி கற்றவரும், எனக்கு முக்கிய நண்பரும், சிவபத்தியைவிளைவிக்கும் கல்வி யறிவொழுக்கமுதலிய நற்குண நற்செய்கை

---

* சங்கரமூர்த்திக் கவிராயரவர்கள் திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானசுவாமிகள் மாணாக்கரிலொருவர். இவரது சரித்திரம் இவர்பாடிய சேற்றூர்ச் சமஸ்தானம் பள்ளுப் பிரபந்தத்திலே தெளிவுறவிளங்கும்.

களிலே நிறைந்தவரும், ஆகிய சிவகாசிக் காசுக்கடை வேலாயுதம் பிள்ளையவர்கள் தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்திப் பலதரம் வேண்டிக்கொண்டதனிமித்தம், அவ்வேண்டுகோட்படியே வசனமெழுதி மேற்குறித்த பிள்ளைத்தமிழ் இரண்டும் புராணவசனங்கள் இரண்டும் அச்சிற்பதிப்பித்துத் திருப்பரங்கிரிப் புராணவசனமும் பிள்ளைத்தமிழும் ஒரு கட்டிடமாகவும் திருச்செந்தூர்த் தலபுராணவசனமும் பிள்ளைத்தமிழும் பிறிதொரு கட்டிடமாகவுங்கட்டி வெளிப்படுத்தினேன். இங்ஙனம் வெளிப்படுத்துதற்கு வேண்டுமட்டுந் திரவிய சகாயமுஞ்செய்த பரோபகார தரும சிந்தனையுள்ள மேற்படி வேலாயுதம் பிள்ளையவர்களுக்குக் குமாரக்கடவுள் இடையறாத திருவருள்செய்ய வேண்டுமென்று சதாகாலமும் பிரார்த்தனை செய்துவருகின்றேன்.

இங்ஙனம்.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்,
மு. ரா. அருணாசலக்கவிராயன்.

# நிரம்ப அழகியதேசிகர்.

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே சிறந்து விளங்கும் தென்னாடுகளுளொன்றாகிய சோழமண்டலத்திலே வேதாரணிய க்ஷேத்திரத்திலே இற்றைக்கு நானூறு வருஷங்களுக்குமுன் திருக்கூட்டத்தார் குலத்திலே இவர் அவதாரஞ் செய்தார். வடமொழி தென்மொழி யென்னும் இருபாஷைகளினும் மிகவல்லராய இவர் சைவாகமங்களிலே சொல்லப்பட்ட தீக்ஷைவகைகளும் ஆசாரியாபிஷேகமும் பெற்றுப் பிரபல சைவாசாரியராய் விளங்கி எண்ணில்லாத சைவர்களுக்கு அநுக்கிரகித்து வந்ததாகத் தெரியப்படுகின்றது. இவர், பக்குவர்கள் உண்மையறிந்து வீடுபெறும்பொருட்டுச் சிவஞானசித்தியார், திருவருட்பயன் என்னும் சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு உரையிட்டருளினர். அன்றியும் காவிய மூலமாக ஞானஞ் செவியுறுத்த வெண்ணித் தலைமைபாடு பெற்ற புராணங்களுளொன்றாய சேதுபுராணம் பாடியருளினார். அதனோடமையாது திருப்பரங்கிரி முருகக்கடவுளது சரித்திரத்தைத் திவ்வியமான நடையில் திருப்பரங்கிரிப் புராணமென்று செய்தருளினார். இவர் உரைகள் இவரது குசாக்கிரமதியினையும் பரந்த சாஸ்திர ஆராய்ச்சியினையும் விளக்குகின்றன. புராணங்கள் பக்திரசம் பொலியச் செய்யுள் செய்யுந் திறத்தையும், கற்பனா சாமர்த்தியங்கள் இவர் வருந்தாமற் பெற்றிருந்தனரென்பதையும் தெரிவிக்கின்றன.

திருச்சிற்றம்பலம்.

# தேவாரம்.

## திருஞானசம்பந்த சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது.

### திருப்பரங்குன்றம் - பண் - குறிஞ்சி.

நீடலர் சோதி வெண்பிறை யோடு நிறைகொன்றைச்
சூடல னந்திச் சுடரெரி யேந்திச் சுடுகானி
லாடல னஞ்சொ லணியிழை யாளை யொருபாகம்
பாடலன் மேய நன்னகர் போலும் பரங்குன்றே. (௧)

அங்கமோ ராறு மருமறை நான்கு மருள்செய்து
பொங்குவெண் ணூலும் பொடியணி மார்பிற் பொலிவித்துத்
திங்களும் பாம்புந் திகழ்சடை வைத்தோர் தேன்மொழி
பங்கினன் மேய நன்னகர் போலும் பரங்குன்றே. (௨)

நீரிடங் கொண்ட நிமிர்சடை தன்மே னிறைகொன்றைச்
சீரிடங் கொண்ட வெம்மிறை போலுஞ் சேய்தாய
வோருடம் புள்ளே யுமையொரு பாக முடனாகிப்
பாரிடம் பாட வினிதுறை கோயில் பரங்குன்றே. (௩)

வளர்பூங் கோங்க மாதவி யோடு மல்லிகைக்
குளிர்பூஞ் சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றந்
தளிர்போன் மேனித் தையனல் லாளோ டொருபாகம்
நளிர்பூங் கொன்றை சூடினன் மேய நகர்தானே. (௪)

பொன்னியல் கொன்றைப் பொறிகிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதி யாகிய வீசன் றொன்மறை
பன்னிய பாட லாடலன் மேய பரங்குன்றை
யுன்னிய சிந்தை யுடையவர்க் கில்லை யுறுநோயே. (௫)

கடைநெடு மாடக் கடியரண் மூன்றுங் கனன்மூழ்கத்
தொடைநவில் கின்ற வில்லின னந்திச் சுடுகானிற்
புடைநவில் பூதம் பாடநின் றாடும் பொருசூலப்
படைநவில் வான்ற னன்னகர் போலும் பரங்குன்றே. (௬)

அயிலுடை வேலோ ரனல்புகு கையி னம்பொன்று
லெயில்பட வெய்த வெம்மிறை மேய விடம்போலு
மயில்பெடை புல்கி மாநட மாடும் வளர்சோலை
பயில்பெடை வண்டு பாட லறாத பரங்குன்றே. (எ)

மைத்தகு மேனி வாளரக் கன்றன் மகுடங்கள்
பத்தின திண்டோ ளிருபதுஞ் செற்றான் பரங்குன்றைச்
சித்தம தொன்றிச் செய்கழ லுன்னிச் சிவனென்று
நித்தலு மேத்தத் தொல்வினை நம்மே னில்லாவே. (அ)

முந்திய வையந் தாவிய மாலு மொய்யொளி
யுந்தியில் வந்திங் கருமறை யீந்த வுரவோனுஞ்
சிந்தையி னாலுந் தெரிவரி தாகித் திகழ்சோதி
பந்திய லங்கை மங்கையோர் பங்கன் பரங்குன்றே. (௯)

குண்டாய் முற்றுந் திரிவார் கூறை மெய்போர்த்து
மிண்டாய் மிண்டர் பேசிய பேச்சு மெய்யல்ல
பண்டா னீழன் மேவிய வீசன் பரங்குன்றைத்
தொண்டா யேத்தத் தொல்வினை நம்மே னில்லாவே. (௧0)

தடமலி பொய்கைச் சண்பைமன் ஞான சம்பந்தன்
படமலி நாக மரைக்கசைத் தான்றன் பரங்குன்றைத்
தொடைமலி பாடல் பத்தும் வல்லார்தந் துயர்போகி
விடமலி கண்ட னருள்பெறு தன்மை மிகுவோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

# தேவாரம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டது.

---

### திருப்பரங்குன்றம் - பண் - இந்தளம்.

கோத்திட்டையுங் கோவலுங்கோயில்கொண்டிருமைக்கொண்டு
ழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச் சேர்த்திட்டுக்குத்தித்தெருவே திரியு
ஞ்சில்பூதமுநீருந்திசைதிசையன; சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொ

முற்றம்மரைக்கோவணத்தோடொருதோல்புடைசூழ்ந்,தார்த்திட்டதும்
பாம்புகைக்கொண்டதும்பாம்படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௧)

முண்டந்தரித்தீர்முதுகாடுறைவீர்முழுநீறுமெய்பூசுதிர்மூக்கப்பா
மபைச, கண்டத்திலுந்தோளிலுங்கட்டிவைத்தீர்கடலைக்கடைந்திட்ட
தோர்நஞ்சையுண்டீர், பிண்டஞ்சுமந்தும்மொடுங்கூடமாட்டோம் பெ
ரியாரொடுநட்பினிதென்றிருந்து, மண்டங்கடந்தப்புறத்தும்மிருந்தீ
ரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௨)

மூடாய்முயலகன்மூக்கப்பாம்புமுடைநாறியவெண்டலைமொய்த்
தபல்பேய், பாடாவருபூதங்கள்வாய்ப்புலித்தோல பரிசொன்றறியாதன
பாரிடங்க, ளோடாமலர்கழற்காலுறையுந்துன்னொருக்குந் துணைமாம
ணிநாகமரைக்கசைத்தொன், ஞடாதனவேசெய்திரேம்பெருமானடி
கேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௩)

மஞ்சுண்டமாலைமதிசூடுசென்னிமலையான் மடந்தைமணவாளந
மபி, பஞ்சுண்டவல்குற்பணைமென்முலையாளொடுநீருமமொன்றாயிருத்
தலொழியீர், நஞ்சுண்டுதேவர்க்கமுதங்கொடுத்த நலமொன்றறியோ
முங்கைநாகமதற், கஞ்சுண்டுபடமதுபோகவிடீரடிகேளுமக்காட்செய
வஞ்சுதுமே. (௪)

பொல்லாப்புறங்காட்டகத்தாட்டொழியீர்புலால்வாயனபேயொ
டுபூச்சொழியீ, ரெல்லாமறிவீரிதுவேயறியீரென்றிரங்குவேனெல்லியு
நண்பகலுங், கல்லானிழற்கீழொருநாள்கண்டதுங்கடம்பூர்க்கரக்கோ-
யிலின்முன்கண்டது, மல்லாலவிரகொன்றிலமெம்பெருமானடிகேளு
மக்காட்செயவஞ்சுதுமே. (௫)

தெனாத்தெனாத்தெத்தெனவென் றுபாடிச் சில்பூதமுநீருந்
திசைதிசையன, பன்னுனமறைபாடுதிபாசூருளீர்படம்பக்கங்கொட்
டுந்திருவொற்றியூரீர், பண்ணார்மொழியாளையோர்பங்குடையீர் படுகா
ட்டகத்தென்றுமோர்பற்றொழியீ, ரண்ணுமலையேனென்றீராரூருளீ
ரடியோமுமக்காட்செயவஞ்சுதுமே. (௬)

சிங்கத்துரிமூடுதிர்தேவர்கணந்தொழுகிற்றீர்பெற்றமுகந் தேறி
தீர், பங்கம்பலபேசிடப்பாடுநொண்டூர்தமைப்பற்றிக்கொண்டாண்டு
விட்டுங்கில்லீர், துங்கைச்சடையீரருங்கருத்தறியோங்கண்மூன்றுடை

யீர்கண்ணேயாயிருந்தா, லங்கத்தூறுநோய்களைந்தாளவல்லீரடிகேளு
மக்காட்செயவஞ்சுதுமே. (௭)

பிணிவண்ணத்தவல்வினைதீர்த்தருளீர் பெருங்காட்டகத்துப்பெ
ரும்பேயுநீரும், துணிவண்ணத்தின்மேலுமோர்தோலுடுத்துச்சுற்றுநா
கத்தராய்ச்சுண்ணநீறுபூசி, மணிவண்ணத்தின்மேலுமோர்வண்ணத்த
ராய்மற்றுமற்றும்பல்பலவண்ணத்தரா, மணிவண்ணத்தராய்நிற்றிரெ
ம்பெருமானடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௮)

கோளாளியகுஞ்சரங்கோளிழைத்தீர் மலையின்றலையல்லதுகோயி
லுகொள்ளீர், வேளாளியகாமனைவெந்தழியவிழித்தீரதுவன்றியும்வேய்
புரையுந், தோளாளுமைநங்கையோர்பங்குடையீருடுக்கூறையுஞ்சோறு
ந்தந்தாளகில்லீ, ராளாளியவேகிற்றிரெமபெருமானடிகேளுமக் காட்
செயவஞ்சுதுமே. (௯)

பாரோடுவிண்ணும்பகலுமாகிப்பனிமால்வரையாகிப்பரவையாகி,
நீரோடுதீயுநெடுங்காற்றுமாகிநெடுவெள்ளிடையாகிநிலனுமாகித், தே
ரோடவரையெடுத்தவரக்கன்சிரம்பத்திறுத்தீருமசெய்கையெல்லா,மா
ரோடுங்கூடவடிகேளிதுவென்னடியோமுமக்காட்செயவஞ்சுதுமே.

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர்பெருமானையாரூரன
ஞ்சி, முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னேமொழிந்தாறுமோர்நான்
குமோரொன்றினையும், படியாயிவைகற்றுவல்லவடியார்பரங்குன்றமே
யபரமனடிக்கே, குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்குலவேந்தரா
ய்விண்முழுதாள்பவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# திருப்பரங்கிரிப்புராணவசனம்.

## முதலாவது பாயிரச்சருக்கம்.

### விநாயகர்.

கந்தத்தேனிறைந்த திருவடித்தாமரை நிழலிற் தம்மை வந்து கலந்தவர்க்குப் பிறவிவெப்பந் தணியும்படி தந்தருளும் யானைமுக விநாயகக் கடவுளை முதலாவது வந்தனைசெய்து, அதன்மேல்

### பரங்குன்றீசுரர்.

உலகமெல்லாம் உள்ளும் புறம்பும் வியாபித்துச் சோதிமயமாகி, இன்பமுந் துன்பமுங் கடந்து, நின்மல சொரூபியாய்த் திருப்பரங்குன்றத்தி லெழுந்தருளி யிருக்கும் சிவபிரானையும்;

### சுப்பிரமணியர்.

பிரமதேவன் வேதவிதிப்படி கிரியை செய்ய, சூரிய சந்திரர்கள் இரத்நதீபங்களெடுத்து நிற்க, சிவபிரானும் உமாதேவியுங் கண்டு கண்களிகூர, தேவரெல்லாம் [illegible] புடைசூழ இந்திரன் தமது திருக்கரத்திலே தாரை வார்க்க, திருப்பரங்குன்றத்திலே தெய்வயானையம்மையை விவாகஞ் செய்தருளிய சுப்பிரமணிய மூர்த்தியையும்;

## ஆவுடைநாயகி.

கருணைவெள்ளம் மடைதிறந்த அருவிபோலப் பொழியுங் கண்களையும், கிளியைப்போல மழலை யமுதம பெருகப பேசும் வார்த்தையினையும், வேதங்களெல்லா மோலமிட்டுத் தேடியுங் காணாமல் அப்புறமநின்ற திருவடிகளையு முடையளாய், பொன்னங் கொடிபோலப பார்க்குந்தோறும் அழகு விளங்கத் திருப்பரங்கிரியி லெழுந்தருளி யிருக்கின்ற ஆவுடைநாயகி யம்மையையும்;

## கற்பகவிநாயகர்.

வஞ்சகத்திலே பொருந்தாதவரும், திரண்ட துதிக்கையினையுடையவரும், தம்மை வணங்காதவ ருள்ளத்திலே யழுகிய திருவடிகளைப் பதியாதவரும, வேதங்களைச் சொல்லுந் தொங்கிய வாயினையுடையவரும, எல்லாருக்கும பிதாவாயுள்ளவரும், அவுணர்களுக்குப பயப்படாதவரும், சிரசிலே கங்கையைத் தரித்தவரும, யாதொரு குற்றமுமில்லாதவரும், செவ்வையாகிய சொற்களையுடைய வேதங்களுக்கு மெட்டாதவரும் ஆகிய திருப்பரங்கிரியி லெழுந்தருளி யிருக்குங் கற்பகவிநாயகக் கடவுளையும்;

## குமாரக்கடவுள்.

உலகமெல்லாந் துதிக்க யாங்கள் இச்சித்தபொருளை யருளிச்செய்பவரும், கடப்பமாலை யணிந்த மார்பினையுடையவரும், வண்டுகளிசைபாடுகின்ற சோலைகள் சூழ்ந்த பழனியம்பதியில் வாசஞ்செய்யும் பரிசுத்தருமானவரும், மகரமீன்களை

யுடைய சமுத்திரத்திலே வேலாயுதத்தை யேவிய தொழிலை யுடையவரும ஆகிய் குமாரக்கடவுளையும்;

தெய்வயானையம்மை.

கச்சணிந்த முலைகளென்னுங் கொம்புகளாலே கூரிய வேலாயுதத்தையேந்திய குமாரக்கடவுளது பன்னிரண்டு புயங்களாகிய மலைகளிற் பாய்ந்து, அங்கங்கேயுள்ள கடப்பமாலையைச் சிதறி, புணர்ச்சியாகிய சமுத்திரத்திலே மூழ்கி, அவருடைய கண்களாகிய வண்டுகளுக்கு விருந்தாகத் தனது கண்களினின்றுங் கருணையாகிய தேனைச்சொரிந்து, எங்களுடைய தீவினைகளைக் கெடுத்துத் திருப்பரங்கிரியி லெழுந்தருளி யிருக்குந தெய்வயானை யம்மையையும்;

வள்ளிநாயகியம்மை.

அழகு தங்கிய மானிடத்திலே முளைத்து, வேடர் மனையிலே பதிந்து, சோதிமயமா யலங்காரம் பெறத்தழைத்து, குமாரக்கடவுளதுபுயமாகிய கொழுகொம்பிலே படர்ந்து, கைலாசமலைபோலு முயர்ந்து விளங்கும் புகழாகிய பூவைப் பூத்து, எங்கள் வினையாகிய காய்களைக் காய்த்து, அழகாகிய பழம்பழுத்து, தரிசித்தவர்க்குக் கருணையாகிய தேனைப்பொழிந்து வணக்கங் கொண்ட வள்ளி யென்னும் பூங்கொடியையும்;

பவளக்கனிவாய்ப்பெருமாள்.

பூருவ மொருகா லரியதவஞ் செய்துகொண் டிருந்த முனிவருக்குக் காட்சிகொடுப்பதை நினைத்து ... வராகாவதாரத்துடன் நரசிங்க அவதாரமுமெடுத்து ...

மேல் தனக்குத்தானே சமமாகிய இலக்குமிசகிதராய்,திருப் பரங்கிரியில் குமாரக்கடவுள் தெய்வயானையம்மையை விவா கஞ்செய்ய வருவது தெரிந்து அங்கே அந்த மணக்கோலக் தரிசிக்கும்பொருட்டு வந்திருந்த ட[illegible]கனிவாய்ப் பெருமா ளையும்;

## இலக்குமி.

இரண்டிடத்தும் முனிவர் முதலானோர்களெல்லாந் திரண்டு சேவித்து நிற்ப வரங்கொடுத்தருளுங் கொடிபோல் பவளாய் கூரிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுளது திருமணக்கோலக் காட்சியின் அழகை இரண்டு விழிக்கும் அமுதமாக உண்ணத் திருப்பரங்கிரியில் வந்திருந்த, இலக் குமிதேவியையும;

## ஆதிபுவனேசுவரி.

வாசனைவீசும் பசுங்களபச் சேறுமுழுகுந் திரண்டமுலை களையுடைய மார்பினையும், நிறைந்த கருணை கசிந்து கசிந் தூற்றுகின்ற கடைக்கண்களையும,இருபக்கமும் பெரியதவசி கள் கரங்குவித்து வணங்கு வளருமியல்பினையும், உடையவ ளாய்த் திருப்பரங்கிரியில் வீற்றிருந்தருளும் ஆதிபுவனேசு வரியையும்;

## துர்க்காதேவி.

[illegible]ங்கிரியைச்சேர்ந்து, அரியதவஞ் செய்து, [illegible] மையுடைத்தவளும், உலகத்திலே யுயர்ந்த வலிமைபெற்ற [illegible] சங்கரித்து அவன் சிரத்திலே மிதித்து நின்ற [illegible] பாதத்தையுடையவளும், விசேடமாக [illegible]

## பாயிரச்சருக்கம்.

ஸ்ரீ குமாரக்கடவுளது திருமணக்கோலக் காட்சி தரிசித்திருந்த குணமுடையவரும், சங்கு சக்கரதாரியும் ஆகிய துர்க்காதேவியையும்;

### நவவீரர்கள்.

உமாதேவியார் திருவடித்தாமரையிலே யணிந்த பாதசரங்களினின்றும் உதிர்ந்த நவரத்நங்களிற் பிறந்தவரும், ஒப்பில்லாத சூரபன்மனை யவன் கிளையோடுமாளும்படி சண்டை செய்த புயத்தை யுடையவரும், முருகக்கடவுளது திருவடி நீழலைப் பிரியாதிருப்பவரும் ஆகிய நவவீரர்களையும்;

### உக்கிரமூர்த்தி, அண்டாபரணர்.

புகழையே ஆபரணமாகப் புனைந்து, திருப்பரங்கிரி வேலாயுதமூர்த்திக்குக் கொடிய பிழைகள் செய்கின்றவரை எல்லாருங்காண இருதுண்டமாக வெட்டி யெறியுங் கோரமுள்ள உக்கிரன் என்னும் பூதவீரரையும்; எல்லா அண்டங்களையுமெடுத்து முத்தாரமாக மார்பிலே யணியும் அண்டாபரணரென்னும் பெயரையுடைய தகுதி பெற்ற பூதவீரரையும்;

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

குற்றமில்லாத கீர்த்தியினையுடைய சீகாழியில் அவதரித்த தலைவரும், பார்வதி தேவியார்ப் கிண்ணத்திலே கறந்து கொடுக்கப்பட்ட ஞானப்பாலையுண்டவரும், மூன்றாம்பிறைச் சந்திரனைத் தரித்த சிவபிரான் திருவருளால் அ[illegible]ன்கு கலைகளையும் ஓதாதுணர்ந்தவரும் ஆகிய சம்பந்த[illegible]மூர்த்திசுவாமிகளையும்;

# திருப்பரங்கிரிப்புராணவசனம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

சமணர்களாலிடப்பட்ட நீற்றறை குளிரும்படி தமது திருமேனியிலே விபூதியைத் தரித்திருந்தவரும், சமுத்திரத்திலே யாதொரு இடையூறுமின்றிக் கல்லின்மேலே மிதந்து வந்தவரும், கங்காநதியைச் சூடிய சிவபிரானை நன்மார்க்கத்தை யருளிச்செய்யென்று நமச்சிவாயப் பதிகம்பாடினவரும் ஆகிய திருநாவுக்கரசு சுவாமிகளையும்;

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

வலக்கரத்திலே மழுவாயுதத்தைத்தரித்த சிவபிரான், பிரமன் விஷ்ணு அறியப்படாத தமது முடியும் அடியும் பரவை நாச்சியார் வாயிற்படிகள் காண அவளிடம் பிராமண வடிவங்கொண்டு தூதுபோய் வரும்படி தமிழ் வேதமாகிய பதிகம் பாடியருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையும்,

## மாணிக்கவாசகசுவாமிகள்.

கங்காநதியைத் தரித்த சடைமுடிமேலே சோமசுந்தரக் கடவுள் மண்சுமை யெடுக்கவும், பாண்டியன் கைப் பிரம்பினாலே அவரது முதுகின்மேலே யோரடிபடவும் திருவாசகம்பாடி, அவரது திருவடிகளிரண்டையும் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளையும்;

## அறுபத்துமூன்றுநாயன்மார்முதலியசிவனடியார்கள்.

[illegible] உலகத்திலே சிறந்த அறுபத்துமூன்று நாயன்மாருடன் மற்றைச் சிவனடியார்களுடைய திருவடிகளையும் வணங்கி, குணமிகுந்த முருகக்கடவுளது பூசைசெய்கின்ற [illegible] சிவப்பிராமணர்களுடைய பாதங்களையும் வணங்கித்

துதித்து, யாவரு மெண்ணுகின்ற கீர்த்தி பொருந்திய சிற்கந்த மலையென்னுந் திருப்பரங்கிரியின் மான்மியமாகிய சரித்திரத்தை யெல்லாருங் கேள்வியுற்றுப் பெருவாழ்வை யடையத் தமிழிலே யாம் பாடத்தொடங்கினோ மென்று நிரம்ப வழகிய தேசிகர் கூறினார்

அவையடக்கம்.

வாசனையுலாவிய பூங்கூந்தலையுடைய வள்ளிதேவியின் கொங்கைகளி னுச்சியாலே கலக்கி நெருங்கக் குழிசெய்யப் பட்ட தமது திருமேனியிலே சாக்கியநாயனாரெறிந்த கல்லையு மலர்கள் போலே யணிந்த சிவபிரானுடைய குமாரனாகிய முருகக்கடவுள் தாம் மகிழும் செந்தமிழோடு சேர்த்து, அடியேன்பாடுந் தமிழ்ப்பாடலையுந் திருச்செவியிலேற்றருளுவர்.

அரிதாகிய கல்விக்கடலை யளக்கின்ற பேரறிவுடையோர்களுக்கு முன்பாகத் திருப்பரங்கிரிக் கதையை யான் பாடத் தொடங்கியது எவ்விதமா யிருந்தாலும் நீலகண்டத்தை யுடைய சிவனடியார்கள் கைக்கொள்வர். மற்றையோரிதை மகிழ்ந்தாலுமென்னபயன் மகிழாதிருந்தாலு மென்னபயன்.

குடத்தினின்று தோன்றிய அகத்திய முனிவருள்ளங் கையிலே யடக்கிய சமுத்திரத்தை யானு முள்ளங்கையிலே யடக்குவேனென்று சொல்லுதல்போலும், எங்கும் வியாபித்த பரங்கிரிக் குமரவேள் சரித்திரம் வடமொழியிலே முனிவர் சொல்லியிருக்க யான் தமிழிலே பாடுவேனென் றெழுந்தது.

# திருப்பரங்கிரிப்புராணவசனம்.

## புராணவரலாறு.

மறைமுடிவாகிய நான்கு வேதங்களின் ஆரவாரமும், பரம சிவமே கடவுளென்று சொல்லும் சிவாகம முழக்கமும், அஞ்ஞானத்தைப் போக்குகின்ற புராணங்களினோசையும், கடலொலியை நிகர்ப்பதாகச் சகல வளங்களும் நிறைந்த நைமிசாரணியத்திலே வந்திருந்து சிவபெருமானுடைய திருவருளாகிய தோணியைப் பற்றிப் பிறவியாகிய சமுத்திரத்தைக் கடப்பதற்குத் தவஞ் செய்கின்ற சௌனகாதி முனிவர்கள் பலரும் சூதமகா முனிவரை வணங்கி, அநேகவிதமாகத் தோத்திரஞ் செய்து, சுவாமீ! ஒரு விண்ணப்பஞ் சொல்கிறோம்; அந்த விண்ணப்பத்தைத் திருவுள்ளத்தில் அங்கீகரித்துக் கருணையோடு உத்தரங் கட்டளையிட்டருள வேண்டுமென்று பிரார்த்தித்துச் சொல்லுவார். அலைகள் முழங்குஞ் சமுத்திரத்தின் வயிறு தீபபற்றி யெரியுமபடி செய்த வேலாயுதத்தைத் திருக்கரத்திலே தாங்கிய குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் பழம்பதியாகிய திருப்பரங்கிரியின் மான்மியத்தை அடியேங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, சூதமுனிவர் கேட்டு மிகச் சந்தோஷமுற்றுத் திருவருளே குடிகொண்டிருக்கும் முகத்தினையுடைய குமாரக்கடவுளுடைய புராதனமாகிய திருப்பரங்கிரியின் மகிமையைச் சொல்லுந்தோறும் மிகுந்த பேரின்பத்தை யுண்டாக்கும். முனிவர்களே! நீங்கள் விரும்பியவாறே திருக்கயிலாச மலையிலே யெழுந்தருளியிருக்கும் பரமேசுவரன் நந்திதேவருக்கு உபதேசிக்க, அந்த நந்திதேவர்,

சனற்குமார முனிவருக்குச் சொல்லியருளச் சனற்குமார முனிவர் என்னுடைய குருவாகிய வியாசமகா முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் தமது திருவடியை வணங்கித் துதித்துக் கேட்ட எனக்குக் கருணையுட னருளிச்செய்ததாகும். இந்தக் கதை பதினெண் புராணங்களுள்ளே அடங்கிய சைவ புராணத்திலும் ஸ்காந்தபுராணத்திலும் உள்ளது என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் சொரியப் பெருமகிழ்ச்சியின் மூழ்கிச் சொல்லுவாராயினர்.

## பதிகம்.

மழலைவார்த்தையுடைய பார்வதியுடனே, திருக்கயிலாச மலையில் இளஞ்சந்திரனைத் தரித்த சிவபிரானெழுந்தருளியிருந்ததும், அவளுக்குச் சிவபிரான் பஞ்சாக்ஷர மந்திரோபதேசஞ் செய்தருளியதும், அப்போது அவளுடைய மடிமேலிருந்து குமாரக்கடவுள் அம்மந்திரப் பொருளைத் தெரிந்துகொண்டவிதமும், மோட்சங் கொடுக்குந் திருப்பரங்கிரியின் வரலாறும், ஒளித்திருந்து அந்த மந்திரப் பொருளைக் கேட்டதற்குப் பிராயச்சித்தமாகக் குமாரக்கடவுள் திருப்பரங்கிரியை யடைந்து சிவபிரானைப் பூசைசெய்ததும், [illegible] தன் திருப்பரங்கிரியில்வந்து பூதானஞ்செய்யும்போது குறிக்கப்பட்ட பிராமணர்களி லொருவர் குறைந்தகாலை [illegible] கண்ணையுடைய சிவபிரான் அதற்காக வந்து பூதானமேற்றுக்கொண்டதும், பிரமதேவன் சரசுவதியை [illegible] பிரமகூவ தீர்த்தத்திலே மூழ்கிச் சென்றதும், [illegible] முனிவருடைய மாணாக்கர் சாபத்தினாலே பெற்ற [illegible]

கோசம் திரும்பொருட்டுக் கோவிதாரத்துவசன் ஆக்தப் பிரம கூவத்திலே வந்து ஸ்நானஞ் செய்ததும், குற்றமில்லாத பரங்கிரியின் சிறப்புச் சொல்லியதும், அரிச்சந்திர மகாரா சன் சத்தியகூவ தீர்த்தத்திலே வந்து படிந்து குமாரக் கடவு ளைப் பணிந்து அவருக்குத் திருவிழாச் செய்ததும், அன் றிச் சத்தியவாக்குப் பெற்றதும், இன்னும் வேறு தீர்த்தங்க ளின் சிறப்புச் சொல்லியதும், நக்கீரரைச் சிறையிலே வை த்து அவர்பாடிய தமிழ்ப் பிரபந்தத்தை முருகடவுளேற்று வரங்கொடுத்ததும், சூரசங்காரஞ் செய்து ஆறுமுகமூர்த்தி திருப்பரங்கிரி யடைந்ததும், அவர் தெய்வயானையம்மையை த்திருமணஞ் செய்ததும், அந்த மணக்கோலக் காட்சியைத் தரிசித்தவர்க்குத் தருமம் பொருள் காமம் மோட்சத்தைக் கொடுத்து மணக்கோலத்துடனே குமாரக் கடவுளெழுந்த ருளியிருக்கிறதும், சூதமுனிவ ரருளிச செய்தபடி தமிழிலே சொல்லுகின்றோம்.

முதலாவது பாயிரச்சருக்கவசனம் முற்றிற்று.

---

## இரண்டாவது குமரன் உபதேசச்சருக்கவசனம்.

திருக்கயிலாசமென்று சொல்லப்படும் வெள்ளியங்கிரியி னுச்சிமேலேயுள்ள பொன் மயமாகிய கோயிலினிலே, அரி பிரமேந்திராதி தேவர்கள் வணங்கிச் சூழ்ந்து நிற்ப, கோடி சூரியரொன்று சேர்ந்தெழுந்தாற்போல எழுந்தருளியிருக்க

கும் சிவபெருமான், தமதொரு பாகத்திலே பெருங் கருணை பெருகிச் சுரக்குங் கண்களையுடையவளாய்ச் சோதிமயமா யுள்ள முருகக் கடவுளாகிய குழந்தையைத் தன் மடிமேலே வைத்துக்கொண்டு சமீபத்திலிருக்கும் உமாதேவியைப் பார்த்து, அவளுலகிட்டிய மனமகிழும்படி அநேக புராண சார மாகிய கதைகளைத் திருவாய் மலர்ந்தருளினார்; அக்கதைக ளைத் தனது திருச்செவிகளுக்கு அமுதமாகக் கேட்டருளிய உமாதேவி, சிவஞானத்தின்மேலே கருத்தைச் செலுத்தி யெழுந்து சிவபிரானை வணங்கிநின்று, சிரமேற் குவித்த கையை யுடையவளாய் விண்ணப்பஞ் செய்வாள். சுவாமீ! புராண நூலின் கதைகளாலே பிறவியை யொழிப்பது அரிய தாகும். சிவஞானத்தினாலேதான் மோக்ஷம் அடையவேண் டும்; சிவஞானத்தை யடைதற் கேதுவாகிய வேதத்தின் சி யிலே விளங்கும் பஞ்சாக்ஷர மந்திரத்தைப் பிரணவ மந்திர த்தோடுஞ்சேர்த்து நீர் எனக்குபதேசித்தருளவேண்டுமென் று பலவாறு தோத்திரஞ் செய்தாள். அது கேட்ட கிருபா நிதியாகிய சிவபிரான் புன் முறுவல் கொண்டு தலையசைத்து, அங்கு நின்ற சகல தேவர்களையும் அப்புறம் போகும்படி அகற்றிவிட்டுப் பார்வதிதேவியைப் பார்த்துச் சொல்லுவார். நான்கு வேதங்களும் ஆயிரம் வடிவெடுத்துச் சொன்னாலு முடியாத பெரும்புகழையுடைய பெண்ணே! வேதமாகிய தயிரினைக் கடைந்தெடுத்த வெண்ணெயைப்போலும் நி னைவிய மந்திரம்; அதனைச் சொல்லுகிறேன் கேளென்று திருவாய் மலர்ந்தருளுவார். மகத்தாகிய நன்மை யுடைய தாகும் ஆறெழுத்தாகிய மந்திரத்தினின்றும் சத்தகோடி மகா

மந்திரமென்று சொல்லப்படும் ஏழு கோடிகளையுடைய எல்லா மந்திரங்களும் வேதமும் வேதாங்கம் ஆறும் இருபத்தெட்டாகமமும் பதினெண் புராணமும் அறுபத்துநான்கு கலைகளும் புவனங்களும் உண்டாகும். இம்மந்திரம் உலகத்திலுண்டாகிய சிறியதெல்லாவற்றினுஞ் சிறியதாயும், பெரியதெல்லாவற்றினும் பெரியதாயும், அரியதெல்லாவற்றினும் அரியதாயும் விளங்கி நிற்கும். இம்மந்திரத்தின் பெருமையை யெம்போலியர் கோடி வருடமெடுத்துச் சொன்னாலு முடியாது. ஆதலால், இந்த மந்திரத்தின் பெருமையை நன்றாகத் தெளிந்து ஞானத்தை யடைந்தவர் எல்லா வுலகங்களினுமுள்ள வொழுங்காகிய பொருளை உள்ளங்கையி னெல்லிக்கனிபோல அறிவது மல்லாமல் அட்டமாசித்திகளும் வந்து தங்களுக் கேவல் செய்யவும் பெறுவார்கள்.

இனி மேற்கூறிய ஆறெழுத்தினுள்ளே முதலெழுத்தாவது அகரமும் உகரமும் மகரமும் விந்துவும் நாதமும் சேர்ந்தொன்றாகிய ஓம் என்பதாம். இதுவே மேலே சொல்லிய ஐந்தினுள் பிரணவமென்றுங் குடிலையென்றும் பெயர் சொல்லப்படும். பிரணவத்தின் உட்பிரிவாகிய ஐந்தினுள், அகரமும் உகரமும் ஓ என்பதாம். அதன்பின் நிற்கின்ற வட்டமுந் தண்டுமு மாகிய எழுத்தே மகரமும் விந்துவும் நாதமும் ஆகும். விந்துவென்பது வட்டவடிவாம், நாதமென்பது தண்டவடிவாம்; அதுவுமன்றி யொலிவடிவுமாகும். முதற் கூறிய அகாரத்திலே பிரமனும் இருக்கு வேதமும், உகாரத்திலே விட்டுணுவும் யசுர்வேதமும், மகாரத்திலே ருத்

திரனும் சாமவேதமுந் தோன்றி நிற்கும். விந்து சத்தியாகிய உன்னுடைய வடிவாம், நாதம் சிவமாகிய நம்முடைய வடிவாம் பெண்ணே, இவ்விடத்திலே சுருக்கிச் சொன்னோம். இந்தப் பிரணவமந்திரம எலலா மந்திரங்களு முண்டாதற்கு மூலாதாரத்திலே தோன்றுகின்ற மந்திரமிததாகும்; ஆதலால், பிறவி வேரறுப்பதற்குப் பஞ்சாக்கரமந்திர செபஞ் செய்யும்போது முதலிலே யிந்த ஓம என்னும் பிரணவத்தைச் சேர்த்துச் செபஞ் செய்வதுவே விதியாகும். இனி நம்முடைய வடிவமாகிய ஐந்தெழுத்துகளாவன ஐம்பத்தொன்றாகிய அக்ஷரங்களுக் குள்ளே முதலிலுள்ள பதினறெழுத்தைத் தள்ளிப் பதினேழாவது எழுத்துமுதலெண்ணி வரும்போது தோன்றிய இருபதாவ தெழுத்தாகிய நகரமும, இருபத்தைந்தாவ தெழுத்தாகிய மகரமும், முப்பதாவ தெழுத்தாகிய சகரத்தோடு இகரஞ் சேர்ந்த சியென்பதும், இருபத்தொன்பதாவ தெழுத்தாகிய வகரமும், இருபத்தாறாவ தெழுத்தாகிய யகாரமும் முறையே சேர்ந்த நமசிவய என்பனவாம். இதுவரையும மூலாதாரத்தினின்று முண்டாகும் பஞ்சாக்கர மந்திரம் நிற்கும் ஒழுங்கைச் சொன்னோம். இதிற் சந்தேகமில்லாது தெளிந்து இதன்பொருளையுணர்ந்து திருவருளுண்டாகும்வண்ணம் இந்தமந்திரத்தைப் பிறர் செவிகேளாதபடி மனத்திலுள்ளே தியானிக்கவல்லவன் எவனோ, அவனே சிவத்தோடிரண்டறக் கலந்தவனாவான். இந்தச் சிறப்புத்தங்கிய மந்திரத்தின்பெருமை ஏனைய மந்திரங்களிடத்திலில்லை. இதுதனக்குத்தானே சமானமாயுள்ளது. முடிவில்லாத எல்லா மந்திரங்களுக்குந் தலைமையாயுள்ளது. ஸ்ரீருத்

ரத்தின் நடுவாகிய உயிர்த்தானத்திலே யுள்ளது. இமமுட்டோ ஒருவனுக்கு வருஞ சனன மரணத் தொழிலை மாற்று நின்ற மோக்ஷத்திலே சேர்க்கும் உண்மைப் பொருட் பலவற்றினுந தெளிந்தெடுத்துக்கொண்ட சாரமுமாகும். இநதப் பஞ்சாக்கர மந்திரத்தை இச்சித்த மேம்பாடுடையவர் கல்லால விருட்சத்தடியி லெழுநதருளியிருநத தக்ஷணாமூர்த்தியைப்போன்ற ஞானசாரியனால் உபதேசிக்கப்பெற்றுக் கொள்ளக்கடவர். ஞானசாரியனல்லாத ஏனையோர் உபதேசிப்பதற்கு யோக்கியரல்லர். ஆதலால், ஞானசாரியனாகிய குருவே ஒப்பில்லாத செல்வப் பொருளும், அதனினும் சிறந்த கல்விப் பொருளும், பூமானநதத்தைத் விளைக்கு மோக்ஷவீடும், மனம வாக்குக் கெட்டாத பரப பிரமமும் ஆகும். மேலே கூறிய மநதிரத்தைப் * பீஜாக்ஷர மநதிரத்தோடு சேர்த்து உச்சரித்தால் வலிமை யுடையதாம். அப்படியன்றி வேறு பிரித்து உச்சரித்தால் யாதொரு வலிமையுமில்லையாம்.

ஒப்பில்லாத இநத மந்திரத்தைச் செபஞ் செய்யும்போது, பரிசுத்தம் பொருந்தி, மௌனியாகித் தனியே யிருந்து, மனமு ஒருப்பாடெய்தி, உருவேற்றவேண்டும். இப்படித் தனியேயிருந்து செபிக்கப்படும் மநதிரஞ் சீக்கிரம் பயனை விளைவிக்கும். பழமையாகிய தெய்வத்தன்மை பொருந்திய வேதங்களிலே கூறிய ஒழுங்கு தவறாதவரும் யாகஞ்செய்ய முயல்வோரும் இந்த மந்திரமே சீக்கிரம் பயனைத் தருமெ

* பீஜாக்ஷரம் - பிரணவமந்திரம்.

ன்று, உறுதியாகக் கைக்கொள்ளுவர். விதிப்படி பரிசுத்தஞ் செய்துகொண்டவராயினும், இயன்றவளவிற் பரிசுத்தஞ் செய்துகொண்டவராயினும, அவ்விரண்டுஞ் செய்துகொள்ளாதவராயினுங் காலங் குறியாது மனத்திலே ஆசை தோன்றிய அப்பொழுதே உருவேற்றிடுவோர்கள் வற்றாத சனனமாகிய கடலைக் கடந்தேறுவர். இந்த மந்திரத்தைக் குரு உபதேச முறைமையால் நான்கு பக்கமும் ஐந்து ஐந்தாக எண்ணும்படி யிருபத்தைஞ்சு அறையாக ஒருசக்கரங் கீறி எழுத்துகளை மாறி மாறி யடைத்து, அட்டகருமமும் சித்தியாகும பொருட்டு, செபஞ் செய்வார்கள். இவர்களுக்கு மோக்ஷங் கிடையாது. பெரியோர்களிதை விரும்பாது முறையே செபித்து, முத்தியை யடைவர். பார்வதியே! இன்னுங் கேள், மதுரமான பால கொடுக்கும பசுக் கூட்டங்களுக்குள்ளே காமதேனுவும, மிருகங்களுக்குள்ளே சிங்கமும், மலைகளுக்குள்ளே மகாமேருவும, சுவைப பொருள்களுக்குள்ளே அமுதமும, ஒளிப பொருள்களுக்குள்ளே சூரியனும, வாகனங்களுக்குள்ளே யானையும, எழுவகைத் தாதுக்களுக்குள்ளே செந்தாது ஆகிய பொன்னும, குலங்களுக்குள்ளே பிராமண குலமும், இரத்தினங்களுக்குள்ளே கருடமணியும், நதிகளுக்குள்ளே கங்காநதியும், வேதங்கள் முறையிடும் பல்வகைய நூற்பொருள்களுக்குள்ளே சிவகாயத்திரியும், தானபாத்திரங்களுக்குள்ளே சிவனடியார்களும், உயர்ந்தனபோல அநேக கோடி மந்திரங்களுக்குள்ளே பஞ்சாக்ஷர மந்திரம் உயர்ந்தது ஆகும். பூமாலையை யணிந்த நல்ல கூந்தலையுடைய பார்வதியே! சிவவடிவமாகிய [illegible] பெருமை

லையச் சுருக்கி ஒருவாறு சொன்னோம். இனிமையாகிய அமிர்தமாகக் காதினாலிதை யுண்டு, மனத்தினாலாயிரத்தெட்டுருசெபஞ் செய்வாயாக. பெறுதற்கரிய இந்த மந்திரத்தைப் பேரன்பினாலே விதிப்படி செபஞ் செய்யும் மேம்பாடுடையவர் தங்கள் சுற்றத்தாருடன் கோடிகாலந் திருக்கயிலாச மலையிலே வீற்றிருப்பர். ஓதாது செபஞ் செய்வோர் பேறு முன்னமே சொல்லிவிட்டோம். கருணையுடைய இந்த ஐந்தெழுத்தே பரப்பிரமமும், சிவமும், பரமானந்தத்தை விளைக்கும் நிலமும், மோட்சமடைதற்கு உண்டுபண்ணிய நுட்பமாகிய ஒரு சூழ்ச்சியும், சச்சிதானந்த சொரூபத்தைக் காட்டும் விளக்கொளியுமாகும். இந்த மந்திரத்துக்குத் தெய்வமும் இருடியும் நாமே. சந்தசு ஜக்தி இதனாலெய்தப்படும் பிரயோசனம் மோட்சமேயென்று கங்காநதியைத் தரித்த சடையையுடைய பரமேசுரன் திருவாய் மலர்ந்தருளினார்.

10 அதுகேட்ட பார்வதி தேவியானவள் திருவுள்ளத்திலே சந்தோஷமதிகரிக்க அந்த மந்திரப்பொருளைத் தியானிக்குங் கருத்துடையவளாயினாள். அப்போது உமாதேவியினது மடிமேலிருந்து கேள்வியுற்ற முருகக்கடவுள் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் அருளிய முறைப்படியே பஞ்சாக்கர மந்திரப்பொருள் முழுவதுந் தெரிந்து கொண்டனர். அந்த முருகக்கடவுளுடைய கேள்வியானது ஒரு வித்தையிலே தோன்றிய தழை வளார் கிளை பூ முதலானவைபோலவும், எள்ளினிற் றோன்றிய எண்ணெய்போலவும், அறிவுடையாரது கல்விபோலவும், நிலத்தினிற் பொதிந்த நீர்போ

லும், விருத்தியாயினது. பின்பு சிவபிரானும் உமாதேவி யும் குமாரக்கடவுளுக்கு ஐந்தாவது பருவம் வர நோக்கிக் களிகூர்ந்து இருக்குங்காலத்தில், ஒருநாள் சேவை செய்ய வந்திருக்குந் தேவர்கள் முதலானவர்களைப் போகும்படி செய்து பிரமதேவனை நோக்கி, வாராய் பிரமனே! நீ நமது குமாரனாகிய முருகனுக்குப் பரிசுத்தமாகிய கலைகளையெல் லாம் உபதேசிப்பாயென்று, பரமேசுரன் கட்டளையிட்டரு ளுதலும், உடனே பிரமன் எழுந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டு கோடி சூரியருதயஞ் செய்தாற்போன்ற சோதி மயமாகிய முருகக்கடவுளை யழைத்துக் கூட்டிக்கொண்டு திருக்கோயிலி னொருபக்கத்திலே போயிருந்து நல்ல சுப முகூர்த்தம் பார்த்து *விநாயகக் கடவுளை வணங்கிப் பிரணவ மந்திரத்தை யுபதேசித்தான். அதைக்கேட்டு, கடப்ப மாலை யணிந்த முருகக்கடவுள் பிரமதேவனைப் பார்த்து, நான்கு முகங்களையுடைய பிரமாவே! இந்த மந்திரத்தின் பொரு ளைக் கேட்கும் பேராசையுடையவனானேன். ஆதலால் அதை நீ சொல்வாயாகில் நீயே குருவாகுவாயென்று சொன்னார். அப்போது பிரமதேவன் ஒன்றுந் தெரியாதவனாய்ச் சொல் லுவான்: குழறுகின்ற மழலைவார்த்தை பேசுங் குமரனே! கருவினால் பலவற்றையுந் தெரிந்த பின்னரன்றோ இந்த மந்திரப்பொருளைக் காணலாகும். அதன் முன்னர்த் தளர் ந்த சிந்தையுடைய எனக்குச் சொல்ல முடியாதென்றான். அது கேட்டுக் குமாரக்கடவுள் புன்சிரிப்புச் செய்து, யா தொன்றுந் தெரியாத நீ படித்த வேதமென்ன, எல்லா அண் டங்களையுஞ் சிருட்டித்ததும் என்னவென்று [illegible]

ஜோக் கண்கள் சிவந்து கோபித்துப் பார்க்க, உடனே நாண முற்றுப் பிரமதேவன் நடுநடுங்கிப் பயந்து எழுந்துபோய்ப் பரமேசுரனுடைய சந்நிதானமடைந்து கீழே விழுந்து பணிந்தெழுந்து வாய்புதைத்துக் கைகட்டிக் கண்ணீர் அருவி போலச் சொரிய அழுதுகொண்டு நின்றான். அவனுடைய மனக்குறிப்பைப் பரமேசுரன் றெரிந்து பக்கத்திலே வணங்கிநின்ற கணங்களைப் பார்த்து நமது பிள்ளையாகிய குமாரனை யழைத்து வாருமென்று உத்தரவு செய்தலும் உடனே கணநாதர்கள் சென்று ஆக்கினைப்படி யழைத்து வந்தார்கள். அநேககோடி வேதங்கள் முழங்கிச் சூழ்ந்தாற்போலும் சதங்கை மணிகள் காலிற் சுற்றியொலிப்ப எதிரே வந்து நிற்கின்ற குமாரக்கடவுளை நோக்கிக் கேர்பித்தவரைப் போலக் குழந்தாய்! உனக்கு உபதேசிக்க வந்த பிரமனாலே வந்த குறையென்ன சொல்லுவா யென்று கேட்க உடனே முருகக்கடவுள் அமுதமுங் கைக்குமபடி இனிக்கும் மழலையாகிய செந்தேன் வாயினின்றும் வழிவதுபோலச் சொல்லுவீர். ஐயனே! இங்கு நிற்கின்ற பிரமன் உபதேசித்த பிரணவ மந்திரத்துக்குப் பொருள் சொல்லென்று கேட்டேன்; ஒன்றுஞ் சொல்லத் தெரியாமல், ஊமன்போல உம்மிட்த்துக்கு வந்தானிதைத் தவிர வேறொன்றுமில்லை யென்றுசொல்லுதலும், பிதாவாகிய சிவபிரான் குழந்தையாகிய குமாரக்கடவுளைப் பார்த்துக் கூறுவார். வேதங்களை யெல்லாம் ஆராய்ந்து சொல்லக்கூடிய பிரணவ மந்திரப் பொருளை அதற்கு முன்னரெப்படிச் சொல்லுவான், தனக்குத் தெரிந்த மட்டுந்தானே உபதேசிப்பான், அதற்காக அவனுடைய

வார்த்தையைத் தட்டி அவனையுந் தெரியாதவனென்று நிந்தனை சொல்லலாமோவென்று உலக நியாயஞ் சொல்லிக் கூரியவேலாயுதத்தை யேந்தும் முருகக்கடவுள் பிதாவை நோக்கிச் சுவாமீ! பிரமனை வினவிய குடிலையாகிய பிரணவமந்திரத்தினின்றுஞ் சகலசராசரங்களுந் தோன்றி விளங்கி நிற்கும். அதனுண்மைப் பொருளை அவன் தெரியாதிருக்கின்றனென்று சொல்லுதலும், உடனே சிவபிரான் புன்சிரிப்புச்செய்து குழந்தாய் நீ இந்தக் குடிலையின் பொருளை யெவ்வாறு தெரிந்துகொண்டாய்? அதனை நமக்குச் சொல்லென்று காதுகொடுத்துக் கேட்க, முருகக்கடவுள் சொல்லுவார். இவ்விதங் கேட்டாலெப்படிச் சொல்லலாம், பிரகாசிக்கின்ற இரத்நங்களாற் செய்யப்பட்ட செம்பொற் பீடத்திலே நாமிருக்க, எம்மைத் தாழ்ந்து நின்று வணங்கிக் கரங்களைக் குவித்துக் கேட்டாற் சொல்லலாமென்றார். அந்தப்படியே ஒப்பும் உயர்வுமதனக்கு இல்லாத சிவபிரான் முருகக்கடவுளை ஆதனத்தி லெழுந்தருளப்பண்ணி வணங்கி நின்று கேட்க; உமாதேவியாருக்குச் சிவபிரான் உபதேசித்த முறைப்படியே யுள்ளங்கைநெல்லிக்கனிபோல்விளங்குமாறு உபதேசிக்கத் தொடங்கினார். இந்தப்படி தேவவருடத்திலொருவருட மூச்சுவிடாமல் உபதேசித்துங் குடிலையாகிய பிரணவமந்திரப் பொருளின் எல்லை தெரியவில்லையாக; அது தெரிந்து சிவபெருமான் இந்த மந்திரத்தைப் பார்வதிக்கு நாமுபதேசஞ் செய்யும்போது அவள் மடியிலே யிருந்து இவன் தெரிந்துகொண்டானென்று நினைத்து முருகக்கடவுளை நோக்கி, குழந்தாய் குருவை வணங்கி யுபதேசமுறை

மாதப் பெற்றுக் கொள்ளாத மந்திரம் பிரயோசனப்படா தென்று, நம்மை ஆசனத்தின் கீழே நின்று முறைப்படி கேட்கச் சொல்லினை; உனனுடைய வடிவம் நமது பிரதி பிம்பமாயிருந்தாலும் உலகநியாயப்படி குருமூலமாகப் பெற்றுக்கொள்ளாத மந்திரஞ் சித்தியடையாது. ஆதலால் நீ நம்மிடத்திலே முறைப்படி உபதேச மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளினார். முருகக்கடவுள் அதற்கிணங்கி எழுந்து வணங்கிச் சிவபிரானுடைய திருவடியைச் சிரமேற்றாங்கி நிற்க; அவரது முடிமேலே தமதுடைய கையாகிய தாமரைமலரை வைத்துத் தெய்வத்தன்மை பொருந்திய வேதங்கள் முதலாகிய கலைகளெல்லாம் விதிப்படி யுபதேசித்தருளி, கடப்பமாலை யணிந்த முருகனே! பழைய நூற்பொருளை நீ யெனக்கு உபதேசித்தலாலே சுவாமிநாதனென்னு மொருநாமமும் பெறுவாய், நாமிருவரும் ஒன்றாயிருந்த போதிலும் உலக நீதிக்கு விரோதமான காரியத்தைச் செய்தால் அதைநாமே பரிகரிக்கவேண்டும்; ஆதலால், உமாதேவிக்கு உபதேசித்த மந்திரத்தை அவள் மடியிலிருந்து கேட்டு நீ வெளிப்படுத்திய குற்றம் நீங்கும் பொருட்டுத் தவஞ்செய்யவேண்டும். தவஞ்செய்யும் இடமாவது மகாமேருமலைக்குத் தென்றிசையிலே நாவலந்தீவிலே பரதகண்டத்திலே காவிரிநதிக்கரைக்குத் தெற்கேயுள்ள பாண்டிநாட்டிலே வையைநதி சூழப்பெற்ற மதுரை மாநகரத்திற்குத் தென்மேற்கிலே தன்பேர் கேட்டமாத்திரத்திலே ஞானத்தைத்தருஞ் சத்தியகிரி யென்னுந் திருப்பரங்கிரியாகும். அந்தத் திருப்பரங்கிரி யென்னுமலை பிறவிக்

கட்டலைக் கடப்பதற்கு ஒருதோணியாகும்; அம்மலையின் வடபக்கத்திலுள்ள சத்தியகூவ தீர்த்தத்திலே மூழ்கினாற் சத்தியவாக்குண்டாகும்; மேல்பக்கத்திலுள்ள புத்திரகூவ தீர்த்தத்திலே படிந்தாற் புத்திரப்பேறுண்டாவதும் அன்றிப் பாவமும நோயும் நீங்கும்; ஈசான திக்கிலே தாமரைத் தடாக மொன்றிருக்கிறது; அதைக் கண்ணாலே தரிசித்தோருக்கும கையாலே தொட்ட பேருக்கும மனத்திலே நினைத்த எல்லாப பொருள்களையுங் கொடுக்கும்; அதிலே ஸ்நானஞ்செய்து வேதமந்திரத்தாலே தருப்பண முதலானவைகள் செய்து தேவதைகளுக்கு பிராமணருக்குத் தானங் கொடுத்து நமது சொரூபமாகிய திருப்பரங்குன்றத்தைப் பிரகாசம் பொருந்திய பலமலர்களாலே யருச்சனை செய்து பின்பு அந்தத் தாமரைத்தடாகத்தை வேலாயுதத்தினாலே கிழித்தாற் கிழிந்த இடத்திலே தீர்த்தம் பெருகி மேலெழுந்து வரும்; அப்போது அது சரவணப் பொய்கை யென்று சொல்லப்படும். அதற்கு வாயுகோணத் திசையிலே ஒரு சிவலிங்கந்தாபித்து மந்திரவிதிப்படி சோடசோபசாரத்தாற் பூசைசெய்து விரதாதிகளைச் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று பரமேசுரன் கட்டளையிட்டருளுதலும்; உடனே குமாரக்கடவுள் நவவீரராகிய வீரவாகு முதலிய தம்பிமார்களுஞ் சிவகணங்களும உக்கிரன் அண்டாபரணன் முதலிய கணநாதர்களும் பிறரும் தன்னைச் சூழ்ந்துவரக் கயிலாசமலையை விட்டு நீங்கி, பிரகாசிக்கின்ற தேரின்மே லெழுந்தருளி ஆகாயமார்க்கமாகத் தென்றிசை நோக்கி வந்தனர்.

இரண்டாவது குமாரன் உபதேசச்சருக்கம் முற்றிற்று.

# மூன்றாவது குமரன் தவஞ்செய்த சருக்கம்.

குமாரக்கடவுள் தனது தாயாகிய பார்வதிதேவியின் உபதேசமந்திரப் பொருளைத் தெரிந்து, வெளிப்படுத்திய குற்றந் தீரும்பொருட்டு, சிவபிரான் ஆக்கினைப்படி கயிலாசமலையை நீங்கிய கதையைச் சொன்னோம். பின்பு அந்தக் குமாரக்கடவுள் சத்தியகிரியாகிய திருப்பரங்குன்றத்தை யடைந்து தவஞ்செய்திருந்த கதையைச் சொல்லுவாம்.

எல்லா நூற்பொருளுக்கு மிருப்பிடமாகிய சூதமுனிவரைச் சவுனகமுனிவர் வணங்கிச் சுவாமீ! திருப்பரங்குன்றமானது பூலோகத்தில் வந்த காரணமென்ன? அதைச் சொல்லியருளவேண்டு மென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்.

முன்னொருகாலத்திலே ஆதிசேடனும் வாயுதேவனும் விரோதங்கொண்டு புயவலியாரென்று ஒருவர்க் கொருவர் பேசி யுத்தஞ்செய்யும்போது, வாயுவானவன் எல்லாவுயிரும் நாசமடையும் ஊழிக்காற்று வடிவமாகி மகாமேருமலையிலே அதன் வேர்கெட்டு அசையும்படி மோதி அதன் சிகரங்களைப் பிளந்தெறிந்து, அதன் பக்கமேயுள்ள கந்தமாதன மலைமேலிருக்கும் கனைபம், சுனைபம், கந்திருவம், சுகேது, மந்தரம், சத்தியசிருங்கம், வைனியம், சித்திரம் என்னும் எட்டுச் சிகரங்களுள் ஆறாவது சிகரமாகிய சத்தியசிருங்க மென்னு முடியைப் பறித்துப் புயவலிமையினாலே யெறிந்து வீச அந்தச் சிகரமானது பூமாதேவி செய்த தவப்பிரயோசனத்தினாலே

பாண்டிநாட்டிலே வந்து விழுந்து தங்கியது. இப்படி விழுந்
போது அதிலுள்ள குயில்கள் பரமனே மலையாய் வருகின்
றான்; தேவர்களே வாருங்களென்று அவர்களை யழைப்பது
போலுங் கூவுதல் செய்தன. பெண்கள்போல மயில்கள்
நடனமாடின; இசைபாடுகின்ற கந்தருவர்போல வண்டுகள்
கீதம்பாடின; அருவிகள் நாற்புறத்தும சாமரைகள்போல
அசைந்தன; வாத்தியம்போலப் பறவைகள் முழங்கின; இந்
தச் சிறப்புடன் விழுந்து கிடந்த சிகரஞ் சத்தியகிரியென்று
சொல்லப்படும்.

இந்த விதமாகச் சத்தியகிரியின் வரலாறு கூறிய சூத
முனிவரைச் சவுனகமுனிவர் வணங்கிச் சுவாமீ! இனி முரு
கக்கடவுள் சிவபிரானைப் பூசைசெய்து தவஞ்செய்யச் சத்
தியகிரியாகிய திருப்பரங்குன்றத்துக்கு வந்த கதையைக்
கூறுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார். அநே
கம் பூதகணங்கள் முதலோர் சூழ இளஞ்சூரியனென்று வட
க்கே நின்று தெற்கே புறப்பட்டாற்போலும் குமாரக்கட
வுள் எழுந்தருளி வந்து, கங்காநதி, காளிந்திநதி, நருமதாநதி,
கோதாவரிநதி, துங்கபத்திரிநதி, கண்ணவேணிநதி, காவிரிநதி
முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து, ஆங்
காங்குள்ள சிவஸ்தலங்களை முறையே வணங்கி தம்மை
யெதிர்கொண்டு பணியு முனிவர்களுக் கெல்லாந் திருவருள்
செய்து, தமிழ்நாட்டிலே வந்து, குறிஞ்சி பாலை முல்லை யெ
ன்னு மூன்று நிலங்களையுங் கடந்து, சகல வளமும் நிறை
ந்த வைகைநதி பொருந்திய மதுராநகரம் வந்து, சோமசுந்த
ரேசனைப் பணிந்து துதித்து, செற்கதிர்களெல்லாஞ் சாமரம்

போலசையாநின்ற வயல்களாற் சூழப்பட்ட திருப்பரங்கிரியைச் சார்ந்தனர். பின்பு குமாரக்கடவுள் அமமலையின் கண்ணே தவஞ் செய்துகொண்டிருக்கும அநேக முனிவர்கள் எதிர்கொண்டு வந்து பணிந்து

வெங்கொடுஞ் சூரன் காலனே சரணம் மேவுபூங் காலனே சரணம், துங்கர்உள் உணரும் மெய்யனே சரணம சோதிசேர் மெய்யனே சரணம், சுந்தரி தூநூல்வாய்ப் பாலனே சரணம் சங்கரன் பாலனே சரணம், பைங்கடம் பொழுகும் முருகனே சரணம் பரங்கிரி முருகனே சரணம். (க)

அங்கையில் வெண்ணெய்க் கண்ணனே புகழும் ஆறிரு கண்ணனே சரணம, பொங்கிய நறைசேர் அம்புயாசனனும் புகழ்திரு அம்புயா சரணம், தங்கிய மணிப்பூண களததனே சூரைச் சயங்கொளுங்னே சரணம், பைங்கறை யெழும்வேற் காங்கையா சரணம் க் காங்கையா சரணம், (உ)

என்று

பலவிதமான தோத்திரஞ் செய்து நிற்க, அம்முனிவரர்கள் அன்பின் மிகுதிக்குத் தக்கவாறு திருவருள் சுரந்து கடைக்கண் செய்து, பின்பு திருப்பரங்கிரியைச் சமீபத்தில் வந்து வணங்கி, சத்திய கூவத் தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, வேத மந்திரஞ் சொல்லிய பிராமணர்களுக்குத் தானமாகப் பொன் கொடுத்துப் பின்னர் பரங்கிரியாகிய கடவுளைப் பூசனைசெய்ய நினைத்து, வீரவாகு முதலிய கணங்களைப் பார்த்துப் பூசைக்கு வேண்டும் திரவியங்கள் கொண்டுவாருங்களென்று உத்தரவு செய்தலும், வீரவாகு முதலிய கணங்கள் சென்று கோட்டுப்பூ,

கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்று சொல்லப்படும் நால் வகை மலர்களும், பரிசுத்தமான பஞ்ச கௌவியமும் இன்சுவாசனைகலந்த திருமஞ்சனமும, நல்லவாசனையுள்ள சந்தனமுதலிய வாசனாதிரவியமும, மதுரமாகிய முக்கனி ஆதிய கனிவருக்கமும தூபதீபமுங் கொண்டுவந்து கொடுக்க, குமாரக்கடவுள் வாங்கி பரங்கிரியாகிய சிவபெருமானை வேதாகம மந்திரவிதிப்படி பூசைசெய்து, அக்கினிகாரியஞ் செய்து, அநேக மந்திரசெபஞ்செய்து, மலர்களைத்தூவியிறைஞ்சி எழுந்தெழுந்து தோத்திரஞ்செய்து, மூன்றுதரம வலமாகப் பிரதக்ஷணம வந்து பேரானந்தத்திலே மூழ்கினார். பின்பு திருப்பரங்கிரிக்கு வடகிழக்கிலே சென்று அங்கே சரவணப் பொய்கையென்னுந் தீர்த்தத்தை வேலாயுதத்தினாலே பூமியைக் கிழித்து மேலெழும்படி யுண்டுபண்ணி அதிலே ஸ்நானஞ்செய்து அத்தீர்த்தத்தின சமீபமாக வாயு திசையிலே, சிவலிங்கந்தாபித்து இவ்விலிங்கத்தை யன்போடு தரிசித்தோர்கள் இச்சித்த பலனை யருள வேண்டுமென்று சிவபிரானை யாவாகனஞ்செய்து, வேதமந்திரங்களால் பதினாறுவிதமான உபசாரத்துடன் பூசித்து, அப் பூசையின் பயனை யேற்றுக்கொள்ளுமென்று சிவபெருமான் திருக்கரத்திலே சலத்தை வார்த்துக் கொடுத்துவிட்டு மூன்றுவருடம் பெரியதவஞ் செய்துகொண்டிருந்தார். அதன்மேல் பிரமா விஷ்ணு, இந்திரன், தேவர்கள் முதலானவர்களுஞ் சிவகணங்களுந் தம்மைச்சூழ்ந்துவரச் சிவபிரான் இடபவாகனத்தின்மீது கோடிசூரியருதயமானாற்போலெழுந்து தவஞ்செய்யு மிடத்துக்கு வந்தார். உடனே குமாரக்கடவுள் பன்

இரு கண்களாலும் அதைக்கண்டு எழுந்து வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

முகையவிழ்ந்திட விளரிவண்டு முரன்றனபங்கஜை சிந்துவேள்
தகையவிழ்ந்திட நுதல்மலர்ந்தவ தகுபழம்பொருள் தத்துவ
பஃறலைப்பணி கக்குருஞ்சு பதித்திடுங்கள வெண்பொடி
நகுமெழிற்பெற வருபரங்கிரி நாதசேவடி போற்றுவாம். (க)

அளிமுரன்றிடுமிதழித்தொடை யணிதரும்புய விமலவான்
குளிறிடுந்திரை நதியுடன்பிறை குலவிஞ்சடை முடியமரா
மூளரியண்ணலொ டரிபுரந்தரர் முடிதழும்பிடு பதமுளாய்
களிர்பெறும்பொழில வளர்பரங்கிரி நாதசேவடி போற்றுவாம். (உ)

உலகமுந்திய அறுவிதம்பெற ஒளிவிலகெழ விரிசெய்தே
அலகில்அம்புவி பிறவிகொண்டிட அருளருந்துணை வினைசமன்
மலிவிடும்பொழு தருள்பொருந்தினா மலமகன்றிடு பிறவிதீர்
கலமெழும்பொருள் வளர்பரங்கிரி நாதசேவடி போற்றுவாம். (ங)

தானுமேசத சதமெனும்படி சத்தறிந்திட அரியதாம்
ஊனமேயிரு ளாகிமூடிட உற்றபானு மறைத்தகண்
மேனமேம்பட லந்துடைக்க விளம்புசற்குரு உணருமோ
ஞானமேவடி வளர்பரங்கிரி நாதசேவடி போற்றுவாம் (ச)

மன்மதனை யெரித்த நெற்றிக் கண்ணையுடையாய் பழமையாகிய தத்துவப் பொருளா யுள்ளவனே! நீலகண்டத்தை யுடையவனே! கொன்றை மாலையைத் தரித்த புயங்களை யுடையவனே! நின்மலமானவனே! கங்காநதியையுஞ் சந்திரனையுந் தாங்கிய சடையை யுடையாய் அரிபிரமேந்திராதிகள் பரவிய பாத தாமரை யுடையாய் பதார்த்தங்களைக் காண வொட்டாது கண்களை மறைத்

இருந்த பிறவிருளை யோட்டிப் பதார்த்தங்களைக் காணச் செய்யுஞ் சூரியனைப்போல மெய்ப் பொருளாகிய சிவ த்தைக்காண வொட்டாமல் சதசத்தாகிய ஆன்மாக்களை மறைத்திருக்கும் ஆணவமலமாகிய அகவிருளைப் போக்கிச் சிவத்தைக் காணச்செய்யுங் குருவி னுபதேசமாகிய ஞானமே சொரூபமாக விளங்குந் திருப்பரங்கிரியி லெழுந்தருளிய கடவுளே! யென்று தோத்திரஞ்செய்து வணங்கி நின்றார். அப்படி நின்ற முருகக் கடவுளைச் சிவபிரான் தமது திருக் கைகளாரத் தழுவியெடுத்து மார்போடணைத்து இறுகத்தழுவி யுச்சிமோந்து தமது பக்கத்திலே யிருத்திச் சொல்லுவார். பன்னிரு கண்களையுடைய குமரனே!, உன்னுடைய தோத்திரத்தைக்கேட்டு மிக்க சந்தோஷமடைந்தோம். தெய்வதன்மைபொருந்திய வேதசிவாகமங்களால் வடித்தெடுத்த சாரமாகிய பஞ்சாக்ஷர மந்திரம் பயனைத் தரும் பொருட்டுக் குருமுகமாகப் பெற்றுக்கொள்ளுவதே நியாயமென்று உலகத்தா ரறிவதற்காகப் பூமியிலே வீற்று திருப்பரங்கிரியிலே தவஞ்செய்வாயென்று சொன்னோம். பஞ்சாக்ஷர மந்திரமட்டுமல்ல இன்னும் ஏழுகோடியென்று சொல்லப்படும் எல்லாமந்திரங்களும், தன்னையுந்தலைவனையு முணர்ந்த சற்குருவாலே யுபதேசிக்கத் தெரிந்துகொண்டால்தான் பலன்கொடுக்கும். இந்தப்பஞ்சாக்கர மந்திரம் 'எழுதாக்கிளவி'யென்னும்வேதமோதுபவர்களுக்கும், பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரரென்னும உத்தமமாகிய நால்வகை வருணத்தார்களுக்கும், பிரமசரியம், வானப்பிரஸ்தம் கிருகஸ்தம் சந்நியாச மென்னும் நால்வகை யாச்சிரமத்தார்

களுக்கும், இலிங்கதாரணஞ்செய்து கொள்ளும் வீரசைவர்க ளுக்கும், எழுமுதுணர் சிவபிரானால் அருளிச்செய்யப்பட்ட தூயசிவாகமங்களின் நெறியிலொழுகுஞ் சித்தாந்த சைவர்க ளுக்கும், பொதுவாகஉரிமையுடையதாகும். தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மகிழ்ச்சியை விளைக்கும் கந்தமாதனத் தின் கொடுமுடியாகிய திருப்பரங்கிரியிலே எமது சொல்மு றை தவறாது நீசெய்த தவத்தை மகிழ்ந்தனம். இனி யுனக்கு வேண்டிய வரத்தைக்கேளென்று சிவபிரான் அருளிச்செய்ய முருகக்கடவுள்பன்னிரண்டு கண்களாலும பிதாவாகிய சுவா மியைப்பார்த்து, சுவாமீ! உமது திருவுளத்துக்குப் பொருந் தாதசெய்கையைச் செய்த பிழையைப் பொறுத்தருளவேண் டும்; அன்றியுந் தினந்தோறும உமது திருவருட்பார்வை தந் தருளவேண்டும்; இன்னும், உலகத்திலே சேரக்கூடாத மாத ரைச்சேர்ந்த தோஷமும, பசியினாலே யுண்ணக்கூடாதவரிட த்திலே யுணவுகளைப் புசித்ததோஷமுதலாகிய பாவமும் நீங் கும்பொருட்டுத் திருப்பரங்கிரிக்கு வந்தவர்கள் அவைகளை நீங்கிச் சிவகதியடையவும், உமது திருவுருவிளங்கத் தாபி த்துப் பூசைசெய்து அடியேன் அர்ச்சனை செய்யு மிலிங்கத் தைக் கண்ணாரத் தரிசித்தவர் தந்தை தாய் குரு வேதியர்க் குச்செய்த பாவத்தைப் போக்கி மோக்ஷத்தை யடையவும் வேண்டுமென்று பிரார்த்திக்க, பரமேசுவரனும அந்த வரங் களைக்கொடுத்துப், பின்னுஞ் சொல்லுவார். சரவணப்பொய் கையைத் தரிசித்தவர், புண்ணியத்தைப்பெறுவார். தொட்ட வர்பொருளைப் பெறுவார். உள்ளே கொண்டவர் உலகவின்ப த்தையடைவார். ஸ்நானஞ்செய்வோ ரெல்லாரும், மோக்ஷத்

தையடைவார். சத்தியகிரியாகிய திருப்பரங்குன்றத்தை வந்தடைந்தவரும், மகிடாசுரசங்காரஞ்செய்த காளிக்கு முன்னும், துளவ்மாலையணிந்த விஷ்ணுவுக்கு முன்னும், புனிதராயிருந்து பஞ்சாக்ஷர ஜெபஞ்செய்வோரும், பிறவிவேரை யறுப்பார்களென்று திருவாய் மலர்ந்து குமாரக் கடவுளைத் தமது திருக்கரங்களாலெடுத்து மார்போடணைத்துத் தழுவி யிருத்தி, உமாதேவியாருடன் மகிழ்ந்து, ரிஷபவாகனத்தின்மேலெழுந்து, விஷ்ணுமுதலான தேவர்களும் முனிவர்களுஞ் சூழ்ந்து சேவிக்கவும் தேவர்கள் புட்பவருடம் பொழிந்து மகிழவுங் கயிலாசமலையை யடைந்திருந்தனர். இத்தன்மையான புகழ்பெற்ற திருப்பரங்கிரியின் மான்மியத்தை யறிந்ததேவர்முனிவர் ஆசை மிகுதியாக அங்குவருவார். வந்தபின் பிரியாமலிருப்பார்; இனிக் குமாரக்கடவுள் திருவாய் மலர்ந்து நின்மல சொரூபியாகிய சிவபிரானைத் துதித்த தோத்திரங்களைப் படிப்பவர்களுங் கேட்பவர்களும் அடையும் பலனைக் கேளுங்கள். முனிவர்களே! அக்கினியை வீசுகின்ற கொடிய காட்டினிடத்திலே மிருகங்களாலெய்திய பயமும், கொடுங் கோலரசர்களாற் செய்யப்பட்ட மனவருத்தமும், வயிறெரியும்படி கைப்பொருளெல்லாம் பறித்து ஓட்டுகின்ற கள்ளர் செய்கின்ற துன்பமும், நீங்குவார். இமமட்டோ சரீரத்திலே யிரத்தம்வற்றி யிளைத்து நோய்கொண்டு சகிக்கக்கூடாத துன்பமும், உணவுக்கும் இடமின்றி வருத்தஞ்செய்யும் வறுமையும், மழையில்லாமற் பஞ்சகாலத்தா லுண்டாகுங் கேடும், உயிரிறக்கவரும் போர்க்களத்திலுண்டாகிய மனத்துணுக்கமும், புணரக்கூடாத மாதரைச் சேர்ந்த பாவமும், பசியால்

ருந்தியுண்ணக்கூடாதவர்கொண்டுவந்துகொடுத்தவுணவை யுண்டதோஷமும் நீங்குவார். அன்றியும் தங்கத்தகட்டிலாயி னும் வெள்ளித் தகட்டிலாயினும் பூளையோலையி லாயினும் அந்தத் தோத்திரமாகிய கவிகளை யெழுதித் தலைமேலே யணி ந்துகொண்டவர், வஞ்சகமெல்லாம் போக்கிப் பரிசுத்த மன முடையவராவார். ஆறுமாதந் தங்கள் தங்களுக்கேற்ற நித் தியகன்மமுடித்துப் பரிசுத்தராயிருந்து இந்தத் தோத்திரத் தை வாசிப்போர் அழகாகிய புத்திரப்பேறடைவார்கள்; பிணி யினாலே வருத்தமடைய மாட்டார். ஒருமாதம வாசிப்பவர் மனமகிழ்ச்சி யடைவார்கள். அரியதாகிய தவஞ்செய்தாலுங் காணுதற் கருமையாகிய ஆறு திருமுகங்களையுடைய குமா ரக்கடவுளுக்குச் சிவபிரான் திருவுருக்காட்சி கட்டளையிட்ட நாளென்று சொல்லப்படுந் தைப்பூசமாகிய தினத்திலே, அந்த இருவருக்கும் அபிடேக நைவேத்திய முதலிய சிறப் புச்செய்து தரிசனஞ்செய்வோர், மனத்திலே நினைத்த காரிய மெல்லாம் அடைவார். இன்னும் இந்தத் தைப்பூச நாளி லே சூரியவுதயகாலத்தில் சத்தியகூவ தீர்த்தத்திலும் புத்திர கூவ தீர்த்தத்திலுஞ் சரவணப்பொய்கையிலும் ஐந்து பசிய அறுகம் புல்லைத் தலைமேலே வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்து பஞ்சாக்கர செபஞ்செய்வோரது பெருமையை யாவ ரெடுத்துப் பேச வல்லவர்? இன்னும் வேறு தலங்களிலே வே தங்களை யுணர்ந்த வேதியருக்குச் செய்வித்த கோடி கன்னி காதானப் பலனையு மடைவார். கிடைத்தற்கரிய தைப்பூச நாளிலே திருவிழாச்சேவை செய்பவரும், தேவரும் புகழும் இந்தத் திருப்பரங்கிரியிலே வசிப்பவரும், பாசவேரைப் பறி

த்தெறிந்து மோக்ஷவீட்டை யடைவர். கங்காநதி சூழப்பு ட்ட காசியாதிய க்ஷேத்திரங்களைக் காட்டிலும் பரிசுத்த மிருந்த தலமாகிய திருப்பரங்கிரியி னுண்மையைச் சொன்னோம். இம்மட்டோ இந்தத் தலத்தில் வந்து அரைக்ஷண மிருந்து போகும் உயர்ச்சி யுள்ளவரை முருகக்கடவுள விடாமற் பின் சென்று இரக்ஷித்தருளுவர். அண்டமுகட்டை யளாவி நிற்குந் திருப்பரங்கிரியின கதையாகிய அமுதத்தைக் காதினாலே யுண்டு மகிழ்ச்சியடையு முனிவர்களே! உமது பிரயோசனத்தை யெவர் சொல்லவல்லவர்? இந்தக் கதையைச் சொல்லிய எமக்கும பெரும்பயனேயாகும். புலவராற் சொல்லியென்னே? எமக்கும் இந்தத்தலத்தில் வசிப்பதற்கு ஆசையதிகமேயாம். பூலோகத்திலே யிந்தத் திருப்பரங்கிரியானது கிரேதாயுகத்திலே சத்தியகிரியெனவும் திரேதா யுகத்திலே சுமந்தவனமெனவும் துவாபரயுகத்திலே விஷ்ணுத்துருவ மெனவும் கலியுகத்திலே குமராபுரியெனவும் பெயர் பெற்று விளங்கும். சிபியென்னுமொரு அரசன் பூதானஞ்செய்து மோக்ஷத்தை யடையும் இந்தத்திருப்பரங்கிரியின் சரித்திரங்களுக்குள்ளே யிந்தக் கதையைச் சொன்னவர்களுங் கேட்டவர்களுங் கங்காநதியையுஞ் சந்திரனையுந்தரித்த சடாமகுடத்தையுடைய சிவபிரான் குமாரனாகிய முருகக்கடவுளது கருணையைப் பெற்றுப் பூலோகத்திலே பெருவாழ் வடைந்திருப்பார்கள்.

மூன்றாவது குமாரன் தவஞ்செய்த சருக்கம் முற்றிற்று.

## நான்காவது சிபிவேந்தன் பூதானச்சருக்கம்.

நூற்பொருளை யாராய்ந்த சவுனக முனிவர் மதுரம் பெருகியூறுங் கதைகளைச் சொல்லுஞ் சூதமுனிவரை வணங்கிச் சுவாமீ! சிபிவேந்தன் திருப்பரங்கிரியிலே வந்து பூதானஞ்செய்து மோக்ஷமடைந்த காரண மென்னையென்று கேட்க, சூதமுனிவர் சொல்லுவார்: காமபீலி தேசத்திலே, சூரியகுலத்திற் பிறந்து, சிபியென்னும் பெயரை யடைந்த அரசன், சமுத்திரம்போன்ற ரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைப் பெருக்கத்துடனே யிருந்து நீதிச்செங்கோல் செலுத்தி, உலகமெல்லாம் அரசாட்சிசெய்து, மணிமகுடந் தரித்துச் சகல சாத்திரபண்டிதனாய்ப் பகையரசர்களை வென்று, எல்லாவுயிர்களையுந் தன்மகவைப் போலவே யிரக்ஷித்து, வெகுகாலம் வாழ்ந்து வந்தான். பின்னொரு தினத்திலே புண்ணிய மிகுந்த தீர்த்த யாத்திரை செய்ய நினைந்திருந்தான்: அந்தச் சமையத்தில் விபூதி பொதிந்த மெய்யையும், வேதங்களையோதும் நாவையும், கருணைசுரக்குங்கடைக்கண்களையும் உடையவராய்க் கௌதமமுனிவர்வந்து சேர்ந்தார். அவர் வரவை அரசனறிந்து எதிர்கொண்டழைத்துவந்து அருக்கிய பாத்திய முதலாகிய உபசாரத்துடனே யாசனத்தி லிருத்தித் தலைவணங்கித் தொழுது போற்றித் தன்னுடைய மனைவிமக்கள் முதலானவர்களையும் வணங்கச் செய்வித்து அவர்களுடனே பிரதக்ஷணஞ்செய்து எதிரேகரங்களைக் குவித்து நின்றான், இப்படி வணங்கி நின்றவர்களை

நோக்கிக் கௌதமமுனிவர், உலகமெல்லா மொரு குடை நிழலிலே வைத்துச் செங்கோலை செலுத்தி வாழ்ந்து சேமமாக இருக்கின்றீர்களாவென்று வினவிப் பின்னும் அரசனைத் தனியே நோக்கிச் சொல்லுவார். வாராய் அரசனே நீ பிறந்த தினத்திலே நவக்கிரகங்களிலே சூரியன் இராகு கேது செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஒழுங்காக இராமல் நிலைதப்பி இருந்தன. இப்படி யிருந்தும் நீ நீதித்தரும ஞைகயினாலே யொன்றையு நினையாதிருந்தாய் ஆதலால், தருமமே தனித்த காலத்திலே யொப்பற்ற துணையாகும்; தருமம் பொருள் காமம் மோக்ஷம் ஆகிய நான்கு பொருள்களையுங் கொடுக்கும்; பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்கிற நான்கு வருணத்தையு மெய்யாக நிலை நிறுத்தும்; ஆறு சமயங்களையும் பிறவற்றையுங் காக்கும். அரசனே! இளமைப்பருவத்தை யுடையவரா யிருந்தாலும், யௌவன பருவத்தை யுடையவரா யிருந்தாலும், விருத்தப்பருவத்தை யுடையவரா யிருந்தாலு, மேலுமேலும் வளர்கின்ற தருமங்கள் செய்யவேண்டும்; சரீரமானது கண்ணாடியிலுள்ள உழுந்துருளுமளவு மிருப்பதென்பதும பொய்யாம். அதற்குள்ளே யமன்வந்து வளைந்து கொல்வானென்பதும் அறியார். காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் எனப்படுங் கள்ளர், பின்னே நடந்து செல்கின்றவர், தருமத்தை நினைக்கவுமாட்டார், கேடு வருமேயென்று மனமு மெலியார். அப்படிப்பட்ட தீமையி லகப்படாதவர்களே தருமஞ்செய்வார். அரசனே! தருமந் தூலம் சூக்குமம் என இரண்டு பகுப்பினதாகும்; தூலதருமத்தைப் பார்க்கிலுஞ் சூக்

க்கும தருமமே மேலானது; அதையே செய்யவேண்டும், தூல தருமம வாஙகுவோரை அது நரகத்திலே செலுததி விடும். சூக்கும தருமமே நல்லது. தருமஞ்செய்யப் பொருளி ல்லாதவர்கள், பொருளுடையாரைத தண்டித்தாவது, தரும ஞ்செய்தலா லுண்டாகிய பயனை யெடுத்துச் சொல்லித் தரு மஞ்செய்விக்கவேண்டும்; நமபோலியர்களெடுத்துச் சொல லுந்தருமம வெகுநுட்பமாகும், கொடுபபோனுங்கொள்வோ னும் நன்மை பெறினுந் தானததுள்ளே கன்னிகாதானமுங் கல்விததானமும பூமிதானமும் மிகுநத பயனுடைய தான ங்களாகும். பிரகாசம் பொருநதிய இரத்னாபரணஙகளைப் பூட் டிக் கனனியைத் தானஞ்செய்தோரும அநதக்கன்னியை யாசையினு லேற்றுக்கொண்டோருமாகிய இருவரும, பிரம லோகத்திலே யொருகறபகாலம வாழநதிருநது பூலோகத் திலே நல்ல சாதியிலேவநது பிறநது வாழ்நதிருபபாாகள். கல்விததானஞ் செய்தோரும் அதை யேற்றுக்கொணடோரு மேற்கூறிய தானததின் பலனை யடைவார்கள். பூதானம சிவபிரானிடத் தன்புள்ளவராய்த் தமபதிசமேதராய் யாகஞ் செய்த சிவப்பிராமணர் ஆயிரத்தெட்டுப் பேருக்காவது அல்லது நூற்றெட்டுப் பேருக்காவது அல்லது ஏட்டுப்பேரு க்காவது கொடுக்கவேண்டும. இநதத் தானத்தினுலுண்டா கும் புகழானது சூரியசநதிரர்களுள்ளமட்டும் நிலைநிற்கும். இதன்பயனை யோசிக்குமிடத்தில் தானங்கொடுத்தவர், தாங் கொடுத்த நிலத்திலேவிளைநத ஒவ்வொரு நெல்லுக்கும் ஒவ் வொரு தேவவருடங் திருக்கயிலாசமலையிலே வாழ்ந்திருப் பாரென்று சொல்ல, சிபிவேநதன் கேட்டு மிக்க சந்தோஷ

மடைந்து கௌதம முனிவரை வணங்கி அவருக்கு வேண்டியன வெல்லாங் கொடுத்து அவ ரிருப்பிடத்துக் கெழுந்தளச்செய்வித்துப பின்னர் சுற்றத்தாரும் புத்திரர்களுங் குறிப்பறிந் தேவல்செய்யு மந்திரிமார்களுந் தன்னைச் சூழ்ந்துவர விபூதி ருத்திராக்ஷதாரணமுஞ் செய்துகொண்டவனாகிச் சிவ பிரானையே துதித்து மிகுந்த திரவியங்களை ஒட்டகங்கள் மேலேற்றிக்கொண்டு சதுரங்க சேனைகளுடனே புறப்பட்டு வேதப் பிராமணர்கள் மங்கலவாழ்த்துக்கூறக் காடுகள் மலைகள் பலவுங்கடந்து பெருமைதங்கிய ரதத்தைச் செலுத்தி வந்து கங்கைநதிசூழ்ந்த காசி, கயா, பிரயாகை, சிந்துவாகினி, [illegible]வேணி, கோதாவரி, கோதமை, நருமதை, துங்கபத்திரி, குலிங்கம், நைமிசாரணியம், வரநதி, சத்தசங்கம், பார்வதேச்சுரம், விசாலேசசுரம், விமலேசம், பருப்பதம், குகாரணியம், அயிராபதேச்சுரம், பருப்பதேச்சுரம், திரியம்பகம், காஞ்சி, காளத்தி, திருவேங்கடம், திருவோத்தூர், அருணை, விருத்தாசலம், சீகாழி, சிதம்பரம், சாய்க்காடு, புள்ளிருக்குவேளூர், திருவெண்காடு, காவிரிசங்கமத்துறை, மாந்துறை, பொன்னியந்துறை, மத்தியார்ச்சுனம், சண்பகவனம், திருவாரூர், வேதாரணியம், ஆலங்காடு, மாதவிவனம், திருவையாறு, சம்புகேசுரம், இராமேசுர முதலாகிய புண்ணியதீர்த்தங்கள் சிவஸ்தலங்களெல்லாஞ்சென்று வணங்கி, தீர்த்தமாடி மதுராநகரத்திலே வந்து சோமசுந்தரப்பெருமானை யிறைஞ்சித் தென்மேற்றிசையிற் சென்று, திருப்பரங்கிரியைக் கண்குளிரத் தரிசித்து, ஹரஹர வென்று இரண்டு கைகளையுந் தலைமேலே குவித்து நிற்கும் போது, அம்மலையிலுள்ள கிளிகளெடுத்துக்கூறும் வேதமுழ

க்கும் இருசெவிகளிலும் வந்து புகுவதைக்கேட்டுப் பரவச
னுள்ளச் சிமிவேந்தன் திருப்பரங்கிரியினிடத்துவந்து, அமுத
மயமாகிய நீர்த்துளிகளை அலைகள் வீசாநின்ற சரவணப்பொ
ய்கையைக் கண்டுதரிசித்து அதிலே விதிப்படி ஸ்நானஞ்
செய்து அப்பாற்சென்று சத்திபகூவ தீர்த்தத்திலேமூழ்கி
அதன்மேற் புத்திர கூபத்தையடைந்து அதிலே படிந்து
வேதமந்திரங்களை யுச்சரித்து வேதத்தில் வல்லவராகிய பிரா
மணர் கரத்திலே சொர்ணதானங்கொடுத்து அங்கங்கே தவஞ்
செய்துகொண்டிருக்கு முனிவரைப்பணிந்து அவர்களாலாசி
கூறப்பெற்றுப் பின்பு ஆகாயத்தைத யளாவிய உன்னதமான
கோயிலினுள்ளேபுகுந்து, பரங்கிரிநாதரையும் முருகக்கட
வுளையும் பணிந்து துதித்துப் புறத்தே வந்து கோடிமாணாக்
கர் பரவ வீற்றிருந்த மார்க்கண்ட முனிவரைக்கண்டு, பரம
சிவனென்றே வணங்கி நெக்குருகித் தோத்திரஞ்செய்து
அங்குநின்ற மகாமுனிவரர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றுத்
திரும்பும்போது, தீர்த்த யாத்திரையாகவந்த பவளம்போ
ன்ற சடையினையுடைய மகாமுனிவர் பலரை யெதிர்கண்டு
தரிசித்து நின்றபின், நாரதமாமுனிவர் அரசனைநோக்கி முரு
கக்கடவுளைத் துதித்து நிற்கின்ற நாவினாலே யுக்தத் தலத்
தின் பெருமையைச் சொல்லுவரா. கடல்சூழ்ந்த வுலகத்தி
லே யிந்தத்தலம் உயர்ந்ததாகும். இதிலுள்ள தீர்த்தங்கள்
பரிசுத்தமுள்ளனவாகும். பதிபசுபாசமென்னு முப்பொருளி
னியல்புணர்ந்த பெரியோர் சிவமே சத்தியமென்றும் பர
மென்றுங் கூறுவர். சிவமே யிந்தமலைவடிவா யிருத்தலா
லிதற்குச் சத்தியகிரியென்றும் பரங்கிரியென்றும் பெயரா

னது, என்றுசொல்ல அரசன்கேட்டுச் சூலாயுதத்தைத் தாங்கிய கையையுடைய சிவபிரான் பஞ்சகிருத்தியஞ் செய்து, ஐந்திருந்தீ காலத்திலுங் கெடாம லோங்கி வளர்ந்து, அடி முடி நடுவறியப்படாத பரங்கிரியாகிய கடவுளே சரணமென்று துதித்து வலஞ்செய்துபோய் ஒரு சோலையின்கண்ணே யிருந்து யோசனை செய்வான்; கேதாரம் சேதுவைப் பார்க்கிலும் புனிதமாகிய இந்தத்தலத்திற் பிராமண ரொருவரைப் பிரதிட்டை செய்துவைத்தாற் பிரமலோகத்திலே கோடி பிராமணரைப் பிரதிட்டைசெய்த பலனுண்டாமென்று நினைத்து, தன்னுடைய தேர்ச்சாரதியை நோக்கிக் காசிக்ஷேத்திரத்திலே சென்று ஐஞ்ஞூறு வேதப் பிராமணரைத் தெரிந்தெடுத்துத் திருப்பரங் கிரியாகிய இந்தத் தலத்தின் பெருமையை முழுதுஞ்சொல்லி அவர்களைக் குதிரை கட்டிய ரதத்தின்மேலே யழைத்துக்கொண்டு வருகவென்றனுப்பிவிட்டு, அவன் வருதற்கு முன்னமே தேவகம்மியனை வரவழைத்து, தேவருலகம்போலவே ஐஞ்ஞூறு மாளிகை யமைந்த கிரகங்க ளுண்டுபண்ணும்படி யுத்தரவுசெய்தான். உடனே தேவதச்சனுஞ் சுபமுகூர்த்தத்திலே சிற்பசாத்திர விதிப்படி யுன்னதமாகிய மாளிகை பலவிதமாகச்சமைத்து, இலக்குமி யெப்போதும் கிரகந்தோறும் வாசஞ் செய்து நீங்கா திருக்கும்படியாகிய யந்திரங்களை யங்கங்கே யமைத்துச் சிபி யரசனிடம் வந்து சொன்னான். அவனும் அதுகண்டு மகிழ்ந்து உலாவிநிற்கும்போது, காசி நகரத்துக்குச் சென்ற சாரதி ஐஞ்ஞூறு வேதப்பிராமணரை யழைத்துக்கொண்டு, இரதத்தை விரைந்துசெலுத்தி வருவதைக்கண்டான். உட

னை யெதிர்கொண்டு அவர்களைப் பணிந்து, இரண்டு கண்க ளுங்குளிர நோக்கிக் கிரீடந்தரித்த தலையசைத்துநீங்களிங்கே வர முன்னமே தவஞ்செய்தேனென்று பலபல விதமாகத் தோத்திரஞ் செய்தான. பிராமணர்களும அநேக ஆசிகூறி னர்கள். அரசனவர்களை யழைத்துக்கொண்டு கோயிலி னுள்ளே புகுந்து சிவபிரானுடைய சந்நிதி முன்பும குமா ரக் கடவுள் சந்நிதானத்தின் முனபும நின்று சொல்லு வான். வையைநதி பரவிய சதுர்வேத மங்கலமென்னுங் கிராமத்திலே பாதி நிலத்தைச் சிவபிரானுக்குத் தானஞ் செய்து, இந்தத் தானஞ் செய்ததனாலே சிவபிரான் தரி சன மிந்தக்ஷணமே வேண்டுமென்று பிரார்த்தித்து. பின் னர் மற்றொருபாதிநிலத்தைக் கூடவந்துநின்ற பிராமணர்க ளுக்குத் தானமாக ஒவ்வொருவர் கையிலும நீரைவார்த்துக் கொண்டுவந்தான். வரும்போது அந்தப் பிராமணர்கள் ஐஞ் னூறுபேரில் ஒருவரைக்காணமல் பெருமூச்சுவிட்டு வரு ந்தி ஐயோநான் பூருவத்திலே செய்த கன்மத்தினாலோ இம் மையிலே செய்த பாவத்தினாலோ என்னுடைய சங்கற்பந்த விரும் விதமாகவந்ததேயென்று, மனது நைந்து நைந்து உரு கிக் கீழேவிழுந்து, நித்திரைசெய்து கனவுகண்டெழுந்தவ னைப்போ லெழுந்துநின்றான். அப்போது பரமேசுரன் அரச னது பேரன்புக்கிரங்கி, யொருபிராமணர் வடிவங்கொண்டு மலைபோலும் வீங்கியபுயத்தில் விளங்கிய வெள்ளருவிபோ லச் சுற்றிய வுத்தரிய வெண்பட்டும தக்கன் யாகத்திலே பட்டபாட்டை இரண்டுகாதினுஞ் சொல்லவந்த இரண்டு சூரியர்களைப்போலும பிரகாசிக்கின்ற இரத்நமிழைக்கபபூட்

டபொற்குழைகளும் விபூதியணிந்த நெற்றியும் உருத்திராக்கமணிந்த திருமுடியுமார்புஞ் சந்திரோதயம போன்ற முகமும சந்திரகிரணம போன்ற புன்முறுவலும் பிரகாசிக்க வந்தார். உமாதேவியும விநாயககடவுளும் குமாரக்கடவுளும அவரவர்களுக்கேற்ற திருவுருக்கொண்டு வந்தார்கள். இவ்விதமாக மனைவிமக்களுட னெதிரே தோன்றிய பிராமணரை அரசன் கண்டு அதிசயித்து ஆனந்தபரவசனாய் நின்று வணங்கி யிந்தப் பூமண்டலஞ் செய்ததவத்தின் பிரயோசனமோ, அறிவில்லாத யான்செய்த தவபபெருமபேறோ, சந்திரனைத் தரித்த பரமசிவனை யொப்பாகிய இவர்களிந்த இடத்திலே தோன்றியதற்குக் காரணம் வேறென்னையோ வென்று வியந்து, அந்தப் பிராமணரைநோக்கிச் சுவாமீ! நீ ரெந்தவூர், உமது பெயரென்னவென்று கேட்க, பிராமணராய்வந்த சிவபெருமான் சொல்லுவார். அரசனே கேட்பாய்; நம்முடைய பெயர் பரங்கிரிகுமரன; நாமெல்லாத் தலங்களிலுமிருப்போம், தலங்களெல்லாவற்றிலு மிந்தத்தலம் பரிசுத்தமுள்ளதல மாதலால், நாமுமிங்கிருப்பதற்கு வந்தோமென்று சொன்னார். அதுகேட்ட காமபீலிதேசத்தை யாளுஞ் சிபிவேந்தன் மனமகிழ்ந்து அவருடைய பாதங்களிலே குளிர்ந்த மலர்களைத் தூவித் தூப தீபத்தாற் பலவகை யுபசாரஞ் செய்து புனிதமாகிய நீரை யவர்கரத்திலே பூதானமாக வார்த்து, இரண்டுகைகளையும குவித்து நின்றான். அப்போது அந்தப பிராமணரும் ஆசிகள்கூறி, மற்றைப்பிராமணர்களுடன் சேர்ந்து தாமுமொருவராகத் தமக்குத் தானஞ்செய்த மாளிகையுள்ளே மனைவிமக்களுடன் புகுந்து வீற்றிருந்

தார். இவ்விதமாக எல்லாபபிராமணரும் தங்கள் தங்கள் மாளிகையிலே புகுந்திருந்தார்கள். அதன்மேல் அரசன் பரமேசுரனுடைய திருவருளைச் சிந்தித்து வணங்கி யிராமேசுரமாகிய சேதுசென்று தரிசித்துத் திரும்பித் தனது காம்பிலிநகரம்வந்து தனது அரணமனையிற் புகுந்து முனபோலச் செங்கோல்செலுத்தி, வெகுகாலம அரசாட்சிசெய்திருந்து, பின்பு கயிலாசமலையை யடைந்து நீடூழிகாலம வாழ்ந்து சிவபிரான் றிருவடி நீழலிற் கலந்தான். உலகமெல்லாம புகழுந்திருப்பரங்கிரியிலே யொருதின மிருந்தவரும் கொடிய பிறவியை மாற்றுவாரென்றால், அந்த அரசன் மோக்ஷமடைவது அரியதோவென்று சூதமுனிவர் சொல்லியருளினர்.

நான்காவது சிபிவேந்தன் பூதானச்சருக்கம் முற்றிற்று.

---

## ஐந்தாவது பிரமகூவச்சருக்கம்.

கல்வியாகிய சமுத்திரத்தையளந்து மகிழ்கின்ற சூதமுனிவர் தமது சொற்பொருளை யுணருந் தகுதியையுடைய சவுனகமுனிவரைப் பார்த்துச் சொல்லுவார். தவசிரேஷ்டமுள்ளவர்களே கேளுங்கள். யமனை யுதைத்த திருவடியையுடைய சிவபெருமானும் முருகக்கடவுளு மெழுந்தருளியிருக்குஞ் சத்தியகிரியென்னுந் திருப்பரங்கிரியின் சரித்திரங்களுக்குள்ளே, கேட்டவர்களுடைய வல்வினையைக் கெடுக்கு மொருகதைசொல்வோம். கோதமிநதி தீரத்திலே காலவனென்னு மொரு பிராமணன் வேதவொழுக்கந் தவறாது

தருமஞ் செய்பவனுகி யில்லறத்திலிருந்து பிதாமாதா மகிழ்ச்சியடையும்படி, அவர்களுக் கேவல்செய்து நற்குண நற்செய்கையுள்ள மனைவியுடனே வாழ்ந்திருந்தான். இப்படியிருக்குங் காலத்திலே தேவர்களும் புகழத்தக்க பெரிய தவங்களைச் செய்த தேவதூதி யென்னும் பெயரையுடைய முனிவர், அவனிடம் வந்து சேர்ந்தார். உடனே காலவனெழுந்து, அவருடைய பாதங்களிலே புட்பங்களைத் தூவித் தலைவணங்கிச் சுவாமீ! இங்கெழுந்தருள எத்தவமுடையேனின்றைத்தினம். அடியேன் கிரகத்திலே பூசை போசனஞ் செய்தருள வேண்டுமென்று கூறுதலும், அம்முனிவரதற்கிசைந்து தேவாமிர்தத்தினு மினிய விருந்தருந்தி யிருந்து பல வார்த்தை பேசிக்கொண்டிருக்கும்போது, உலகத்திலே யதிசயம் விளைக்குந் தீர்த்தங்களுக்குள்ளே மோக்ஷத்தை யெளிதிலே தரத்தக்க புனிததீர்த்தத்திலே மூழ்கி வந்தனம், வெண்ணிற விபூதி பிரகாசிக்கின்ற நெற்றியையுடைய காலவனே! என்று தீர்த்த மான்மியங்களைச் சொல்லத் தொடங்கினர். கேதாரமலையிலேயுள்ள புட்கர் தீர்த்தம், காசியிலுள்ள மணிகருணிகை, பிரயாகை, கண்ணவேணி, வன்னி தீர்த்தம், சத்தாரணியத்திலுள்ள பிரம தீர்த்தம், ஆலங்காடு குகாச்சிரமம் காஞ்சியிலுள்ள தீர்த்தங்கள், வேகவதி தீர்த்தம், மாளவியத்திரி தீர்த்தம், சிதம்பரத்திலுள்ள சிவகங்கை, திருவெண்காட்டிலிருக்குங் காயத்திரி தீர்த்தம், காயாவனத்திலிருக்குஞ் சாவித்ரீதீர்த்தம், திருவிடைமருதூரில் முத்தி தீர்த்தம், கும்பகோணத்தில் காவிரி, கன்னிகா தீர்த்தம், தனுக்கோடி, சேது, அனந்தபுரம், தாமிரபருணி, பாவநாசம், அதன்பக்க

மேன்ள அத்திதீர்த்தம், பாண்டு தீர்த்தமு, வையைநதி, இந்த வையை நதிக்குப் பதியாகிய மதுரைக்குத் தென்மேற்றிசை யிலே யரை யோசனை தூரத்திலே யிருக்குஞ் சுமந்தவனத் திலே, முருகக்கடவு ளெழுந்தருளியிருக்கும் ஆறு தலங் களுக்குள்ளே முதலாவதாகிய திருப்பரங்குன்றமென்னு மலையொன்றுண்டு. அந்தத் திருப்பரங்குன்றத்துக்கு வட பக்கத்தில் தேவர்கள் முனிவர்கள் வந்து மூழ்குஞ் சத்திய வமென்னுந் தீர்த்தமிருக்கிறது. அதற்குக் கிழக்குப் பக் கத்திலே வயித்தியசாரக் கூவமென்னு மொரு தீர்த்தமிருக் கிறது. அது சந்திரனுடைய க்ஷயரோகத்தை மாற்றியது. அந்தத் தீர்த்தந் தன்னிடத்திலே ஸ்நானஞ்செய்வோருக்கு சகல வியாதியையும் போக்குதலால் அதற்கு எக்கால மும் வயித்தியசாரக் கூவமென்ற பெயர் நிலைத்திருக்கிறது. இதுவன்றியுந் தன்னை வந்து பார்த்தவருக்கும் நோயையும் பாவத்தையும் போக்குஞ் சரவணப் பூம்பொய்கை யொன் றுண்டு. அதிலே ஸ்நானஞ்செய்து சிவலிங்கப் பெருமானை யுங் குமாரக் கடவுளையும் பணிந்து துதித்து, மூன்றுதினந் திருப்பரங்குன்றத்தி லிருந்தேன். இப்படி யிருக்கும்போது நடந்த கதை யொன்று சொல்லுகிறேன்.

விசாலை நகரத்திலே பாண்டியன் குலத்திலே யுதித்த கோவிந்தராத்துவச னென்னு மொரு அரசன் பகை யரசரை யெல்லாம் வென்ற வேலாயுதத்தை யுடையவனாகி யுலக மெல்லாம் ஏக சக்கராதிபதியாய்ச் செங்கோல் செலுத்தி வருங்காலத்திலே யவனுடைய அரண்மனை வாயிலில் விபூதி ருத்திராக்ஷமாகிய சிவ சின்னங்களைத் தாங்கிய அநேக

மாணாக்கர்கள் சூழ அகத்தியமாமுனிவ ரெழுந்தருளினார். அவர் வரவை யறிந்த அரசன செல்வச் செருக்கினாலே யெழுந்திருந்து புட்புஙகளைத் தூவி வணங்கித் தோத்திரங் கள் செய்யாதவனாய்க் குருடன்போலச் சும்மா இருந்தான். உடனே அகத்தியமுனிவர் கோபங்கொண்டு மூன்றொரு காலத்திலே யிந்திரனைப் பாம்பாகச் சபித்த தமது திருவாயி னாலே தமது மாணாக்கருளளே சிறபபுறறவராய் முன்னே செல்லும பிரமிட்டமுனிவரைப் பார்ததுக் குற்றமுண்டாகிய அரசனகஙகாரங கெடுமபடி, அவனுக்குக் குட்டநோ ண்டாகச சாபங்கொடுவென்று சொல்லிபபோயினர். அந் வூரத்தலே பிரமிட்டமுனிவர், எல்லாருமிருக்கவும்எனக் குக் கட்டளையிட்டாரென்று மகிழ்நது அமுதமாக இரண்டு காதுகளாலு முண்டு, அரசனை யழைத்துப் பொய்வாழ்வை மதித்திருநத பேதாய்! உன்னுடைய அழகு கெடும்படி குட்டநோய் பெறக்கடவை யென்று சபித்தார். அந்த க்ஷணமே யரசன் சரீரமெல்லாம் வெண்குட்டநோய் வந்து மூடியது. அது எதுபோலிருந்ததென்றால்வெண்ணிறமாகிய விபூதி நிறையப்பூசிய முனிவர்க ளெதிரேவரத் தரிசித்தபுண் ணியத்தா லரச னவர்களுடைய சாரூபத்தை யடைந்தது போலும், அன்றி யமமுனிவர்களிடத்தில் வரம்பெற்று நீங் காத வெண்பட்டினாலாகிய சட்டையைப் போர்த்துக்கொண் டதுபோலும், அன்றியும அரசனது கொடைக்குப் பயந்து, நீருண்ட மேகம் வெளுத்து அரசனைவந்து சரணடைந்து சூழ்ந்ததுபோலும். கரிய மை யெழுதிய கண்களையு முத் துப்போன்ற பற்களையுமுடைய இளம்பருவப் பெண்கள்

முயல் கொள்ளுமபடி யழுகுவாய்த்த தன் சரீரமுழுவது மிவ்விதம் வெண் குட்டம வாகது வளர்ந்ததைக் கோவி தாரத் துவச னென்னு மன்னவன் பார்த்துப் பார்த்து, "ஐயோ ஐயோ இந்த வெண்குட்ட நோய் பெறுவதற்கா சரீரமெடுத்தேன்? இளஞ்சேரிநி மயமாகிய பொன்னுக் குச் சமமான தேகத்தினழகு மெவ்விடத்தூக்குப்போய்தோ? வேற்றரசர்களிது கேட்டு வசைமொழிகள் சொல்லாரோ? க்கோவ்வைக்கனிபோன்ற வாயையுடைய இளமபருவப்பெண் ௗள் பார்ப்பதை வெறுத்து நகைத்து இகழ்ச்சி செய்யாதிருப் பரோ? உயிரிருந்தும் பிறநதவனைப் போலானேனே. அரசர்க ளெல்லாருங் கைகுவித்து நிற்க ரத்நசிங்காதனத்தில் வீற்றி ருப்பேனோ, வெட்கமில்லாமற் றிரிவேனோ? அந்தோ! இந்த விசாலைபுரியை யாளுதற்கொரு புத்திரனுங்கூட வில்லையே!" யென்று கண்ணீர் தாரைதாரையாக வோட அழுது தனக் குச் சரூபந்த்த பிரமிட்ட முனிவருள்ளத்திலே யிரக்கம வரும்படி துதித்து அவருடைய இரண்டுபாதத்தையும் பிடி த்து விடாமல் வைந்து வருந்துஞ் சமயத்தில், அம்முனி வருங் கருணைகூர்ந்து மனமிரங்கிப் பொறுமைகொண்டு சொல்லுவார். அரசனே! உன்மீது கோபந்தணிந்தது. இனி நீ குட்டவியாதி நீங்கி முன்போல அரசாட்சி செய்யவேண்டு மானால் நசம சொல்லு முண்மையைக் கைக்கொள்ளென்று சொல்லுவார். மதுராநகரத்திற்கு நிருதி திசையிலே சோலை சூழ்ந்த திருப்பரங்கிரியானது சிவி வேந்தனாலே பூதானஞ் செய்யத் தேவதச்சனாலே செய்யப்பட்ட வீதிகளையுடைய மாமதானபுராம். அந்த மலைக்கு வாயு திசையிலே நாலுநா

விற்கிடைதூரத்திலே, பிரமாவினாலே யுண்டுபண்ணப்பட்ட தீர்த்தமொன்றிருக்கிறது. அதன் பெயர் பிரமகூவமாம். பிரமன் அதிலே மூழ்கிச் சரசுவதியைக் கலியாணஞ் செய்ததனாலே கலியாண கூவமென்றும் பெயராம். அந்தத் தீர்த்தத்திலே மெய்யன்போடு நெஞ்சமுருகிவந்து தீர்த்தமாடினால் பெருவியாதியாகிய குட்டநோய் தீரும். இன்னும் கேள், அரசனே! பிரமன் றனக்கு விவாகஞ் செய்ய நினைத்துத் திருப்பரங்கிரியிலே கற்பக விநாயகரை வேதமந்திரத்தால் மலர்களைத் தூவிப் பூசித்து, அவரது திருவருள் பெற்றான். பின்பு மேற்றிசையிலே சங்கு சக்கரதாரியாகிய விஷ்ணுவைப் பூசைபண்ணித் தோத்திரஞ் செய்தான். அதுவன்றி, நீலநிறமுள்ள துர்க்கையானவள் அசுரர்களுக்குத் தலைவனாகிய மகிடாசுரனைச் சங்காரஞ் செய்யச் சிவபிரானை யந்த மலையிலே தேவவருடத்திலே மூன்று வருடம்பூசித்து, இரவும் பகலுந் தவஞ்செய்ய, சிவபிரான் இடபாரூடராயெழுந்தருளி, அவள் முன்பு நின்று காட்சிதந்து, வேண்டிய வரங்களைக் கேளென்று கூறத், துர்க்காதேவியுந் தான் விரும்பிய வரத்தைக்கேட்க, சிவபிரான் அவளுக்குப் பஞ்சாக்ஷர மந்திரோபதேசஞ்செய்து சொல்லுவார். நமது குமாரனாகிய குகனுக்கு முதற்பதியாகிய இந்தத் தலத்திலே வந்தவர்களிடையூறுநீக்கி நல்ல புவசிகளும் புகழ்கின்ற நடுநாயகமாகக் குமரவேள் கோயிலிலிருவென்று அருளிச்செய்து மறைந்தார். உடனே துர்க்கையும் திருவருள் பெற்ற வலத்தால் மகிடாசுரனைக்கொன்று அவன் றலையிலே மிதித்துக்கொண்டு நடுநாயகமாக வடதிசையை நோக்கி

பிருக்கின்றாள். அவளையும பிரமதேவன் பூசித்துப் பின்பு சிவபிரானை யாராதித்து முருகக்கடவுளைச் சோடசோபசார த்தாற் பூசனைபுரிந்து திருவருள்பெற்றுச் சரசுவதியை மண ந்து நீங்காத மகிழ்ச்சியாகிய கடலிலே மூழ்கினான். அதன் மேற் பிரமகூபதீர்த்தத்திலே மனைவியாகிய சரசுவதியுடனே மூழ்கித் தருப்பண முதலியவைகளை விதிப்படி செய்து திருப்பரங்கிரியைப் பிரதக்ஷணம் வந்து தமது சத்தியவுல கிற்போய்ச் சேர்ந்திருந்தான். இவவிதம் விளங்கித் தன்னிடத் தில் வந்து மூழ்குவோர்க்கு இம்மையிலே வாழ்வும் மறுமை யிலே மோக்ஷமுங் கொடுக்கும பிரமதீர்த்தத்திலே நீபோய் ஸ்நானஞ்செய்தால் வெணகுட்டநோய் நீங்கி முன்போலவே யுலகத்தை யரசாட்சி செய்வா யரசனே! என்று பிரமிட்ட முனிவர் சொல்லிவிட்டுத் தமதிடத்துக்குச்சென்றார் அதன் மேல் கோவிதாரத்துவசனாகிய அரசன் அப்பொழுதே யெழு ந்துவந்து திருப்பரங்கிரியையடைந்து பிரமகூபதீர்த்தநீராடி வெண்குட்டநோய் நீங்கி முன்னையினும, பிரகாசமடைந்து சிவபிரானையு முருகக்கடவுளையும் பணிந்து தோத்திரஞ் செய்து கிரிப்பிரதக்ஷணம வந்து தன்னுடைய விசாலை நக ரம் வந்திருந்து மகிழ்ச்சியுட னரசாட்சிசெய்துவாழ்ந்தான். இத்தன்மையான பயனை விளக்கும பிரமகூப தீரிலே மூழ் கிச் சிவலிங்கப்பெருமானையும் குமாரக்கடவுளையும் வணங் கித் திருப்பரங்கிரியை வலமாகச் சூழ்ந்து இவ்விடத்துக்கு வந்தோமென்று காலவனெனனும வேதியனுக்குத தேவத் துதிமுனிவர் சொல்லியருளிப்போயினர். இந்தப் பிரம கூபத் தீர்த்தமான்மியத்தைச் சொன்னவருங் கேட்டவருந்

தீங்களுக்குச் சாபத்தால் வாத பாவத்தை நீக்குவார், மணக்கோலமும பெறுவாரென்று தேவத்துதி முனிவர் காலவனுக்குச் சொன்ன நல்ல கதையாமென்று சூதமுனிவர் சவுனக முனிவருக்குச் சொல்லிமகிழ்ந்தனர்.

ஐந்தாவது பிரமகூவச்சருக்கம் முற்றிற்று.

---

## ஆறாவது தலவிசேடச்சருக்கம்.

---

வண்டுகளா முழங்குகின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் சரசுவதியை விவாகஞ் செய்து பிரமகூவமாகிய வேதகூவத்திலே ஸ்நானஞ்செய்த சரித்திரத்தைச் சொல்லியபின், தேவாகளும் புகழுந திருப்பரங்கிரித்தலத்தின் மான்மியத்தைப பரிசுத்தமான நினைப்புடைய சவுனக முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார். திருப்பரங்கிரியிலே யூறம்பெறடுத்துப பொங்கி வழிகின்ற புனிதமாகிய தீர்த்தங்களெளாபது, அவற்றி லிரணடு தீரத்தங்கள் மிகமேன்மை யுடையனவாகும். ஒன்று சரவணப்பொய்கை; அதிலே மூழ்குவோர் தருமார்த்த காமமோக்ஷமடைவார். மற்றொன்று சததியகூவமென்பது; அதிலே மூழ்கினோருடைய வலிமையாகிய தீவினைகள் நீங்கும். அன்றியுஞ் சக்கரவர்த்திகளறுவரி லொருவனாகிய அரிச்சந்திரனென்னும் அரசன் அதிலே வந்து மூழ்கிச் சத்தியவாக்குத் தவறாத நிலைமையைப் பெற்றுப் பொன்றாத புகழுடைமை

யும் பெற்றான். குமாரக்கடவு ளெழுந்தருளியிருக்கு மந் தத்தலத்திலே யொருகணமேனு மரைக்கணமேனும வசிப பவர்கள் தீவினை வேரறுத்துச் சிவசாரூப பதவியை யடை ந்து விளங்குவார்கள். இது சத்தியமே. மேகஙகள் வந்து நித் திரை செய்கின்ற உச்சியினையுடைய திருப்பரங்குன்றத் திலே யிருந்து தவஞ்செய்கின்ற மகாமுனிவர்க ளநேகர். அவர்களுட் சிலர்மகத்துவத்தை யெடுத்துச்சொல்லவேண்டு மானால் அனேகயுகமுங்காலங்காணாது. ஆயினுஞ் சிறிதெடுத் துச் சொல்லுகின்றோம். கபிலர், அத்திரி, கண்ணுவர், சவுன பாற்கரர், மரீசி, வசிட்டர், அங்கிரா, பிருகு, கோகிலர், தூமிரா, சங்கிரதித்தர் முதலாகிய பலரும், விபூதி ருத்திரா க்ஷந்தரித்த மார்பினையும, மரவுரிதரித்த அரையினையும், பத்தி மிகுந்த நெஞ்சினையும், கிழங்கு சருகு வாயு முதலிய வுணவையு முடையவராயுங் கொம்பு முளைத்த மிருக வடி வினை யுடையவராயும இரண்டு பக்கமும் சிறைமுளைத்த பக்ஷிவடிவினை யுடையவராயு மிருந்து பரங்கிரிநாதரையும் நின்மலசொரூபியாகிய முருகக்கடவுளையுந் திரிகாலமுந் தே னொழுகு மலரைத் தூவிப் பூசித்து வணங்கும் நியமமொழு க்கந் தவறாதவராய்ப பரமபொருளை யுள்ளங்கை நெல்லிக் கனிபோலக் காண்பவர். இந்தத் தகுதியையுடையதவ சிரே ட்டர்கள். தங்குந் திருப்பரங்கிரிக்குக் கூப்பிடுதூரம் வரை நான்குபக்கமும் தேவேந்திரன் முதலியதேவர்களும் திக்குப் பாலகர்களும் வந்து சிவலிங்கந் தாபித்துப் பூசைசெய்வார் கள். இப்படிப் பூசைசெய்தவருக்குப் பாவ வேரை யறுத்து வேண்டிய போகத்தையுங்கொடுத்து நெற்றிக்கண்ணையுடை

ய் சிவபிரானது சிவசாரூப்பியத்தையுங் கொடுத்துத் திருக் கயிலாச மலையிலே யிருத்தி மோக்ஷத்தையு மந்தத் தலங் கொடுக்கும். வேதங்களை யுணர்ந்த பிராமணருக்குக் கோதா னங் கொடுத்தால், கொடுத்த பசுவின் ஒவ்வொரு உரோமத் துக்கு ஒவ்வொரு கற்பகாலங் கயிலாசமலையிலே கொடுத்த வரை யிருக்கச் செய்யும். இந்தத் திருப்பரங் கிரியைச் சூழப் பூஞ்சோலையை வைத்து வளரச்செய்தோரும், குமா ரக்கடவுள் புயத்திலே சுகந்த புட்பமாலையை யணிவித்தோ ரும, அவருடைய கோயிலிலே திருவிளக்கிட்டோரும் பெறும பிரயோசனத்தை யெம்மாற் சொல்லமுடியாது, சிவபிரானே தான் சொல்லவேண்டும். மாதந்தோறும் வரு ஞ் சோமவாரதினத்திலே திருப்பரங்கிரியில் வந்து சிவபிரா னுக்கும குமாரக்கடவுளுக்கும அபிடேக நைவேத்திய முத லியவை செய்வித்துச சேவை செய்து விரதமிருப்பவர் வேறு தலங்களிறபோய்க் கோடி விரதஞ் செய்பவர் பெறும் பலனை யடைவர். முழங்குகின்ற அலைகளையுடைய சமுத்தி வள மிகுந்த திருப்பரங்கிரியிலே வந்து எந்த விரதத்தைச் செய்தாலும பிறதலங்களிற கோடி விரதஞ் செய்தபலனை கிடைக்கும். அன்றியும பாவமெல்லாம் நீங்கிப் பெருஞ் செல்வமடைந்து சுற்றத்தாருடனே வெள்ளியங்கிரியைச் சேர்ந்து வாழ்வார்; சிவபிரானுக்குரிய சோமவாரத்திலும் முருகக்கடவுளுக்குரிய விசாகநாளிலும அவ்விருவருக்கும் கொய்தெடுத்த மலர்மாலைகளைச் சாத்துவிப்போர் குறை யாத பலனை யடைவார்; திருப்பரங்கிரியிலே செய்யுஞ் சிவ பூசையின் பயனை யளந்து யாவர்? கூறுவார். அங்கே சண்

டு

டேசுர பூசைகளை விதிப்படி செய்விப்போர், உயர்ந்த மோக்ஷத்தை யடைவார்; இது உறுதி. அந்தத்தலத்துக்குவமான மில்லை. ஆதலால் கார்த்திகை மாதத்திலேவருங் கார்த்திகை நக்ஷத்திரத்திலே வந்து சரவணப்பொய்கையிலே தீர்த்தமாடிச் சண்முகக்கடவுளைப் பாலு பஞ்சாமிர்தம் பஞ்சகௌவியம் தேன் பழச்சாறு முதலியவைகளா லபிஷேகஞ் செய்வித்துப் புழுகுசாப்புச்செய்து அவர் விரும்பும் நீலோற்பல மலர்மாலை புனைவித்து அமுதம்போன்ற பலவிதமான நிவேதனங்களை யாறு திருமுகங்களிலும் நிவேதிப்பித்து விரதமநுட்டித்திருந்தோர் சமஸ்கிருதமுந் தமிழுமாகிய இரண்டு பாஷைகளிலும் பாடுதற்கு வல்லவராகி யுலகத்து யானோ மரசருமாவார். பஞ்சபாதகத்தையும் போக்குவார். பஞ்சாக்ஷர மந்திரத்தைக் குமாரக்கடவுள் சந்நிதியின்முன்னிருந்து ஆயிரத்தெட்டுருவாயினும் நூற்றெட்டுருவாயினுஞ் செபித்தவர் தாய் வயிற்றிற் பிறக்குங் கருவைக்கெடுத்துச் சிவசாரூபம் பெறுவர். ஐசுவரிய மிகுந்த திருப்பரங்கிரியின் ஐந்து கூப்பிடுதூரத்திலுள்ளோர் யிறந்தவர்களெல்லாருங் கதியடைவார்கள். இப்படிப்பட்ட தலத்திலே மரணங்கிடைப்பது எளியதல்ல. உலகத்தையே மெய்யென்று நம்பினோர்க்குச் சுயம்புத்தலமாகிய பழைய தலங்களி லிருப்புக்கிடைப்பதுமரிது. மனிதர் தாபித்த லிங்கத்தைப் பார்க்கிலுமுனிவர் தாபித்த லிங்கமுயர்ந்தது; அதைப்பார்க்கிலுஞ் சித்தர் தாபித்த லிங்கமுயர்ந்தது; அதைப்பார்க்கிலுந் தேவர்கள் தாபித்தலிங்க முயர்ந்தது; அதைப்பார்க்கிலுஞ் * சுயம்பு

* சுயம்புலிங்கம் தானே முளைத்தலிங்கம்.

இருக்குமுயர்ந்தது. இத்தன்மையாகிய சுயம்பு லிங்கமுள்ள சிவக்ஷேத்திரங்களுக்குள்ளே புராண சித்தாந்தங்களாற் சங்கேதமாயெடுத்துச்சொல்லப்பட்ட தலமே மிகமேலானது. அந்தத்தலத்திலே யிருந்த ஆசை யுந்நிகரித்தாலும், கலியுகத்திலே உய்யும்விதத்தைக் கோரிட்ட புறமெய்யிற் மனிதர்களுமுத்தியைப்பெறமாட்டார்கள். ஆதலாலே பல நூலாலே புகழப்படுந் திருப்பரங்கிரித்தலத்தின் மான்மியத்தை யறிந்து எத்தனை யிடையூறு வந்தாலு மதற்கெல்லாருஞ் சலியாமலங்கே யிடைவிடாது நீங்காதிருப்பவர் நரகத்தை யடையமாட்டார்கள். சந்திரனை தயமுந்து செல்லிரு சிகரத்தை யுடைய திருப்பரங்குன்றத்திலே நிலையாக இருந்து வாழுவார். அயலார் மனைவியை யிச்சித்தாலும் பசியாலே உண்ணக்கூடாதவருடைய வுணவை யுண்டாலும் சொர்ணத்தைத் திருடினாலும் இன்னுங் கொடுமையான பாதகமெல்லாஞ் செய்தாலும் நரகத்தை யடையமாட்டார். ஆனால் அவர்கள் செய்த பாதகங்கள் நீங்கியவிதமெவ்வெனில் ஐயனார் சூலத்தினாலே யவர்களைக்குத்தித் தாழ் துடிக்க இரத்தமொழுகச் செய்து நீவினையைத் தணித்து மோக்ஷத்திலே சேர்ப்பார். இந்தக் கதை வேதத்தினை வடித்தெடுத்துக்கொண்ட சாரமென்று நினைத்துக் கேட்பாருஞ் சொல்லுவாருஞ் சிவபிரானை யெனப் பாவித்துத் துதிக்கத்தக்கபா மோக்ஷத்தை யடைவர். இது சத்தியமே.

ஆறாவது தலவிசேடச்சருக்கம் முற்றிற்று.

## ஏழாவது அரிச்சந்திரச்சருக்கம்.

வாசனை மிகுந்த குளிர்ந்த சோலைகள் சூழ்ந்து வளந்தங்கிய திருப்பரங்கிரியிலுள்ள சத்திய கூவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்யும் புண்ணிய காலமும், ஸ்நானஞ்செய்யு முறையும், இன்னும் வேறு விசேடங்களும், அரிச்சந்திரமகாராசன் சத்திய கூவதீர்த்தத்திலே மூழ்கிச் சொல்லுறுதி தவறாத வரம் பெற்று மேன்மை யடைந்ததும், சவுனக முனிவர் கேட்கச் சிவநேசமறவாத சூதமுனிவர் கூறுவார். மன்மதன் மகிழ்ச்சி கூரும் இளவேனிற் காலமாகிய சித்திரை மாதத்திற் சித்திரை நக்ஷத்திரமும் பௌர்ணமியுங் கூடிய தினத்தில் சூரியனுதயமாகும்போது நித்தியகன்ம முடித்துச் சத்தியகூவ தீர்த்தத்தை யடைந்து வருணபகவானைத் தியானித்து வலமாகச் சூழ்ந்துவந்து அதன்பொடெதிர்நின்று பஞ்சாங்கமாகவும் அட்டாங்கமாகவும் நமஸ்காரஞ்செய்து, பிராமணருக்குத் தமமாலியன்ற தக்ஷணை கொடுத்துச் சங்கற்பஞ்செய்து அவர்களாலாசிபெற்றபின் கோமயம், எள்ளு, பச்சையறுகம்புல் இவைகளைத் தலையிலே தரித்துக்கொண்டு நாடோறுஞ் சிறிது சிறிதாகச் சம்பாதிக்கப்பட்டுக் கூடியிருந்த தீவினையாலாகிய பாவக்கூட்டங்களெல்லாந் தன்னைவிட்டு வெளியிலேவந்ததாக நினைத்து மந்திரஞ்சொல்லிக் கொடுமையாகிய எல்லாப்பாவங்களையும் போக்கியருளென் றெதிரே வணங்கி மூழ்குதல் வேண்டும். மனிதருக்கு விதித்த வயது நூறுக்குள்ளே யொருநாளாயினு மிந்தப்படி சத்தியகூவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்யவேண்டும்;

அது செய்யாதவர் முனிவருக்குள்ளே நடமாடும் பிணத்துக் குச்சமமாவார். மேன்மையாகிய திருப்பரங்கிரியையடைந்து வேதப்பிராமணருக்கு அன்னதானஞ் செய்பவர் சுற்றத்தாரோடு நெடுங்காலம் வாழ்ந்திருப்பார். இம்மட்டோ! சூரியசந்திரருள்ளவரையு மவர் சந்ததி பரம்பரை விருத்தியாகித் தழைத்திருக்கும். அத்தலத்திலே சிவபிரானுக்கும் முருகக் கடவுளுக்கும் வேதங்களை யோதி புணர்ந்தவர்க்கும் இனிய பாற்சோற்றை யூட்டுவிப்போர் வினை யெல்லாவற்றையும் கெடுத்துச் சகலபேற்றையு மடைவார். இன்னும் வைகாசி மாதத்திலே சோமவாரத்திலே வருநூ கேட்டை நக்ஷத்திரத் திறஞ் சத்தியகூவதீர்த்த நீராடிப் பிதிர்தருப்பணஞ்செய்தால் செய்தவரது பிதிர்கள் நரகத்திலே கிடந்தாலும் அதை விட்டுத் திருக்கயிலாச மலையை யடைந்து களிகூர்ந்திருப்பார்கள்.

சத்தியகூவதீர்த்தத்திலே யாவர் மூழ்கினாலும் அவர்கள் முயலகநோய், குட்டநோய், ஈளைநோயுடன் பூதங்களாலும் பேய்களாலுமவர்பட்ட துன்பங்களெல்லாம் நீங்கியருளடைந்து பின்பு நல்லகுலத்திலே வந்து பிறந்து மிகுந்த செல்வவான்களாயிருந்து முடிவிலே யரசர்கள் பதவியையு மடைவார்கள். இது நிற்க, இனி அயோத்திமாநகருக் கரசனாகிய அரிச்சந்திரன சத்தியவாய்மைபெற்ற கதையைச் சொல்லுவோம். கரிய கடல்சூழ்ந்தவுலகத்தி லெட்டுத் திசைகளிலும் அட்டகுல பருவதங்களைத் தனதெல்லைக்கல்லாக நிறுத்திப் பகையரசர்களை யெல்லா மொடுக்கி நீதியாகிய செங்கோலைச் செலுத்தி யொரு குடை நீழலிலே யுயிர்களை யெல்லாம்

வைத்துக் காக்கின்றவன், விபூதி ருத்திராக்ஷ தாரணஞ் செய்து சிவபிரானை நினைந்து நினைந்து தழும்பேறிய மனத்தை யுடையவன, குற்றமற்ற அரசர்கள் பலருள் மொருவரை யொருவர் நெருக்கி மோதுதலா லவர்கள் கிரீடமொன்றொடொன்று தாக்கப்பட்டு உதிர்ந்த சொர்ணமும் இரத்தினமும் மலைபோலக்குவிந்துகிடக்கும் திருமுற்றத்தையுடையவன, தான விவாகஞ் செய்யப்பட்ட மாதரை யெல்லாந் தாயெனவே நினைக்கும் நினைப்புடையவன, இத்தன்மையனாகிய அரிச்சந்திர மகாராஜன எல்லாவுயிரையுந் தன்னுயிரைப்போலப்பாதுகாத்து அரசுசெய்துவருங்காலத்தில தன்னுடையகுலகுருவாகியவசிட்டரை வணங்கி யொருநாள நீதிமார்க்கங்களைவினவுதற்றொடங்கினன். இப்படிக்கேட்ட அரசனுக்கு வசிட்டர பல பல நீதிகளை யெல்லா முறையே யெடுத்துச் சொல்லிப பின்பு சொல்லுவார்: எல்லா நீதியிலுஞ் சிறந்த உத்தமமாகிய நீதியாவது, உலகத்திலே யொருவன சொன்ன சொல் தவறாமல் நடப்பதுவே, இந்தச் சத்தியமாகிய விரதமே பரிசுத்தமாகிய பிரயோசனத்தை யுண்டாக்கும் தன்னுள்ளத்தைப புனிதஞ் செய்யும்; ஆதலாலே சத்தியமே யுறுதியானபொருளென்று நினைப்பாயாக என்று சொல்ல, அரிச்சந்திரன கேட்டு மனமகிழ்ந்து மணிமுடி யசைத்துச் சத்தியமாகிய மெய்யே கீர்த்தி யென்று கைக்கொண்டு சொப்பனத்திலும், உயிரிறந்துபடவரும் யுத்தகளத்திலும், வழக்கிலும், தன பக்கமேயிருக்கும் அரசர் முதலானோர் மகிழ்ச்சியினாலே செய்யும் விநோதத்திலும், இன்னுமெந்தக் காரியத்திலும் இருசொற் சொல்லுவதே யன்றிப் பொய்வார்த்தை

பேசத்தெரியாதவனும் உலகத்திலே பொய் சொல்லுவாரைக்கண்டால் யமனைக்கண்டதுபோல நடுநடுங்கி யொதுங்கிடுக்கிடுவான். இவ்விதமாக நீதி செலுத்தி அயோத்திமாநகரிலேயிருக்கும்போது எம்பிரானாகிய முருகக்கடவுளது திருவடித்தாமரையின் சீர்த்தியை வீணையிலே யிசைத்துப்பாடி நாரதமுனிவர் அங்கு வந்தனர். அவ்வரசன் ஆசனமெழுந்து அருக்கிய பாத்திய முதலிய கொடுத்து வணங்கி நிற்க, நாரதர் திருப்பரங்கிரியின் மான்மியமும் சத்திய தீர்த்தத்தின் மேன்மையு மெடுத்துக் கூறினர். சத்தியவாய்மை விரதத்திலே பூண்டுகொண்டிருந்த அரிச்சந்திரன் கேட்டு மிக மகிழ்ச்சியுற்றுச் சத்தியமாகிய செல்வத்தை நிலைபெறத் தந்தருளுந் திருப்பரங்கிரியாகிய சத்தியகிரியின் சத்திய கூபதீர்த்தத்திலே விருப்புமுற்றுத் தீர்த்தயாத்திரை செய்ய நினைந்து மந்திரிமாரை யழைத்துத் தீர்த்தயாத்திரைக்குச் சுபமுகூர்த்தம் வைக்கும்படி சொன்னான். உடனே மந்திரிமார் சோதிட சாஸ்திரிகளை வரவழைத்துப் பிரயாணத்துக் கேற்ற ஒருகாலத்தைக் குறிப்பிட்டு ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையு மொன்று சேர்த்து யானை யொட்டகம் இவற்றின் மேலே சொர்ணங்களையும் இரத்தினங்களையும் பொதியேற்றி யரசனுக்குத் தெரிவித்தார். அரசன் குறித்தகாலத்திலே தன் பரிவாரங்கள் சூழப்புறப்பட்டு இரதத்தைச் செலுத்திக்கொண்டு திருப்பரங்கிரிக்கும் அயோத்திமாநகரத்துக்கு மிடையிலே யிருக்குந் தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து வேதியர்களுக்குச் சொர்ணதானம் மழைபோலப் பொழிந்து, அங்கங்கேயுள்ள க்ஷேத்திரங்களை

யெல்லாம் வணங்கி விருத்தாசலம் வந்து மணிமுத்தா நதிக் கரையையடைந்து, அதிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்ஷந்தரித்து நித்தியகன்மமுடித்து விருத்தகிரிநாதரெழுந்தருளியிருக்குங் கோயிலுக்குள்ளேவந்தான். வரும்போது சந்நிதியிலே யுள்ள வன்னிமரத்தின் கீழிருந்து முனிவர்களுக் குபதேசஞ்செய்யும் உரோமச முனிவரைக்கண்டு அவருடைய சிவந்தபாதங்களை யெடுத்தெடுத்துச் சிரசிலே சூடிக் கண்ணிலே யொற்றித் துதித்து நின்றான். இப்படித் துதித்துநிற்கும் அரிச்சந்திரனை அம்முனிவர் கிருபைக்கண்ணாலே பார்த்து அரசனே! ஏழுலகத்திலும் நிலையான வுண்மைப்பொருள் சத்தியமே, இது எல்லார்க்குந் தெரியாது; சத்தியத்தைத்தவிரத் தனக்கு உறுதிகூறுந் துணைவர் வேறில்லை. நாடோறு மொருவன் சத்தியத்தைக் கெடுத்துக் செய்யும் புண்ணியத்தினாலே பயனில்லை; உலகமெல்லாந் திரிந்து சத்தியத்தைத் தவிரச் சம்பாதிக்குந் திரவியமில்லை; சத்தியத்தை நீங்கிச் சரீரத்தை வருத்தப்படுத்திச் செய்யுந் தவங்கள் வேறில்லை, சத்தியத்தைவிட்டு உறுதிப்படுத்துங் கல்வி யெது இருக்கிறது? சத்தியத்தைவிட்டு ஊர்தோறும் அலைந்து ஸ்நானஞ்செய்யுந் தீர்த்தம் எது? சத்தியத்தைப் போக்கிச் செய்யும் யாகமுமில்லை; சத்தியத்தைக் கொள்ளாதவனுக்குச் சற்குணங்க ளெப்படி வாய்க்கும்? எல்லாவற்றிலு முயர்ந்து விளங்கும் புண்ணியத்துள் யாகஞ் சிறந்தது; அந்த யாகத்தையுஞ் சத்தியத்தையும் ஒருதராசிலிட்டு நிறுத்தாலிரண்டுஞ் சமமாக நிற்கும்; ஆதலா லிவ்விரண்டு செயலையும் அரசனே! உலகத்திலே நீ செய்யவேண்

டும். வேதங்களா லெடுத்துச் சொல்லு மிவ்விரண்டு செயலையுங் கைக்கொண்டாய் அரசனே! உனக்குச் சமானமானவர் வேறொருவருமில்லை; இதுவல்லாம லின்னுமொரு செயலுமுண்டது; அஃதாவது திருமால் பிரம னிந்திரன் முதலான தேவர் முனிவர்கள் மலரிட்டிறைஞ்சுஞ் சிவபூசையாம்; அந்தசிவபூசையையுந் தவறாது நீ செய்தல்வேண்டும். மலையினிடத்தும், குகையினிடத்தும், பரிசுத்தமான பூமியினிடத்தும், பழமையான நதிக்கரையிலும், நல்ல ஆரணியத்திலும் முனிவர் வாசஞ் செய்யுமிடத்திலுஞ் சிவலிங்கம் தானே தோன்றும்; இப்படித் தோன்றிய சுயம்புலிங்கம் பூசைப்படியிலே மிகவுமுண்டாகக்கூடும். ஆகலா லித்தன்மையுடைய சுயம்புலிங்கத்துடனே விளங்குகின்ற முருகக்கடவுளெழுந்தருளி யிருக்கும் புண்ணிய க்ஷேத்திரஞ் சொல்லுவோங் கேட்பாய்: தமிழ்நாட்டிலே மதுராபுரிக்கு நிருதி திசையிலே காதயோசனை தூரத்துக்கப்பால் சத்தியகிரி யென்னுமொரு மலையிருக்கிறது; அம்மலை வாயு ஒருகாலத்திற் கந்தமாதன மலையிலே பறித்தெறிந்த சிகரமாம்; அதிலே குமாரக்கடவுளெழுந்தருளி யிருக்கின்றார். அதற்குத் திருப்பரங்கிரி யென்றுங் குமாரபுரி யென்றும் நாமமுமுண்டு. அதன்பெருமையைச் சொல்ல நாமா வல்லமையுடையேம்? அம்மலையின் சிகரத்தின் வடபக்கத்திலே சத்தியகூபமென்னுமொரு தீர்த்தமிருக்கிறது. அதிலே ஸ்நானஞ்செய்து நியதி முடித்து அங்கே சுயம்புவாகிய சிவலிங்கப் பெருமானையுங் குமாரக்கடவுளையும் பூசனைசெய்து தோத்திரஞ் செய்வோர் சனனமாகிய கடலைக்கடந்து முனிவர்களுக்கு மெய்த்தத்

கரிய மோக்ஷத்தை யடைவார். ஆதலால், அரசனே! நாரத முனிவர் சொல்லியபடி திருப்பரங்கிரிக்குச் சென்று சத்தியகூவ தீர்த்தமாடி மேற்செய்யவேண்டிய தவங்களைச் செய்யென்று உரோமச முனிவர்கூற, அரசன் மாசிமாத மகநக்ஷத்திரத்திலே யங்குச் செல்வேனென்று அவரைப் பணிந்து விடைபெற்று, விருத்தகிரி நாதரையும் பெரியநாயகியம்மையையும் வணங்கிப் போற்றித் தன் பெயரெழுதிய பொன்மாலையுடனே பூமாலையினை அவ்விருவருக்கும் அணிவித்துமீண்டு, மார்கழிமாதத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே சிதம்பரம் வந்து நடராஜப்பெருமானைத் தரிசனஞ்செய்து திரும்பி, பல சிவஸ்தலங்களை யாங்காங்கே தரிசித்துத் திருப்பரங்குன்றத்தில் வந்து சேர்ந்து, பொன்மயமான ரதத்தையுஞ் சதுரங்கசேனைகளையு மொருபுறம் நிறுத்தி விட்டுச் சுற்றத்தார் மந்திரிமார் சூழ்ந்து வரச் சென்று சத்தியகூவ தீர்த்தத்தை யடைந்து சங்கற்பஞ்செய்து ஸ்நானஞ் செய்து பசுமை தங்கிய சொர்ணத்தையும் மணிகளையுங் கைநிறைய வாரி வேதியர்களுக்குத் தானங்கொடுத்துக் கோயிலைநோக்கி வருவான்; வரும்போது நீண்ட சடைமுடியையுடைய கௌதம முனிவரை யிடையிலே கண்டு அவரைப் பரமேசுரனென நினைந்து அவரது திருவடியில் விழுந்து வணங்கி அருகில் நின்ற மாணாக்கர்களையுந் தன் கைகளைக் கூப்பித் தொழுது நின்றான். கௌதமர் மங்கல வாழ்த்துக்கூறிப் பூருவத்திலே செய்த தவப்பயனால் நாரதமுனிவர் சொற்படி யிங்கே வந்தாய்; சத்தியகூவதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தாய்; இனிச் சிவலிங்கப்பெருமானையுங் குமாரக் கடவுளையும் பூசித்துப் பணிந்து

போற்றிக் கோயிலுஞ் செய்து திருவிழாவு நடாத்தித் தரிசனஞ் செய் என்று சொல்ல, அந்தத் திருவாக்கைச் சிரமேற்றாங்கி யரசனைச் சிவபிரானையும் முருகக்கடவுளையும் பூசித்துந் தரிசித்தும் பேரானந்தங்கொண்டிருந்து தேவதச்சனை யழைத்துச் சிற்பநூல் விதிப்படி ஆலயஞ்செய்யும்படி யுத்தரவுசெய்தான்.

ஏழாவது அரிச்சந்திரச்சருக்கம் முற்றிற்று.

---

## எட்டாவது திருவிழாச்சருக்கம்.

அரிச்சந்திரனாகிய சக்கரவர்த்தி யாக்கினையைத் தலைமேலே தாங்கித் தேவதச்சன் திருப்பரங்குன்றத்துக்குவந்து, சிவபிரான் முருகக்கடவுள் முதலான தேவர்களுக்குப் பிரகாசம் பொருந்திய கோயில் செய்யத் தொடங்கினான். தாமரைப் பூவிலே வாசஞ்செய்யுஞ் சரசுவதியைப் பிரமதேவன் விவாகஞ் செய்யுங் காலத்திலே செய்த மண்டபத்தின் சிங்காரம்போலப் பல மண்டபங்கள் ஆகாயத்தை யளாவும்படி யுன்னதமாகச் செய்தான்; அந்த மண்டபங்களின்மேலே நாற்புறத்துஞ் சூளிகையென்னு மண்டபத்தைச் சூரியசந்திரர்களைச் சூழ்ந்த பரிவேடம்போலப் பிரகாசிக்கச் செய்தான். இதழவிரிந்த கடம்பமாலையைச் சூடிய முருகக்கடவுளை வணங்க வருஞ் சூரியன் தன்னுடைய குதிரையைக் கட்டிவைக்க நாட்டிய கட்டுத்தறியைப்போலத் துசத்தம்பத்தை நிறுத்தி வைத்தான். சிவபிரானையும் முருகக்கடவுளை

யுந் தினந்தோறும பணிந்தவர் சிவபுரத்துக்குப் போவதற்கு வைத்த ஏணியைப்போலக் கோபுரததைச் செய்தான். வெள்ளிய பிரகாசம் பொருந்திய வெள்ளியங்கிரியி லெழுந்தருளி யிருக்கும் பரமபிதாவை வடககு நோக்கிக் குமாரக்கடவுள் பார்ப்பதற்குச செய்ததுபோலத் திருப்பரஙகிரியோடு சேர்த்துச் செய்த கோயிலுக்கு வடக்கு முகமாக வாயில் வைத்துக் கோயில் முழுவதும பொனமயமாகச் செய்தான். தனது குமரனுகிய முருகக்கடவுளைக் கிழக்கு நோக்கிப் பார்த்துக்கொண் டிருபபதுபோல மேறகுப பக்கததிலே சிவபிரானுக்கு ஆலயஞ்செய்தான். அதன் பககததிலே உம தேவியார் விஷ்ணுமூர்த்தி முதலானவர்களுக்கும பரிவார தேவதைகளுக்கும ஆகமங்களுக்கு விதிபபடி கோயிலகள் செய்தான். முருகக்கடவுளைச் சேவை செய்யவநத குபேரன இநதிரன் முதலானவாகள் விமானத்தை யாகாயததிலே நிறுததி வைத்தது போலுஞ் சொனனமயமாகிய சிகரஙகளையுஞ் செய்தான். இவ் விதமாக மயன் சிருட்டிக்க, அரிசசநதிர மகாராஜன கண்டு களிபபடைநது மயனை நோக்கி இனிக் குமாரக்கடவுள் திருவிழாக்கொண்டருளும் வீதிகளை யலங்காரம பெறசசெய்யென்று உத்தரவு செய்தான. உடனே மயனும் மகாமேருவைப்போலும பொனமயமாகிய இரதஞ் சூழ்நது வருகின்ற வீதிகளையொழுஙகாகச் செய்து வாசனை பொருநதிய பூமாலைகளைத் தூக்கிக் கண்ணுடிகளையுங கோத்துத்தூக்கி யின்னுங் கடைவீதியாதியாகிய வெல்லா வீதிகளையுந தோரண முதலிய அலங்காரத்துடன் செய்து,கோயிலிலுள்ள மண்டபங்களையு மழகுபெறக்கட்டி, வாழை, கமுகு,கரும்பு,தோரண

ங்கள் கட்டி யலங்கரித்தன. அரசன் அதுகண்டு மகிழ்ச்சியுற்று தெய்வத்தன்மை பொருந்திய வேதசிவாகமங்களிலே கூறப்பட்ட பல்பல யாகவகைகளைச் செய்து முடித்த ஆதி சைவர்களைக் கொண்டு சிந்தியம் எனனும் சிவாகம விதிப்படி உத்திரட்டாதி நக்ஷத்திரத்திலே குமாரக்கடவுளுக்குத் திருவிழாத் தொடங்கிக் கொடியேற்றுவித்துப் பிரகாசம் பொருந்திய பாலிகையிலே முளைதெளிப்பித்துப் பூசைமுடிப்பித்து அவ்வெம்பெருமானை வீதியிலே யெழுந்தருளுவித்தாலே, சல்லரி, திமிலை, தக்கை, பேரி, மத்தளம், சேகண்டி, கடாரி, துந்துபி, தவண்டை, மல்லாரி, கிடுபிடி, தவில், டமாரம் இவ்வை முதலிய வாத்தியங்கள் கடல்போல முழங்கச் சிவந்த காந்திதங்கிய குடுமியையுடைய கோழிக்கொடி வலப்பக்கத்திலே வர மின்னல்போன்ற பெண்கள் பலரும் அநேகவிதமாக நடனஞ்செய்துவரப் பிரமன் விஷ்ணு இந்திரன் முதலாகிய தேவர்கள் சேவைசெய்து சூழ்ந்துவர ஆறுவது நாளுற்சவத்திலே குமாரக்கடவுளுடனே சிவபெருமானும் இடபாரூடரா யெழுந்தருளிவர வீதிகளெல்லாம் சித்திரங்களெழுதப்பட்டும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டும் விளக்குகளிடப்பட்டும் மிக ஆனந்தகரமாய்த் திகழ்ந்தன. அப்போது முனிவருந் தேவரும் மனிதரும் எண்ணில்லாதவர் சூழ்ந்து வணங்கித் துதிப்பாராயினர். திரிபுரங்களை யெரிக்கும் புன்சிரிப்பையுடையாய்! சோதிமயமாகிய முத்தலைவேலாகிய சூலாயுதத்தைத் தரித்தவனே! யானைத்தோலை யுரித்துப் போர்த்திய அக்கினி சொரூபமுடையவனே! விஷ்ணுவாகிய பாணத்தையுடையவனே யென்று தோத்தி

ரஞ் செய்வார். அநேகர், முழங்குகின்ற கடல் வற்றும்படி கூரிய வேலாயுதத்தை யேவிய வலிமையுடையாய்! கொச்சித்துவரும் அசுரருயிர் சிந்தும்படி போர்புரிபவனே! தமிழில் வல்ல நக்கீரர்பாடிய தோத்திரப் பாமாலையை யணிபவனே! குளிர்ந்த பன்னிரு கண்களையுடையா யென்று துதிப்பார். இவ்விதமாகச் சிவயோகிகள், முருகக் கடவுளை நேரே கண்டு தரிசித்துத் தொழுவாரும், கிருபைசெய்வாயென்று திருவடியை நோக்கிக் கீழேவிழுவாரும், பரவசமாயுடல் நடுங்கி மொழிகுழறி யழுவாரும், இசைபாடுவாரும், தெளிவாருமாயினர். தேவர்களெல்லாரும், குமாரக்கடவுள் திருவடியை மனம் பற்றுவாரும், வணங்குவாரும், பூமாலை சூட்டுவாரும், புலன்வழி மனஞ்செலுத்தாமல் நெருங்கத் துணிவாரும், திருவருள் விளைவை யெடுத்துச் சொல்லிக் களித்துத் தங்குவாரும், மனை மக்களாகிய பாசத்திலாசையைப் படுப்பாரும், வினையைக் கோபிப்பாருமாயினார். தவசிரேட்டர் அனைவரும், முருகக்கடவுளைக் கண்டவுடனே யடியுற்ற மரம்போல் விழுந்து வணங்குவாரும், அவரது திருவழகாகிய அமுதத்தைக் கண்ணாலையுண்டு வாழ்வாரும், சிவஞானமிர்தத்தை யுண்டு களிப்பாகிய கடலிலே மூழ்குவாரும், தமது துன்பக்கடலை நீந்துவாரும், தோத்திரஞ் சொல்வாரும், சுவாமீ! கருணை செய்யுமென்று மனமுருகுவாரும், அங்கே வருகின்ற அடியார்களுக்கு ஞானக்கண் திறக்கும்படி செய்வாரும், யமனையும் விதியையும் வைவாரும், இனிப் பிழைத்தோமென்று வினையைக் கெடுப்பாருமாகி நெருங்கி யுலாவி, ஓங்காரமாதியைந்தெழுத்து மந்தி

ர்த்தையுஞ் சகாரமாதியாமெழுத்து மந்திரத்தையு முச்சரித்துக் கார்த்திகேயராகிய குமாரக்கடவுளை மகிழ்ந்து திருநாளிற் பெற்றபேறு இவ்வாறுதானென்று நம்மாற் சொல்ல முடியாது. இன்னுந்தோற்றும் இப்படித் திருவிழா நடாத்தி யொன்பதாவது நாளாகிய புனர்பூச நக்ஷத்திரத்திலே இரதவுற்சவஞ் செய்வித்துத் தரிசித்துப் பத்தாவது நாளாகிய பூசநக்ஷத்திரத்திலே சரவணப் பொய்கையிற் சர்வ சனங்களுக்குங் குமாரக்கடவுளைத் தீர்த்தங் கொடுக்கும்படி செய்வித்து அரசனுந் தீர்த்தத்திலே மூழ்கி யாலயஞ் சென்று முருகக்கடவுளைச் சேவைசெய்து நெஞ்சு நெக்குருகி நின்று ஆனந்தக் கண்ணீர் பொழியத் தோத்திரஞ் செய்து சத்தியந் தவறாத விரதத்தை முற்றுப்பெறும் வரத்தைப் பெற்றுச் சிலநாளிருந்து, திருப்பரங்கிரியைப் பிரியாற்றுமற் பிரிந்து, சேது முதலாகிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து, அயோத்திமாநகரஞ் சென்று மந்திரிமார் முதலானவர்கள் எதிர்கொண்டழைக்கத் தனதரண்மனையினுள்ளே புகுந்து இரத்நசிங்காசனத்திலேறி யிருந்து முன்போலவே செங்கோல் செலுத்திச் சகல போகங்களையுந் துய்த்து நெடுங்காலம் வாழ்ந்திருந்து முடிவிலே பேரின்பவீட்டை யடைந்தான். இந்தத் தகுதியாகிய மான்மியம் விளங்கிய திருப்பரங்கிரியின் கீர்த்தியை யாவர் சொல்லவல்லவர்? சத்தியகூவ தீர்த்தத்திலே தெய்வத்தன்மை பொருந்திய மாமகதினத்திலே மூழ்கினால் உலகத்திலுள்ள மற்றைத் தீர்த்தங்களிலும் மிகுந்த தீர்த்தத்திலுங் கோடி மாசிமகத்திலே மூழ்கிய பலன் கிடைக்கும். இந்த மலையினுச்சியிலே தென்பக்கத்திலேயுள்ள கங்காகுண்டமெ

ன்னுந் தீர்த்தத்திலே காத்திகைமாதம் வருங் கார்த்திகை நக்ஷத்திரத்திலே காத்திகேய மந்திரத்தைச் சொல்லிச் சூரியனுதயந் தொடங்கிப் பதினேழாவது நாழிகை யளவிலே மூழ்கிச் சிவபிரானை அபிடேகாதியாற் சிறப்புச்செய்து பூசித்துத் தரிசித்தோர்க்குச சுற்றத்தாரோடு கதியடைவார்கள். தரிசித்தோர்க்குச சுற்றத்தாருமே கதியடைவாரென்றால் தரிசித்தோர் கதியடைவது சொல்லவும் வேண்டுமோ? மேற்கூறிய தினத்திலே சரவணப் பொய்கையிலே சென்று நான்கு வேதங்களாலும் புகழப்படும் காத்திகேய மந்திரத்தைச் சொல்லி ஸ்நானஞ் செய்து நித்திய கன்ம முடித்து முருகக் கடவுளைத் தரிசனஞ் செய்தவர் வெள்ளியங் கிரியைச் சேர்வார்கள். மாதந்தோறும் கார்த்திகை நக்ஷத்திரத்திலே சரவணப் பொய்கையிலே படிந்து தெய்வப் பெண்களது மங்கலநாண்காத்த குமாரக்கடவுளுக்கு அபிடேக முதலிய சிறப்புச் செய்து தரிசித்துத் துதித்து விரதமிருந்தவர் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நான்கு கவிக்குந் தலைமையுடையவரா யறிவிலே சிறந்தவராவார். மாசிமாதம் வருஞ் சோமவாரத்தில் மத்தியான நேரத்திலே மேலே சொல்லிய கார்த்திகேய மந்திரஞ் சொல்லித் திருப்பாற்குண்ட நீரிலே மூழ்கினவர் அன்னிய மாதரைப் புணர்ந்த தோஷமும், மாமிசம் புசித்த குற்றமும் நீங்குவர். பாலிற் பிரியராகிய பரமேசுரனுக்குப் பாலபிடேகஞ் செய்வித்தோர் எளிதிலே கயிலாசமலையைச் சேர்வார். பரமபதியாகிய சிவபிரானுக்கும் ஆறு திருமுகங்களையுடைய குமாரக் கடவுளுக்கும் அபிடேகஞ் செய்யப்பட்டு வரும்

பாநுகுளமென்னுந் தீர்த்தங் கங்கையைப் பார்க்கிலுங் கோடிப் பிரயோசனத்தைத் தரும் நகரத்தையும் சிவபிரான் அபிடேகஞ்செய்யப் பெற்றமையினாலன்றோ மோக்ஷந்தரும பழம்பாய மானமிய மாடதர தெளிந்த தமிழ்வளம் பெற்ற திருப்பரங்கிரியிலே அன்பர்கருளையிருக்குஞ் சிவபெருமானைப் பணிவிடைகளுஞ் செய்து, அங்ஙனமே திருத்தியினாலே அருச்சனை செய்ததனாலன்றோ சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து முருகக்கடவுளைத் தமது பக்கத்திலே சுவாமிநாதனென்னுஞ் சிறப்புப்பெயர் கொடுத்து வைத்துக்கொண்டார். அன்றியுங் கலியுகத்திலே முருகக்கடவுள் திருவிழா எக்காலமும் நடக்கவேண்டுமென்றும், திருப்பரங்குன்றங் குமாரக்கடவுள் தலமென்றே யுயர்ச்சியடையவேண்டு மென்றும், குமாரக்கடவுளிடத்தன்பில்லாதவர் தம்மிடத்து அன்பைமாற்றினவ ராவரென்றும் வரங்கொடுத்தார். இந்த விதம் வரம்பெற்றுஞ் சண்முகக்கடவுள் களிகூர்ந்து எல்லாருக்குந் தலைமையாக வெழுந்தருளியிருந்தார். ஆதலால் திருப்பரங்கிரி சூரிய சந்திரர்களுள்ளமட்டும் ஏழுலகங்களாலுஞ் சுவாமிபுரமென்று துதிக்கப்படும். இனி சக்கிரகுண்டத்தைச் சேர்ந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து வேதத்தின் முறைதெரிந்த பிராமணர் கையிலே ஒருபிடியன்னமாயினும் பொன்னாயினுந் தானஞ் செய்தவர்கள் பிதுர்லோகங்களிலே யிவ்வள சொர்ணதானஞ் செய்த பலனை யடைவார்கள். மேம்பட்டோ ரின்னுஞ் சகலதானஞ் செய்த பலனையும் பெறுவார்கள். அழகிய திருப்பரங்கிரியில் வந்து சிறப்புத்தங்கிய வேதியருக்குச் சொர்ணதானம், பூதானம், கோதானம், கன்னிகா

தானம், வஸ்திரதான முதலிய தானங்களைக் கொடுத்தவா பூமியிலே யிரசராகி யிருந்து சகல போகத்தையு மநுபவித்து முடிவிலே மோக்ஷத்தையு மடைவார் இதுவன்றிக் குமாரக்கடவுளுக்குப் பொன்னாலும், வெள்ளியாலுஞ், செம்பினாலும் பிரகாசம் பொருந்திய தீபதூபங்கள் நிவேதன பாத்திர முதலியவை செய்து கொடுத்தவா முத்தலைச் சூல பாணியாகிய சிவபிரா னெழுந்தருளியிருக்கும் கயிலாச மலையை யடைவார். இந்திரனுந் திக்குப்பாலகா, தேவாகள், சித்தர், முனிவர், சூரிய சந்திரர் முதலாயினோரும் அரிச சந்திரன் முதலிய மன்னர்களுஞ் சிவபிரானை யாராதித்து மோக்ஷம் பெறுதற்கிடமாகிய திருப்பரங்கிரி, ஏழுலகத்தையு முடிக்கொண்டெழும் யுகாந்தகாலப் பிரளய வெள்ளத்தினு மழியாது. இத்தகைத்தியையுடைய இந்தத் தலத்துக்கெல்லை ஐந்துகூட பிடு தூரமாகும், இந்த எல்லைக்குள்ளே யாராயிருந்தாலு மரண மடைந்தவா காதிலே சிவபிரான் பஞ்சாக்ஷர மந்திரத்தைக் கூறுவர். உடனே யவர்கள திருவருள் பெற்றுத் திருக்கயிலாசஞ் சேர்வார்களென்றால் முத்திதலமாகிய இதன் பெருமையை யெவராலெடுத்துச் சொல்லலாகு மென்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லியருளினா.

எட்டாவது திருவிழாச்சருக்கம் முற்றிற்று

---

# ஒன்பதாவது நக்கீரச் சருக்கம்.

இந்த தமிழ்ச்சங்கத்த தலைமைப் புலவராகிய நக்கீரர் பொருட்டுக் குமாரக்கடவுள் செய்த திருவிளையாடலைச் சொல்லுவோமென்று சவுனகாதி முனிவர்களுக்குச் சூத முனிவர் சொல்லத்தொடங்கினார் ஊற்றிருந்து தேனருவி யொழுக்கப்பட்ட பூஞ்சோலைகள் சூழ்ந்த மதுராநகரத்திலே சோமசுந்தரக் கடவுளருளினாற் பெற்ற சங்கப்பலகையிலே வீற்றிருக்கின்ற நாற்பத்தெட்டுப் புலவர்களுக்குள்ளே தலைமைப் புலவராகிய நக்கீரர், தமிழாகிய கடலின்னெல்லையைக் கண்டவரா யிருக்கும்போது சோமசுந்தரக்கடவுள் நாற்பத்தொன்பதாவது புலவராகச் சங்கப்பலகையி லொருகாலத்தி லெழுந்தருளி வந்திருந்தார். அப்போது அவருடன் தமிழிலே *வாதுபேசிக் கீர்த்தியை யடைந்த நக்கீரர் பின்பு சோமசுந்தரக் கடவுளாலே யுபதேசிக்கப்பட்டவரா யறிவாலுயர்ந்து அவரிடத்து மிகுந்த அன்பு செய்யும் நல்லொழுக்கத்திற் சிறந்து தினந்தோறுந் திருப்பரங்கிரியை யடைந்து தனக்குத்தானே சமானமாகி விளங்குஞ் சரவணப்பொய்கையிலே ஸ்நானஞ் செய்து நித்தியகன்ம முடித்துப் பஞ்சாக்கரப் பாறையிலிருந்து பஞ்சாக்கர செபஞ் செய்து துதித்து மதுரைக்கு வருவாராய்த் தேவர்களிலே திருவாலவாயி லெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளையும்

* வாதுபேசிய கதை திருவிளையாடற் புராணத்திலே காணக சீகாளத்திப் புராணத்திலுந் தெரியலாம்.

மனிதரில் பாண்டியராசனையு மல்லாமல் வேறொருவருக்குந்
தமிழ்மாலை தொடுத்துச் சாத்தாத விரத்தனைக் கைக்கொண்
டவராயிருந்தார். இப்படி யிருப்பதைக் கடப்பமாலையை
யணிந்த குமாரக்கடவுளறிந்து நமக்குத் தமிழ் மாலையை
யிவன் சாத்தவில்லையே யென்று பக்கத்திலே வந்து நின்ற
நாரதமுனிவரை நோக்கிக் குறிப்பித்தருளினார். அம
முனிவருங் கண்டு நக்கீரர் சரவணப் பொய்கைக்கு வந்த
சமயந்தெரிந்து சுவாமி நாதனாகிய குமாரக்கடவுளிடந்
தெரிவித்தார். உடனே யவர் உக்கிரமான அண்டாபரணனெ
னனும் பூத வீரனை யழைத்துச் சொல்லுவார், நமதுடைய
வேலாயுதத்தை யூன்றி நாமே வரவழைத்த சரவணப்பொய
கைக் கரையுகந்திலே ஆயிரமிதழோடு கூடிய செந்தாமரை
மலர்களைப் பூத்து விளங்காநிற்கும். அந்தத் தீர்த்தத்திலே
நக்கீரன் வருவான். அவனை மேலெடுத்து ஒரு குகைதனைச்
சுழற்றி நமது திருப்பரங்கிரியி லொருபக்கத்துச் சிறையிலே
வைத்துவிட்டு வாருங்களென்று கட்டளையிட்டனர். அப
பணிவிடையைச் சிரசின்மேற்றாங்கிய பூதவீரனிருவரும்,
குமாரக்கடவுளை நினையாத நக்கீரர் சரவணப் பொய்கை
யடைந்து தீர்த்தமாடி விபூதிதரித்துக் கரையோரமுள்ள
அரசமரத்தி னிழலில் வெண்ணிறமுள்ள பஞ்சாக்கரப் பா
றையிலிருந்து பஞ்சாக்கரத்தை யுச்சரித்துச் செபஞ்செய்
திருக்கும்போது அந்த அரசமரத்தி னிலை தண்ணீரிலேவிழு
ந்தால் சேல் மீனாகவும் கரையிலே விழுந்தால் பறவையாக
வுஞ் செல்லும் விசேடமான அதிசயத்தைத் தெரிந்து மர
த்தி னுச்சியிலே யேறி யொரு சருகிலையைப் பாதி தரையி

லேயும் பாதி தண்ணீரிலேயும் விழும்படி யுதிர்த்தார். உடனே மச்சமாயிப் பாதி சலத்திலேயும் பறவையாகிய பாதி கரையிலேயும் இருந்து தத்தளிப்பதை நக்கீரர் கண்டு மனங் கசிந்து எழுந்து நீக்கி கரையிலே பறவையை வேறு மச்சம் வேறாகத் தள்ளிவிட்டார். அவ்விரண்டும் கூடி யோடித் துக்கணைகளை முடித்துப் போயின. அந்தச் சமயம் பூத வீர ரிருவருக்கும் பாலைக் கழுத்தைப் பிடித்துவந்து பெருமானாகிய சுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளி யிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய திருப்பரங்கிரியிலே யிருந்த கொடிய பாதகத்தைச் செய்தாயென்று முதுகிலே யறைந்து பயப்படும்படி பிடித்துக்கொண்டு வந்து நக்கீரரை மலையினுள்ளே இருளுள்ள தொரு குகையிலே யடைத்து ஒரு கல்லைக் கொண்டு குகையை மூடிவைத்துவிட்டுச் சென்றார். குகையி லகப்பட்ட நக்கீரர் பெருமூச்செறிந்து வருந்தி விம்மி மிக மனங் கரைய முகத்தைச் சுளித்து மயங்கி யழுதழுது சிலநாள் கழிந்தபின் மயில்வாகனத்திலெழுந்தருளுங் கந்தசுவாமிக்குச் செந்தமிழ் மாலை புனையாத காரணத்தினாலே யிந்தக் கொடுமை வந்ததென்று மனத்திலே யுறுதியாகத் தெரிந்து, திருவருளினாலே திருமுருகாற்றுப்படையென்னப் பெயரிட்டு மதுரம் பொருந்திய தமிழ் மாலையாகிய ஒரு பிரபந்தத்தை உலகமென முதலிலெடுத்துக் கிழவோனென்ன இறுதியிலே பாடி முடித்தார். அரியதவங் கோடி செய்தாலு மறிதற்கரிய குமாரக் கடவுள் அது தெரிந்து நக்கீரர் சொப்பனத்திலே வந்து பூமியிலே கிழவனாக நாம் வரச் சில காலஞ் செல்லுமென்று சொல்லிப் போயினர்; அப்போது

நக்கீரர் அந்தத் தமிழ்மாலையி னிறுதியிலுள்ள முதலாவது வெண்பாவில் இளையோனென்று கூறி யன்பினாலே கூட்டு தலும் குமாரக்கடவுள் மிகக களிப்படைந்து மயில் வாக னத்தி லெழுந்தருளி வந்து நின்று, அந்த மலையிலே கலியுகத் திலுள்ளோர் காணும்பொருட்டு வேலெறிந்தபாறையென்று சொல்லும் அடையாளமாக, வேலாயுதத்தினாலே குகையை யடைத்திருந்த பாறையைக்கிழித்து நக்கீரரை வெளியேற்றி விட்டனர். அப்போது பேரானந்தத்துடன் குகையைவிட்டு வெளியிலே வந்த நக்கீரர் அந்தர துந்துமி முழங்கவும், தே வர்கள் புட்பமாரி பொழியவும், பிரமன் முதலானோர்க ளிர ண்டு பக்கத்திலும் வந்து கை குவித்துத் தோத்திரஞ் செய்ய வும், உக்கிரன் அண்டாபரணன் எனனும் பூதவீரர் சூழ்ந் துலாவவும், நவவீரர்களும், இலக்ஷம் வீரர்களுஞ் சூழ்ந்து நிற்கவும், ஒருபக்கத்திலே தெய்வயானை யம்மை சமேதராய் மயில்வாகனத்தி லெழுந்தருளிய குமாரக் கடவுளை யிரண்டு கண்களுங் குளிரத் தரிசித்து மழலைவார்த்தை பேசுகின்ற குறுஞ்சிரிப்பை யுடையவாயும், சந்திரனைப்போலப் பிர காசிக்கின்ற திருமுகமும், கருணை வழிந்தொழுகுகின்ற திருக்கண்களும், தேவர்கள் முடிபடுதலா லுண்டாகிற தழு மபிருந்த தண்டை யணிந்த திருவடிகளும் பிரகாசிக்கத் தோன்றிய திருமேனியினழகை வியந்து பணிந்து நின்று ஆச்சரியமடைந்து தலையசைத்து ஆனந்தக்கண்ணீர் முத் துப்போலத் துளிசெய்ய உடல் மயிர்ப்புளகங் கொள்ள விதிர்விதித்து மூன்றுதரம் பிரதக்ஷணஞ் செய்து நாத்தழும் புறத் தோத்திரஞ் செய்வாராயினர். மலைமகளாகிய பார்வதி

தேவி தர உண்டருளிய பால் மணங்கமழும் வாயையுடைய வனே! நமஸ்காரம். கருப்புவில்லைத் தாங்கிய மன்மதனும் நாணமடையத் திருமேனியினழகுவாய்த்த குமாரக்கடவுளே! நமஸ்காரம். அசுரர் குலத்தை வேரறுக்கத் திருவுள்ளத்தி லெண்ணிய பெரியோனே! நமஸ்காரம். முனிவர் இருதயங் களிக்க மிக மகிழ்ந்து வேண்டும் வரத்தைத் தந்து விளங்குந் திரு ப்பரங்கிரியின் முருகனே! நமஸ்காரம். என்று பலவாறு கத் துதித்துப் பின்னுஞ் சொல்லுவார் விடம்போலக் கொதி த்து யமன் வருங்காலத்து உன்னுடைய தாமரைபோன்ற திருவடிகளிலே கருத்தை வைப்பேன், என்னைக் காத்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, முருகக்கடவுள் கேட்டு நக்கீரனே உன்னுடைய தோத்திரத்தைக் கேள்வி யுற்று மிக மகிழ்ச்சியடைந்தோம் உனக்கு வேண்டிய வரத் தைக் கேளென்று சொல்ல நக்கீரர் வணங்கிச் சுவாமீ! இந்த வுலகமெல்லையோ மென்னுறைகாலமும் உம்மைச் செல்லவேண் டும். அடியேன் கூறிய திருமுருகாற்றுப்படையென்னும் பிர பந்தத்தை யன்புடன் தோத்திரஞ் செய்து படிப்பவருக்கு இச்சித்த வரங்களைத் தந்தருள வேண்டுமென்று வணங்கி னார். குமாரக்கடவுளும் அப்படியே யாகுகவென்று வரங் கொடுத்தலும், நக்கீர சுவாமீ! அடியேன் கங்கை நதியிலே போய் ஸ்நானஞ்செய்து வருதற்கு விடைதரவேண்டுமென்று பிரார்த்திக்கக் குமாரக்கடவுள் இந்தமலையினுச்சியிலே தென் பக்கத்திலே கங்கையை வரவழைக்கின்றோம், அக்கங்கைக்கு அடையாளமாக ஐந்து நிறத்தையுடைய தேளியென்னும் ஒருவகையான மீன்கள் உலாவித் திரியுமென்று சொல்லி

விட்டு மறைந்தருளினார். நக்கீரர் அந்தக்ஷணமே முருகக்
கடவுளுடைய திருவருளை நினைந்துப் புகழ்ந்து தென்பக்க
முள்ள திருப்பரங்கிரி மலையி னுச்சியிலேபோய்க் கங்கைநதி
வந்திருத்தலைக் கலியுகத்திலு மற்புதமாகப் பஞ்ச வன்னத்
தையுடைய தேளியென்னு மீன உலாவிநிற்கு மழகோடுபார்
த்துப் பொய்யாகிய உடலெடுத்தற்கு மூலமாகிய பிறவியைப்
போக்கும் அந்தக் கங்காதீர்த்தத்திலேமூழ்கிக் குமாரக்கடவு
ளை வந்துவணங்கித்துதித்திருந்தனர், பின்னுமுன்போலவே
தினந்தோறுஞ் சரவணப்பொய்கையிலே வந்து தீர்த்தமாடிக்
குமரவேளுடைய திருவடிகளை மறவாது பணிந்து மதுராநக
ரத்தை யடைந்திருந்து முடிவில் மோக்ஷத்தை யடைந்தனர்.
நக்கீரர் பெற்ற வாதத்தினாலே யுலகமெல்லாங் குமாரக்கட
வுளை யெந்தக்காலமும் இளையோனென்றே சொல்லித் துதி
க்கும். இத்தன்மையுடைய நக்கீரர் பெருமையை யெம்மாற்
சொல்லமுடியாது. வாசனை விரியுங் கூந்தலையுடைய வுமா
தேவியாரைச் சிவபிரான் திருமணஞ்செய்யச் செய்வித்தவ
ரும், பிரமதேவனைக் குட்டுப்பட்டுச் சிறைச்சாலை யடையச்
செய்வித்தவரும், அசுரர் கிளையோ டழும்படி சூரனுக்குச்
சிநேகிதன்போலவிருந்து அவனுடைய வுண்மை யெல்லா
முருகக்கடவுளுக்கு வந்து சொன்னவரும், இன்னு முரு
கக்கடவுளுடைய திருவுள்ளக் குறிப்பறிந்து வேண்டுமேவல்
செய்பவரும், திருப்பரங்கிரியின் கீர்த்தியை யெட்டுத்திசை
யிலும் விரித்துப்பாடு மிசை யமுதத்தைக் கேட்பவர் செவி
களுக்கு விருந்தாகக் கொடுப்பவரும், உலகத்திலே மேன்
மைதங்கிய மகரிஷிகளுக்குத் தொண்டு செய்பவரும், என்

னுடைய தலையின்மேலே யிரண்டு திருவடிகளையும் வைப்பவருமாகிய நாரதமுனிவரைத் திருவருள் சுரந்து நோக்கித் தமது பக்கத்திலிருக்கும்படி யடியவர்க்கெளியவராகிய குமாரக்கடவுள் வரங்கொடுத்தனர் இந்த நினைக்குந்தோறு மெனக்கே யற்புதம் விளையுமானால் உலகத்தார்க்கு என்னாகுமோ அறியேனென்றார்.

ஒன்பதாவது நக்கீரசருக்கம் முற்றிற்று.

## பத்தாவது சூரசங்காரச் சருக்கம்.

சிவபுராணமாகிய சைவபுராணம் பத்தினுள்ளே ஆறு புராணங்களைத் தமிழிலே விரித்துப்பாடிய நக்கீரர் பயப்படும்படி செய்து, பின்பு அவராலே பாடப்பட்ட திருமுருகாற்றுப்படையென்னும் பாமாலையைக் குமாரக்கடவுள் தரித்தருளிய கதையைச் சொன்னோம். இனிக் காந்தபுராணத்திலே கூறிய குமாரக்கடவுள் தெய்வயானையம்மையைக்கலியாணஞ்செய்த கதையைச் சொல்லுவோம். அதற்கு முன்பு சூரசங்காரஞ் செய்த சரித்திரத்தைச் சுருக்கிச் சிறிது கூறுகின்றோம். பூருவகாலத்தி லொருநாள் குமாரக்கடவுள் சூரசங்காரஞ் செய்தற்காகப் பிரமன் விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாந் தம்மைச் சூழ்ந்துவரப் பொன்னாலாகிய ரதத்தைச் செலுத்தித் தேவகிரியினின்றுந் தெற்குநோக்கிக் கொடிய காடுகளையெல்லாங் கடந்து திருப்பரங்கிரியின்கண் வந்து சேர்ந்தார். அப்போது அங்கே

தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்கள் ஆறுபேர் வந்து சுவாமியை யெதிரே கண்டு வணங்கி நின்றார்கள். அதுகண்ட அம்முனிவர்க ளறுவர் வரலாற்றை யிந்திரன் குமாரக்கடவுளுக்குச் சொல்லுவான். சுவாமீ! இந்த ஆறுமுனிவர்களும் அருமையான தவசிரேட்டராகிய பராசரமுனிவர் புத்திரர்கள். தத்தன, நந்தி, பரிதி, பாணி, சனுமுகன, தவமாலி யென்னும் பெயரையுடையவர்கள், இவர்கள் குழந்தைப்பருவத்திலே சரவணப்பொய்கையிலே வந்து புனல்விளையாட்டுச் செய்து அதிலேயுள்ள மச்சங்களைப் பிடித்துக் கொண்டு வெயில் சுடுகின்ற பாறையிலே போட்டு உலர்த்தி விளையாடினார்கள். அந்தச் சமயத்திலே சூரிய னுச்சியிலே வரும்போது இவர்கள் பிதாவாகிய பராசரமுனிவர் நித்திய கன்மமாகிய மத்தியானக்கடன் செய்வதற்கு வந்து பிள்ளைகள் செய்யுங் கொடுமையைப் பார்த்துத் தீய செய்கை செய்ததால் நீங்க ளிந்தச் சரவணப் பொய்கையிலே மீனவடிவமெடுத்துக் கிடந்து வருந்துவீராகவென்று சபித்தார். பிள்ளைகள் மனங்கலங்கிப் பிதாவை வணங்கி, ஐயா! எங்களுக்கிந்தச் சாப மெந்தக்காலம விமோசனமாகுமென்று கேட்கப் பராசரமுனிவரும் மனமிரங்கி யிந்தத் தடாகத்தில் குமாரக்கடவுள் குழந்தையாக வருவார். அப்போது உமாதேவி வந்து தமது திருக்கரங்களாலே குழந்தையை யெடுக்கும்போது அவளுடைய கொங்கைகளினின்று சொரிந்திடும் பாலிலே சிந்திய துளிகளை நீங்களுண்டு மீனவடிவம் நீங்கித் திருப்பரங்கிரியிலே போய்த் தவஞ் செய்துகொண் டிருங்கள் அங்கே முருகக்கடவு ளெழுந்தருளும்போது, அவரைத் தரிசித்துக்

கதியடைவீர்களென்று சொல்லிவிட்டு அப்பாற் சென்றார். உடனே யந்தத் தடாகத்திலே சேல்மீன் வடிவெடுத்துப் பிள்ளைகளாறுவரு முலாவிக்கொண்டு திரியுங் காலத்திலே தங்களுக்கு நல்லகாலம் வந்து சேர, சுவாமீ! நீர் சரவணப் பொய்கையின்மேல் குழந்தையாக வெழுந்தருளி யிருக்கும்போது, அங்கெழுந்தருளிய வுமாதேவியின் கொங்கைகளினின்றும் சொரிந்த பாற்றிவலையை யுண்டு மீனுருநீங்கி ஞானத்தை யடைந்து, பழைய வுருப்பெற்று இங்கே வந்து முருகக் கடவுளென் றெழுந்தருளுவாரென்று தவஞ்செய்துகொண்டிருந்தனரென்று விண்ணப்பஞ் செய்தனர். அதுகேட்டுக் குமாரக்கடவுளும் அம்முனிவரை வியந்து திருவருள் செய்து வேண்டிய வரத்தைக் கொடுத்து அப்பாற் சென்று, முழங்குகின்ற கடல் அருச்சனை செய்தல்போல முத்துகளாகிய மலர்களை யலைகளாகிய கரங்களால் வீசிவந்து வணங்குந் தமிழ்மணங் கமழுகின்ற சீரலைவாயென்று சொல்லப்படுந் திருச்செந்தூரினிடத்தே வந்து சேர்ந்திருந்தனர். பின்பு பிறைச்சந்திரனைப்போலும் பிரகாசிக்கின்ற பற்களையுடைய சூரபன்மன் அவன் சுற்றத்தாரோடும் வந்து யுத்தஞ் செய்யச் சமுத்திரத்தின்கண் இரண்டாயிரம் பூதவீரர், இலக்ஷவீரர், நவவீரர் சூழச்சென்று குமாரக்கடவுள் சண்டை செய்து தமது சத்திவேலை யேவி யசுரர் குலங்களை யெல்லாம் அடியோடே யறுத்து மாமரமாய் நின்ற சூரன்மனையும் இரண்டு பிளவாகப் பிளந்தெறிந்தார். அந்த இரண்டு பிளவிலே யொன்று மயிலாகவு மொன்று சேவலாகவும் வந்து தோத்திரஞ் செய்து வணங்கி நிற்கக் கருணைகூர்

ந்து மயிலை வாகனமாக வேழிக்கொண்டு சேவலைக் கொடியா கக் கையிலே பிடித்துக்கொண்டு சூரசங்காரஞ் செய்து சமுத்திரத்திலே ஸ்நானஞ்செய்து கோடி சூரியோதயம்போலப் பிரகாசித்து வந்து வணங்கும் வேலாயுதத்தையுந் திருக்கரத்திலே தாங்கி மகிழ்ச்சியடைந்து சண்முகக்கடவுள் நிற்க, அரிபிரமேந்திராதி தேவர்கள் புஷ்பமாரி சொரிந்து பூசனை செய்து துதித்து நின்றார்கள் இவ்விதந் துதித்து நின்ற எல்லாரையுங் கடைக்கணித்துத் திருவருள்செய்து திருப்பரங்குன்றத்துக்கு வரும்படி கட்டளையிட்டுத் தாமும் மயில் வாகனத்திலெழுந்தருளிப் புறப்பட்டார். அப்போது வண்டுகள் முழங்குகின்ற கடப்பமாலையை யணிந்த சிறப்பான வந்தானென்றும், தெய்வயானையம்மையைத் திருக்கலியாணஞ் செய்யும் ஆறுமுகக்கடவுள் வந்தானென்றும், பிரமதேவனைச் சிறைச்சாலையில் வைத்த மூலகாரணன் வந்தானென்றும், தெய்வப்பெண்கள் மங்கலநாணங் காத்தவன் வந்தானென்றும் யுத்தகளத்திலே சூரபன்மனைச் செயித்தவன் வந்தானென்றும், தன்னை நினைக்கின்ற அன்பருக்கருள் புரியுங் கருணையுடையான் வந்தானென்றும், தேவர்களிறைஞ்சுந் திருவடியையுடையவன் வந்தானென்றும், இன்னும் பலவிதமான தோத்திரஞ் சொல்லிச் சின்னங்கள் முழங்கக் காற்றினும் வேகமாக மயில்வாகனத்தைச் செலுத்தி யநேக காததூரங் கடந்துவந்து சிவசொரூபமாகிய திருப்பரங்குன்றத்தைக் கண்டு சந்தோஷமடைந்து தேவர்களெல்லாரும் எதிர்கொண்டுவந் திறைஞ்சத் தமது திருவுள்ள மகிழும் ஆறுபதிகளுக்குள்ளே முதற்பதியாகிய திருப்பரங்கிரியிலே

குமாரக்கடவு ளெழுந்தருளி யிருந்தார். அப்படி யிருந்த
காலத்திலே தேவேந்திரன் அசுரர்களைக் கொன்று களிப்ப முரு
கக்கடவுளைத் தரிசித்துப் பின்பு தன் புத்திரியாகிய தெய்வ
யானை யம்மையைச் சண்முகப் பெருமானுக்குக் கைம்மா
று விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று விஷ்ணு
வுடனே பிரமதேவனுக்குஞ் சொல்ல அவ்விருவருங் கேட்டு
நல்லதென்று மகிழ்ந்து குமாரக்கடவுள் ஆலயஞ்சென்று
வணங்கிச் சூழ்ந்து பணிந்து எங்களுக்கெல்லாம் பரமபிதா
வே! யொருவரந் தரவேண்டுமென்று விழுந்தெழுந்தார். அது
கேட்டுச் சுவாமியுங் குஞ்சிரிப்புக்கொண்டு அவரை எழு
ந்திருமென்று கூறி அவர் கூறுமுன்னமே அவருள்ளக் கரு
த்தை யறிந்து நீங்கள் கேட்டவரத்தைத் தந்தனமென்று அரு
ளிச் செய்தார். உடனே பிரமனும் விஷ்ணுவும் இந்திரனு
க்குத் தெரிவித்தார்கள். அவனும் மனமகிழ்ந்து தன்னு
டைய தேவதூதவரைப் பார்த்து நீங்கள் சென்று சகல
தேவர்களையுந் தம்பதி சகிதமாகச் சுவாமி திருக்கலியாணச்
சேவை செய்யத் திருப்பரங்கிரிக்கு அழைத்துக்கொண்டு
வாருங்களென் றனுப்பிவிட்டு, அந்தத் தூதவருள்ளுண்மை
யான ஒரு தூதவனை யழைத்துத் தன்மனைவியாகிய இந்தி
ராணியுடன் புத்திரியாகிய தெய்வயானையையும் இங்கே
யழைத்துவாவென் றனுப்பினான். உடனே அந்தத் தூதவ
னும் அதி விரைவிற் சென்று முருகக்கடவுளெக்காலம்
நம்மை விவாகஞ் செய்வாரோ வென்று தெய்வ வாவியிலே
தவஞ்செய்துகொண் டிருக்குந் தெய்வயானை யம்மை இர
ண்டு காதுகளுக்கும் அமுதத்தை யொழுக்கினாற்போலும்

இந்தச் சோபனவார்த்தையைச் சொல்லினன். அவருந் தாயாகிய இந்திராணியுடனே மிக மகிழ்ச்சியுற்று வெள்ளை யானையின் மேலேறிக்கொண்டு திருப்பரங்கிரியிலே தெய்வப் பெண்கள் மங்கலவாழ்த்துக் கூறி யெதிர்கொண்டழைக்க வந்துசேர்ந்தனள். இந்திரன் மனைவியையும் மகளையுங்கண்டு களிப்படைந்து தேவகம்மியனாகிய மயனை யழைத்துத் திருக் கலியாணத்துக்கு வந்த சகல தேவர்களும் இருக்கும்படியாகப் பட்டணத்தை முன்னையினும் விசாலமாகச்செய்து வீதிகளை யொழுங்காக வைத்து அலங்காரஞ் செய்வாயென்று சொன்னான். உடனே மயனும் தேவராசன் ஆக்கினைப்படி பிராமணவீதி, அரசவீதி, வணிகவீதி, வேளாளவீதிகளை முறைப்படி செய்து தங்கத்தினாலும் மணிகளாலும் மாடமாளிகைகளுங் கூடகோபுரங்களுஞ்செய்து நவரத்நங்களாலும் பொன்னாலுஞ் செய்த மாலைகளை யெங்குந் தூக்கி மணிகள் பதித்த மகரதோரணங் கட்டிக் கரும்பு வாழை கமுகுகளை நாட்டி வேதிகைகள் தோறும் பூரணகும்பம் முதலிய அட்ட மங்கலங்களும் அமைத்து வைத்துச் சுவாகதாவென்று சொல்லும்படியாகப் பலவிதமாக அலங்காரஞ் செய்தான். பின்பு சகல தேவர்களும், முனிவர்களும் முசுகுந்தச் சக்கரவர்த்தியுந் திருக்கலியாணக் காட்சி தரிசிக்க வந்து சேர்ந்தனர்.

பத்தாவது சூரசங்காரச்சருக்கம் முற்றிற்று.

# பதினொராவது திருக்கலியாணச்சருக்கம்.

தித்திப்பாகிய சொல்லையுடைய குமாரக்கடவுள் சூரசங்காரஞ் செய்து திருப்பரங்கிரிக்கு வந்து சேர்ந்து தேவேந்திரன் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளியதும், அவன் மயனை யழைத்துப் பட்டணத்தை விருத்தியாகச் சிருட்டிக்கச் சொன்னபடி செய்ததும், தேவர்கள் முனிவர்கள் முதலியோர்கள் நெருங்கி வந்து சேர்ந்ததுஞ் சொன்னோம். இனிக் குமாரக்கடவுள் தெய்வயானை யம்மையை விவாகஞ் செய்து மகிழ்ந்திருந்த கதையைக் கூறுகின்றோம். தேவேந்திரனும் உபேந்திரனாகிய விஷ்ணுவுஞ் சொல்லியபடி தேவகம்மியன் திருக்கலியாண மண்டபஞ்செய்யத் தொடங்கினான், மகாமேருவுங் கண்டு நாணும்படியாக மண்டபஞ் செய்து அதனுச்சியிலே கோடி சூரியர்களைப்போலச் சொர்ணகலசங்கள் பதித்து மண்டபத்தில் நாலுதிசையிலுமுள்ள கோபுரவாயிலிலே முத்துக்களையு மாணிக்கங்களையு மிடையிடையே கலந்து மாலையாகச்செய்து தூக்கி வயிரத்தாலாகிய கண்ணாடிகளையுங் கோத்துத் தூக்கி மண்டபத்தி னடுவே கோடி சூரியோதயம்போலச் செம்பொற் பீடமொன்று செய்து, பீடத்தைச் சூழச் சாமரைகளும் நவரத்னமாலைகளுந் தொங்கவிட்டு நான்குபக்கத்துத் தூண்களிலும் மயிலுங் கிளிகளும் உலாவுகின்ற கமுகும் வாழையுங் கரும்புஞ் சேர்த்துக் கட்டிக் குற்றமற்ற சூட்சியினையுடைய பதுமைகளுஞ் சூழ நிறுத்தினான்; அப்பதுமைகளிலே சில நட்டனஞ் செய்யும,

சில இராகம் பாடுமே, சில தாளந் தட்டுமே, சில இசாகுபாயுமே, சில வேதங்களை யிசையுடன் கூறுமே, சில துடை தட்டி யசையும், சில வரிசையாகக் கதை சொல்லும், சில கின்னரி வாசிக்குமே, சில கேடகம் வாள்களை வீசி விளையாடுமே, சில கட்டியங் கூறுமே, சில குமாரசாமியுள் கீர்த்தியை விரித்துப் பாடும், சில அதைக் கேட்டுச் சந்தோஷிக்குமே, சில சாமரம் வீசுமே, சில விசிறி வீசுமே, இவையன்றி மண்டபத்தி னுச்சி யிலே தொங்கவிட்ட பூமாலை யொழுக்கிய தேனுடனே தேவ ர்கள் முடிமிசைத் தரித்த கற்பகப் பூமாலையினின் றொழுகுந் தேனும் வழிந்து பெருகி வீதியெங்கணுஞ் சேறாக்கிவிடுமே அந்தச் சேற்றிலே நடப்பவர்களுக்குப் பாதம் பதியாவண் ணங் கொவ்வைக்கனிபோன்ற வாயையுடைய தேவப்பெண் கள் கொங்கையிலே யணிந்த குங்குமத்தூ ளுதிர்ந்து அச் சேற்றை யிறுக்கிவிடுமே, கலியாணக்கோலங் காணவந்த இல க்குமிகளும் அனந்தங்கோடி. சரசுவதிகளும், தேவப்பெண் களும், ரிஷிபத்தினிகளும் அப்படியே யெண்ணில்லாதவர் கள் முளைப்பாலிகை முதலாகிய மணச்சடங்கு செய்யவந்த பிரமன் விஷ்ணுவும், அநேகர் சூரியசந்திரர்க ளெல்லாரும் விளக்கிட்டார்கள். கந்திருவரெல்லாரு மிசைபாடினார்கள் தேவப்பெண்களிட மிடந்தோறு நடித்தார்கள் அப்போது தென்றற்காற்றும் மந்தமாருதமென்ற பெயருக்கேற்ப மிரு துவாக மண்டபந்தரி லுள்ளே வந்தசைந்தது, பசிய இலைக ளாற் சூழப்பட்ட அரசுகொண்டுவந்து நிறுத்துவார், முளை ப்பாலிகை நிரம்ப வைப்பார், இரத்ந தீபங்களேற்றி மூலைக டோறும் வைப்பார், வாசனைபொருந்திய கூட்டுவாக்கச் சந்

த்னம்நிறைந்த பொற்கிண்ணங்களை கொண்டுவந்து வைப்பார், காந்திதங்கிய பொற்குடத்திலே நீர்வார்த்து மாதுளைமசெரு கிக்கொண்டுவந்து வைப்பார், பலவிதமான வாத்தியங்களை முழக்குவார்கள். சிலர், பிரமதேவனிடமவந்து முகூர்த்த வேளை வந்துவிட்டதா வென்று நெருங்கிக்கேட்பார். சிலர், முகூர்த்தஞ் சமீபித்ததென்று தெரிந்து மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணியச்சொல்லுமென்று சொல்லுவார். சிலர், இவ்விதமாக மண்டபத்தினுள்ளே பேசுவாரொலி யொருசமுத்திரத்தை யொத்திருந்தது. அதன்மேல் இலக்குமி முதலாயினோர் தெய்வயானை யம்மையினிடஞ்சென்று அவளை வெண்ணிறமுள்ள கலையிலே வடித்தெடுத்த கங்கை நீரிலே வாசனையூட்டிக் கூந்தலைவகிர்ந்து ஸ்நானஞ்செய்வித்து மிருதுவான வெண்பட்டினாலே யீரத்தை மேனியெங்கணும் புலருமபடி யொற்றியெடுத்து, அரையிலே யிளஞ்சூரியனைப்போல விளங்குஞ் செம்பட்டினைத் தரித்துப் பொன்விசிறிகாற்றினாலே கூந்தலின் ஈரத்தைப் புலர்த்தி யகிற்புகைமுதலிய வாசனையூட்டி மேகத்தைச் சேர்ந்த நக்ஷத்திரக் கூட்டங்கள்போல விளங்கு முத்துமாலையினாலே சூழப்புனைந்துகட்டிச் சூரியப்பிறை சந்திரப்பிறை யென்னும ஆபரணத்தையணிந்து இளம்பிறைச் சந்திரனை வந்து தீண்டிய பாம்பின் கறையென்று சொல்ல நெற்றிச் சுட்டியின் கீழே திலகமொன்று சாத்திப் பாம்பு தீண்டும்போது சந்திரனிடத்தினின்றுந் துளித்து வீழ்கின்ற அமுதத்துளிபோல வெண் முத்தினாலாகிய மூக்கணியணிந்து பாலிலேமிதந்த நீலமணிபோலுங் கருவிழியை

ச்சூழ அஞ்சனமெழுதிச் சந்திரனுக்குக்கீழே யுதயமாகுஞ்
சூரியர்கள்போல முகத்தின்கீழே இரண்டுகாதுகளிலு மாணி
க்கம்பதித்த தோடுமுதலிய ஆபரணங்களணிந்து மேகமெ
ன்று நினைத்துக் கமுகமரத்தைச்சூழ்ந்த மின்னலைப்போலத்
தங்கத்தினாலாகிய மங்கலக்கயிற்றைக் கழுத்திலே சூழப்
புனைந்து இரண்டுமலையின் மத்தியிலே தோன்றிய சூரிய
னைப்போல இரண்டு கொங்கைகளுக்கு நடுவே முத்தாரத்திற்
கோத்த மாணிக்கம்பதித்த சொர்ணப்பதக்கந்தரித்துச் சரசு
வதியுந் தேவப்பெண்களும் வேறுவடிவங்கொண்டு வந்து எங்
களைக் காவென்று கையைப்பிடிப்பதுபோல வெள்ளியவளை
யலும் பொற்சரியுங் கரங்களிலே யணிந்து மார்பிலே பதக்
கந் தவிரப் பலவாம் ஆபரணங்களுந் தெரிந்தெடுத்துப் பூட்
டிப் பட்டுவஸ்திரந்தரித்த இடை பின்னப்படா திருக்க,
அதன்மேல் மேகலாபரணத்தை யிறுக்கித்தரித்துத் தன
க்கு அசுரராகிய பாரத்தைமாற்றிய குமாரக்கடவுள் தேவி
யென்று நினைத்துத் தனணிடத்துள்ள மணியாலும் பொன்
னாலும் ஆதிசேடனே யமையச்செய்து சாத்தினாற் போ
லும் பாடகங்களை யிரண்டுகாலிலும் புனைந்து; பின்னும்
பாதசரமுந் தண்டையுமணிந்து நகங்களாகிய சந்திரர்களைச்
சிறுருவங்கொண்டு சூரியர்கள் வந்தடைந்தாற்போலும்
விரற்பணிகளை முறையாகத் தரித்தார்கள். இவ்விதமாய்ச்
சருவாபரணங்களாலுந் தெய்வயானையை யலங்காரஞ்செய்
துகொண்டிருக்கும்போதே பிரமா விஷ்ணு முதலோர்கள்
சகல வுலகத்தையு முடையவராகிய குமாரக்கடவு ளாலயஞ்
சென்று வணங்கித் திருமணக்கோலஞ் செய்யவெழுந்தருள்

வேண்டுமென்றுகூற, அவரும அதறகு நன்றென்று திரு முடியைத்தரு ஞீ தனும, சாபாசயனத்தையுடைய விஷ்ணு மூர்த்தியானவர் சுவாமியை யலஙகாரஞ்செய்யத தொடஙகிக் கஙகைமுதலிய புண்ணிய தீர்த்தஙகளா லபிடேசஞ்செய்து, திருவொறறூண்ட சாததி விலமதிககபபடாத பீதாமபரங களை யரையின்மேல யுடுததுப பிதாவாகிய சிவபிரான சநதிர னைத தரிததார பிளளையாகிய குமாரககடவுள சூரியனைத் தரிததாரென்று சொல்லும்படியாகப பொனனுலாகிய மணி களழுததிய கிரீடததைசசூட்டிப பனனவரை யெரிபபதற் குத் திறநத நெறறிககணைப்போலவே சிநதூரததினுலே திலத மிட்டுச் சநதிரனுகிய முகததைச் சேரநத பனனிரண்டு செவி களிலும பனனிரணடு சூரியர்களைப்போலும் மாணிககக் குழை களைப்பூட்டித தேவாகளை யிரகூஷிதத தமது புகழெழுநதது போல எலலாருஙகாண முத்துமாலிகையை மார்பின்மேல சாத் திப பனனிருபுயஙகளிலும கரஙகளிலும வாகுவலயஙகளுங சஙகணஙகளும பிரகாசிக்கபபுனைநது எல்லா வேதங்களுந் திரணடுவநது முறையிட்டு முழஙகினுறபோலச சபதிக்கி ன்ற பாதசரஙகளைத திருவடிகளின்மேல பூட்டி, இனனும பல் பல ஆபரணஙகளும புனைநது செம்பொற பட்டினுலாகிய உத்தரீயமுநதரிதது வேதஙகளுந தீணடுதறகரிய திருமே னியின்மேல தமது கரஙகளைப்பொறுத்து பெருமகிழ்ச்சியுடனே அலஙகாரஞ் செய்தார். இநத மணககோலமாகிய சிஙகாரத்தை யடைந திருநத குமாரககடவுளிரணடு திருவடிகளையுந தரிசிப்பு தறகு இமையாத கணகளைப்படைத்த தேவர்களே மிககபயனடை நதவர். அதன்மேல் எழுசமுத்திரஞ் சூழ்நத பூமிதேவி

யின்றவப் பயனுகிய பரங்கிரியையுடைய குமாரக்கடவுளை யடிபணிநது பிரமன் முதலானவர்கள் சுபமுகூர்த்தம்வநது விட்டபடியால் மணவறைக் கெழுநதருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பலமணிகளாலே செய்த ஆசனததைவிட்டுக கீழேயிறஙகிப பிரமதேவன ஒகையைபபிடித்துக் குமாரக கடவுளெழுநதுவர, விஷ்ணுமுதலிய தேவாகள நெருஙகித துதித்துச சூழ்நதார்கள். அபபோது ஆதிசேடனும் நெளிக் குமபடி நடனஞ்செய்யு மயிலவாகனததிலேறிக் குமாரக்கட வுள் புறப்பட்டுத தேவர்கள புட்பமாரிபொழியத தேவதுந துபி முழஙக அணடகடாக முடைநததென்று சொல்லத் திமிலை, சல்லரி, பமபை, படகம், பேரியம, திணடிமம, தமு க்கு முதலாகிய பதினெட்டுவித வாத்தியமொலிககமூன்றும் பிறைபோலும பறகளையுடைய பூதவீரர்கள் நடனஞ் செய் யத தேவபபெண்கள் மஙகலவாழ்த்ததுககூறந தாமரை மலர் போனற கண்களையுடைய விஷ்ணுமுதலிய தேவர்முனிவர் சித்தர்கள்நெருஙகி நாறபுறததுஞ் சூழநதுவர நக்ஷத்திரக் கூட்டங்களை வெணபொறிகளபோல நினைத்துக் கொறிபப தற்கெண்ணி வாய்பிளததல்போலும மேல்நோக்கி வாய்பிள ந்து கூவுகின்ற கோழிக்கொடி முன்னேசெல்ல, அரமபை முதலான தேவமாதர் நடிததுவர வநது மணவறையினுள் ளேபுகுநது மயில்வாகனத்தை விட்டிறஙகினுர். உடனே யிநதிராணிவநது துதித்துச் சரசுவதிகொண்டுவநது கொடு த்த பாலைவாங்கி மருகனுகிய குமாரக்கடவுளது திருவடிகளை விளக்கி வெண்பட்டு வஸ்திரத்தாலே துடைத்துபபுட்பமாலை யணிநது வாசனைதங்கிய தூபங்கொடுத்துத் தீபத்தட்டி

ஞ்சேல சுற்றித் தனது உள்ளததிலே நாணமீக்கூரச் சென்றாள். அதன்மேல் குமாரக்கடவுள் மணவறையினடுவே நவ மணிகளாற் செய்துவைத்திருக்கும பொன்மயமான ஆசனத்தி லெழுநதருளியிருந்து பக்கததிலே விஷ்ணு முதலானவர்களுக் கிருப்புக்கொடுத்தருளினா. மற்றைத் தேவர்கள் எல்லாருங கைகுவிதது வாய்புதைதது அங்கஙகே நின்றார்கள். இபபடி நடக்கின்ற மணககோலததைப பார்க்கத் தநதையாகிய சிவபிரானையுந தாயாகிய வுமாதேவியையும அழைததுவருமபடி குமாரககடவுள் கட்டளையிடச் சிவ கணஙகள சென்று அவ் விருவருக்குந தெரியபபடுதத உடனே யவாகள இருவரு மகிழ்சசியுடனே ரததிலேறிக் கொண்டு வநது திருபபரஙகிரியைச் சேர்தலும, முருகக கடவு ளெதிர்கொணடு தேவர்கள் ஆரவாரத்துடனே அழைதது வநது வணஙகி யருசசனைசெய்து பனனிரண்டு விழிகளுங குளிருமபடி பார்ததுப் பாரத்துக் களித்துத தாய் தநதய ரிருவரையும் அவரவருக்க கமைத்த சிமமாசனத்திலே யெழுநதருளச்செய்து நின்றார். இபபடி நின்ற குமாரக்கடவுளை யிருவரு மெடுத்துத் தழுவி யுச்சிமோந்து கையைப் பிடிதது மணவறையிலே யிருததினர். தேவர்கள் முனிவர்களெல்லாருஞ சிவபிரானையும உமாதேவியையும் பூசித்துத் துதித்து நின்றார்கள். அதன்மேல் முகூர்த்தங்குறித்த ஓரை வருதலும் பிரமதேவனெழுந்து வளைநத பிறை வடிவமாகிய வொற்றைக் கொமபைத் தாங்கிய யானைமுகக் கடவுளுக்குத் தேங்காயுடைதது வாழைப்பழஞ் சர்க்கரை முதலியவற்றோடு படைத்து அவரைச் சுகந்த மலர்களா லருச்

சித்து வணங்கி வேதங்களிலே கூறிய மந்திரங்க ளெடுத்துச் சொல்லி யோமகுண்டத்திலே யக்கினி வளர்த்துப் பசுவின் நெய் தருப்பை சமித்து முதலியவற்றா லாகுதி பலபல செய்து வருஞ் சமயத்திலே, எல்லாவாத்தியங்களுங் கடல் போலச் சப்திக்க, விஷ்ணு தேவேந்திரனை நோக்கிக் குளிர்ந்த குயில்போலும் வார்த்தையினை யுடையுந் தெய்வயானையை விரைந்து அழைத்துவாவென்று கூறுதலும், உடனே யவன் சென்று தன் புத்திரியை, எனக்கண்ணே! யமுதமே! இராச அன்னமே! தவமே! தவப்பேறே! பச்சிளங்கொடியே! பசுங்கிளியே! குலவிளக்கே! நடைகற்ற சித்திரமே! என இவ்விதமாகிய அருமை வார்த்தைகளால் மணஞ்செய்தற்கு வாவென்று அழைத்தான். அதுகேட்ட தெய்வயானை மன மகிழ்ந்து தனபாரங்களா லிளைத்த சிற்றிடை நோவ மேகலாபரண மொலிக்க மிருதுவாகப் பதம் பெயர்த்தெழுந்து நடந்தாள். அப்போது பிரமலோகத்தார்க ளெல்லாரும் வெள்ளிய பட்டு வஸ்திரங்களை வீசி யார்த்து வரவும், வைகுந்த லோகத்துப் பெண்கள் மங்கலவாழ்த்துக் கூறி வரவும், இயக்க சாதிப் பெண்கள் சாமரை வீசிவரவும், சந்திரமண்டலத்திலுஞ் சூரியமண்டலத்திலுமுள்ள பெண்கள் குடைப் பிடித்து வரவும், சூரரமகளிர் வெற்றிலைப் பையைத் தாங்கி வெற்றிலைச்சுருள் மடித்துக்கொடுத்து முன் வரவும், அக்கினி லோகத்திலுள்ள பெண்கள் நெருப்புப் பந்தங்க ளேந்தி வரவும், நக்ஷத்திரமண்டலத்திலுள்ள மாதர்கள் வாய்துடைக்கும் வஸ்திரங்களைக் கையிலே தாங்கி வரவும், வருணனுலகத்து மங்கையர்கள் கங்கைநீர் புகட்டிய மணிகள் பதித்த

பொற்கலசங்க ளேந்தி வரவும், வாயுலோகத்து மாதர்கள் விசித்திர பணிவிடை செய்துகொண்டு வரவும், நிருதி யுலகத்து மாதர்கள் பொன்னாலாகிய படிக்கங்கள் சுமந்துவரவும், யமனுலகத்துப் பெண்கள் ஆலத்தியெடுத்து வரவும், கந்தருவ வுலகத்து நங்கையர் வீணை பாடிக்கொண்டு வரவும், இன்னும் மற்றுமுள்ள மாதர்கள் மிருதுவான பட்டாடைகளைப் பூமியிலே முன்னே விரித்து அதன்மேலே குளிர்ந்த சுகந்த புட்பங்களைத் தூவிப் பரப்பிக்கொண்டு வரவும், உலகநாயகி வந்தாள், பெண்கள் சிகாமணி வந்தாளென்று திருச்சின்னங்கள் முழங்கி வரவும், கூட்டத்தை விலக்குதற்காகத் தேவர்கள் மணிமகுடத்தி லடிக்கும் பிரம்புகள் முழக்க மிகுந்தொலிக்கவும், தேனே! யமுதே! கிளியே! மயிலே! குயிலே! கனியே! கற்கண்டே! என்னும் அருமையாகிய வுபசாரவார்த்தைகளைக் கட்டியங் கூறுவார் சொல்லி வரவும் வந்து எங்களை யடிமைகொள்ளுகின்ற முருகக்கடவுளுக்கு மனமகிழ்ச்சியுண்டாக மணவறையுள்ளே புகுந்து அங்கே யெழுந்தருளியிருக்கும் சிவபிரானையும் உமாதேவியாரையும் அஞ்சலித்து வலஞ்சுற்றி யொருபுற மொதுங்கி நிற்க, அவ்விருவரும் மருமகளாகிய தெய்வயானையை நோக்கிச் சுமங்கலம் பெறுவையென்று ஆசீர்வதித்துக் குமாரக்கடவுள் பக்கத்திலே யிருக்கும்படி கட்டளையிட்டார். அப்படியே வந்து நாணத்தோடு தலைகவிழ்ந்திருந்து குமாரக்கடவுளது திருவழகை யிரண்டு கடைக்கண்களாலும் பார்த்துப் பார்த்துப் புன்முறுவ லரும்பப் பெருமகிழ்ச்சியுற் றிருந்தனள். குமாரக்கடவுளுந் தெய்வயானையினுடைய பேரழகைப் பன்னிர

ண்டு நேத்திரங்களாலுங் கருணைவெள்ள மூற்றிருந்தொழு கப் பார்த்துக் களிப்படைந்தார். அந்தப் பெருங்கருணை வெள்ளத்திலே யொரு சிறு திவலையை விரும்பித்தான் குமாரக் கடவுள் கீர்த்தியை விரித்துச் சொல்லிக்கொண் டிருக்கிறேனென்று சூதமுனிவர் சொல்லினர். சவுனகாதிமுனிவரது கேட்டுச் சிரசின்மேற் கைகுவித்து மேல் நடந்த கதையைச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார். மேற்கூறியவாறு ஒருவரை யொருவர் பார்த்து மனங் களித்திருக்கும்போது பிரமதேவன் இந்திராணியை வரவழைத்துக் குமாரக்கடவுள் திருவடியைப் விளக்கிச் சோடசோபசாரத்தாற் பூசை செய்யச்சொல்லி மணமகனையு மணமகளையு மொருவர் கைவிரலை யொருவர் கைவிரல் பற்றும்படி செய்வித்துத் தம்மை வணங்குவோருக்கும், தோத்திரஞ்செய்வோருக்கும், ஒரு பூவினாலேனும் பூசை செய்வோருக்கும் தருமார்த்தகாம மோக்ஷங்களைக் கொடுத்தருளுங் குமாரக்கடவுள் இந்திரனு மவன் மனைவியுந் தாரையாக வொழுக்கும் தான சலத்தை யேற்றுக்கொள்ளச் செய்தான். உலகத்தாரிம்முறைமையை வழுவாது நடத்திவரத் தாரை நீரை வாங்கிய குமாரக்கடவுளது திருவருட்பேற்றை யடைந்த தேவேந்திரன் மனக்களிப்பை யார் சொல்ல வல்லவர்? அப்பால் பிரமதேவன் மங்கலநாணாகிய திருமங்கிலியத்தையெடுத்துக் கந்தக்கடவுள் திருக்கரத்திலே கொடுக்க அவர் வாங்கிப் புன்னகைசெய்து தெய்வயானை கழுத்திலே தாரணஞ்செய்தார் அந்தச் சமயம மணக்கோலத்தைத் தேவர் முனிவர் முதலானோர் பூதகணங்கள் தரிசித்து ஆடவாரித்துத் துதித்தார்.

துந்துபி வாத்தியங்கள் முழங்கின; திசைதோறும் புட்பமாரி
பொழிந்தார்; அதன்மேல் விஷ்ணு பிரமதேவன் வேண்டு
கோளின்படி மணஞ்செய்த தலைவனுந் தலைவியுமெழுந்து
முளைபடாலிகை, தீபம், பூரணகும்பம், அரசாணை வைத்திரு
ந்ததைப பார்வையிட்டு ஓமஞ்செய்த அக்கினியை மூன்று
பிரதக்ஷணம வந்தார்கள். அதன்மேல் வடதிசையில் வந்து
நின்று மங்கலம் புனைந்துவைத்த அம்மிமேலே குமாரக்கட
வுள் அருந்ததியை நோக்கிக் கருணைசெய்து மீண்டு தெய்வ
யானை பாதத்தை யெடுத்துவைத்து மனைவியுடனே வந்து
சிவபிரானையும பார்வதிதேவியையும் வணங்கி நின்றார். உட
னே அவரிருவரும மணமகனுக்கும் மணமகளுக்கும் ஆசி
சொல்லி மனங்களித்தனர். அப்போது தேவேந்திரன் வந்து
மருமகனாகிய குமாரக்கடவுளை யானைமேலும் மகளாகிய
தெய்வயானையைத் தந்தச்சிவிகைமேலு மேற்றி வலமாகப்
பட்டணப்பிரவேசஞ் செய்வித்துத் தன் சுற்ற முழுவதுஞ்
சீதனமாக இருவருக்குங கொடுததான். அப்பொழுது தேவ
ர்க ளாகாயததினின்று பூமழைபொழிய மரீயனுதியோர் மங்
கலவாழ்த்துக் கூறி நான்கு பக்கமுஞ் சூழ்ந்துவரத் தாய்தந்
தையர்க ளிருக்கு மிடத்துக்கு வந்து மணவறையினுள்ளே
தலைவனும் தலைவியும் வீற்றிருந்தனர். இருந்தபோது இலக்
குமி முதலிய மாதர்கள் சோபனங் கூறினர். பிரமன்விஷ்ணு
முதலியவர்கள் பசிய அறுகும் அட்சதையுங்கொண்டு வேத
மந்திரஞ் சொல்லித் தூவிப் பூசனைசெய்து பலவாறு தோத்
திரம் புகன்று மணக்கோலத்தைத் தரிசித்து நின்றார்கள்.
அவர்களை நோக்கித் திருமுடி யசைத்துக் குறுமுரல்கொ
ண்டு முருகக்கடவு ளவரவருக்கேற்ற வரங்களைக் கொடுத்
தருளித் தமது கோயில் சென்று தெய்வயானையுடனே வீற்
றிருந்து மன மகிழ்ந்து இன்றுபோ லென்று மிந்த மணக்
கோலங் காண வெற்றிபொருந்திய இந்தத் திருப்பரங்கிரி

யிலே யுறையின்களென்று கட்டளையிட்டனர். அவருக்கு இடப்பாகத்திலே சிவபிரானும் பார்வதியு மெழுந்தருளியிருந்தார்கள். யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளும தெய்வயானை நாணுவனென் றெண்ணி யொரு புறத்திலே யொதுங்கி யிருந்தார். மற்றைத் தேவர்களு மவரவர்களுக் குரிய இடந்தோறு மிருந்தார்கள். சரசுவதி யிலக்குமி முதலிய மாதர்களு மொருபுற மிருந்தார்கள். இந்தவித மெல்லாருந் தம்முடைய நிரதிய மங்களசொரூபத்தைப் பார்த்துக் களிகூர்ந்திருக்க முருகக்கடவுள் திருப்பரங்கிரியிலே யெழுந்தருளியிருந்து மானிடர்கள்செய்த தவப்பயனு லவர்களுக்குக் காட்சி கொடுத்து மகிழ்ந்திருந்தனர்.

இந்தத் திருப்பரங்கிரியின் புராண கதையைச் சிவாலயத்திலாவது பூஞ்சோலையிலாவது மடங்களிலாவது நதிக்கரையிலாவது பரிசுத்தமுள்ள கிரகங்களிலாவது தங்கியிருந்து சொன்னவரும் அதைக் கேட்டவரும வேண்டிய பொருளைப் பெற்று இம்மை யின்பத்தை யடைந்து மறுமையிலே மோக்ஷத்தையு மடைவாரென்று சூதமாமுனிவர் சவுனகாதி முனிவருக்குச் சொல்லி யருளினர்.

பிராமணர்களோதும் வேதங்களுந் தழைத்தோங்குக. அதனு லரசர்கள் நீதிச்செங்கோல் செலுத்துக. முருகக்கடவுள் சிவபிரானுடைய ஷடாக்ஷரமந்திரமும் பஞ்சாக்ஷரமந்திரமும் பொருளாக விளங்குக. அவரடியார்கள் களிப்படைந்து விளங்குக.

பதினேராவது திருக்கலியாணச்சருக்கம் முற்றிற்று.

திருப்பரங்கிரிப்புராணவசனம் முற்றுப்பெற்றது.

சிவபிரான் திருவடிவாழ்க.